
சிந்து வெளி எழுத்துமுறை
தொடரும் புதிர்

# உலக தமிழோசை

சர்வதேச காலாண்டு தமிழ் சஞ்சிகை நவம்பர் 2002
இதழ் 3



## கண்காணிப்புக் குழுவை மடக்கும் சந்திரிகா

சாதனைகளை முறியடிக்கும்
சாதனை வீரன்


Niru BRAND®
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
Niru (Europe) Ltd.,
16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT U.K.
Tel:208-640-8228 Fax: 208-640-8423
E-mail: niru@supanet.com
நிரு பிராண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
Free Spoon Inside

# உள்ளே...




குழுமேல் குழு! கண்காணிப்புக் குழுவை மடக்கும் சந்திரிகா





வணிகம் செய்திடுவோம் இந்தியா




சிந்துவெளி எழுத்துமுறை தொடரும் புதிர்




'கன்னத்தில் முத்தமிட்டால்' தமிழ் யாருடையது




சாதனைகளை முறியடிக்கும் சாதனை வீரன்




போர் ஆட்டம்


ஊரும் உலகமும் 04

ஒவ்வாமை அதிகரிப்பு 06

சீனாவில் 'பல்' சிக்கல் 06

பருமனாகும் பிள்ளைகள் 07

அடக்கு அல்லது அடங்கிப்போகும் சுகாதார வாழ்வு 08

எரிக்காமல் எரிக்கும் உலகின் எரிபொருள் 10

கோப்பித் தோட்டங்களின் சோகம் 14

அறிந்து கொள்வோம் அணு 16

முன்னோக்கி சுற்றும் கிரகங்கள் எவ்வாறு பின்னோக்கி வருகிறது? 18

பேச்சுக்களால் பொருளாதாரத்தில் விறுவிறுப்பு 22

வறுமையின் நிறம் தமிழ் 23

அருகிவரும் பொன்னிறம் 26

பாக்குநீரிணையில் ராமர் அணை 26

சிம்ரனுக்கு வயது என்ன 32

அமெரிக்கத் தொலைக்காட்சியில் சிறுபான்மையினருக்கு இடமில்லை 33

சிம்பியூட்டர் - ஏழைகளுக்கான கம்பியூட்டர் 34

கவிதைகள் 42

எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின் 44

ஆழ்கடல் நடுவே அகதிகளாக... 46

நவீன உலகின் கார் 50

குறுக்கு எழுத்துப் போட்டி 53

யாழ் மடல் 56


Published by Ulakathamiloszai Publications - Canada

உலகத் தமிழோசை

தமிழர்களுக்கான சர்வதேச காலாண்டு சஞ்சிகை
இதழ் - 3, நவம்பர் 2002

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்

பிரதம ஆசிரியர்: இ. செந்தில்நாதன்
editor@ulakathamiloszai.com

ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்

ஆலோசகர் குழு: சிவ ஞானநாயகன்
சி. விமலநாதன்
எஸ்.கே. தீசன்
இ. ஹரன்
பரம். ஜி

வடிவமைப்பு: டிஜி வரைகலை அமையம்

எழுத்தமைப்பு உதவி: சத்தியரூபி சபாரத்தினம்

வெளியூர் தொடர்பாளர்கள்: இ. செல்வநாதன் (யாழ்ப்பாணம் - 94.21.2928)
ச. இந்திரன் (யாழ்ப்பாணம் - 94.21.3528)
செ. மகேந்திரன் (மட்டக்களப்பு - 94.65.40619)
பரதன் கந்தசாமி (கல்முனை - 94.67.29903)
கே. ராஜேஷ் (சென்னை, இந்தியா - 91.44.486.1875)
ந. கருணாகரன் (அவுஸ்திரேலியா -61.2.98.964014)
இ. கந்தசாமி (பிரான்ஸ் -33.1.4685.0127)
மு. பற்குணராஜா (ஜேர்மனி - 49.30.4976.6526)
எஸ். மகாலிங்கம் (மாலி) (இங்கிலாந்து - 44.208.422.5541)
சூரி வடிவேல் (இங்கிலாந்து - 44.208.641.4771)
ம. செல்வகுமார் (நெதர்லாந்து - 31.76.541.2345)
சு. ரவீந்திரகுமார் (நோர்வே - 47.702.1608)
எஸ். வவிச்சந்திரன் (டென்மார்க் - 45.978.555.88)
பி. பி. குமார் (அமெரிக்கா - 1.978.447.1550)
ஐ. நந்தன் (ஒட்டாவா, கனடா - 1.613.823.6667)
எஸ். கணேஷ் (வன்கூவர் 1.604.931.4707)

விநியோகம்: செ. விஜயபாலன் - 416.804.9555
செ. கண்ணன் - 416.282.8059
(விளம்பரம் பப்ளிகேஷன்ஸ், கனடா)

க. மகேசன்
(முருகன் புத்தகசாலை, கனடா - 416.285.9118)

குமார்
(மொன்றியல், கனடா 514.831.7996)

நிரு ஐரோப்பா லிமிட்டட்
(இலண்டன் -208.640.8228)

பூபாலசிங்கம் புத்தகசாலை
(கொழும்பு - 504.266)

ந. கருணாகரன்
(அவுஸ்திரேலியா -2.98.964014)

க. சதாநேசன்
(நியூசிலாந்து - 649.528.9396)

முகவரி: P.O.Box 37527, 31 Tapscott Rd.
Toronto, ON M1B 5P9, Canada

தொலைபேசி: 416.282.8059
தொலைநகல்: 416.282.4978
மின்அஞ்சல்: info@ulakathamiloszai.com
இணையத்தளம்: www.ulakathamiloszai.com

விலை:

| | |
|---|---|
| Canada | Can $ 2.50 |
| U.S.A. | US $ 2.00 |
| Europe | € 2.00 |
| Sri Lanka | Rs. 50.00 |
| India | Rs. 25.00 |
| Australia | $ 2.50 |
| New Zealand | $ 2.50 |



பதிப்புரிமை: 2002 உலகத்தமிழோசை பப்ளிகேஷன்ஸ்.
உலகத் தமிழோசையில் வெளிவரும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Copyright:** 2002 Ulakathamilozai Publications.
Reproduction in whole or in part without written permission of the Editor is prohibited.
Ulakathamiloszai and Design are protected through trademark registration in Canada.


உலகத்தமிழோசை தொடர்பான ஆக்கங்கள், கருத்துக்களை வரவேற்கின்றோம்

# தமிழோசையின் நாதம்

*இன்னுமொரு உலகத் தமிழோசை இதழுடன் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.*

*இன்று இலங்கைத் தமிழர் அனைவரினதும் நெஞ்சங்களில் எழுந்து நிற்கும் ஒரு கேள்வி தற்போது நடைபெறும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தை பற்றியதென்றால் அது மிகையாகாது. பேச்சுக்களின் முடிவு சமாதானமா, இல்லையா என்பதே எல்லோரினதும் கேள்வி. இந்தக் கேள்விக்கு விடைகாண முயல்கிறது எமது தலைப்புக் கட்டுரை.*

*இதனை விட, சமாதான சூழலின் பின்னணியில் இலங்கையின் பொருளாதாரம், (நில) எண்ணெய் அரசியல், சிம்பியூட்டரின் பயன்பாடு போன்ற கட்டுரைகளும் இவ்விதழ் மூலம் உங்களை வந்தடைகின்றன.*

*'நினைவுகள் அழிவதில்லை', 'எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின்' என்ற எமது இரு கட்டுரைப் போட்டிகளின் முடிவுகளும் வெற்றி பெற்றோரின் கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. வெற்றி பெற்ற வாசகர்களுக்கும் இதில் பங்குபற்றிய எல்லோருக்கும் எமது வாழ்த்துக்கள்!*

*தமிழர் வாழாத நாடில்லை என்றாகிவிட்ட இந்நாளில், எவ்வாறு நாம் வாழும் நாடுகளுக்கிடையே வணிகம் செய்வது என்பது பற்றி உங்களுக்கு இவ்விதழ் முதல் விளக்கவுள்ளதாக உறுதியளித்திருந்தோம். அதற்கிணங்க இந்தியாவுடன் வணிகம் செய்வது பற்றிய விசேட கட்டுரை ஒன்று இவ்விதழில் பிரசுரமாகிறது.*

*'உலகத் தமிழோசையின்' இந்த மூன்றாம் இதழ் மீண்டும் உலகெங்கும் வாழும் தமிழரை சென்றடைந்து அவர்களின் உள்ளங்களை நிறைவடையச் செய்யும் என்பது எமது நம்பிக்கை.*

*பதிப்பாளர்.*

*அட்டையில் விடுதலையான விடுதலைப் புலிகள் உறுப்பினரொருவரை சகபோராளி கட்டித் தழுவுகிறார்.*

*Photo- Reuters*

# நீங்கள் தந்தவை



புலம்பெயர்ந்த அகதியாக வாழும் நான் உலகத் தமிழோசைக்கு எழுதிக்கொள்வது, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமூக நிகழ்வுகளின் குறிப்புகளை மிகவும் சிறப்பாக இச்சஞ்சிகை தருகின்றது. அத்தோடு ஈழத்துப் பிரச்சினைகள், உலகளாவிய பிரச்சி-னைகள், இன்றைய புலம்பெயர்ந்த அகதிகளின் நிலைமைகள் தமிழர்களின் பண்பாடு, கலா-சாரம், மொழி என்பவற்றை தெளிவாக தமிழ்மொழியில் தருகின்றது. எதிர்காலங்களில் இவ்விதழ் மேலும் சூடு, சுவை, சுவாரசியம் கொண்டதாக அமைய வேண்டும்.

இனிவரும் சஞ்சிகையில் உலகை உலுக்கிய ஓசாமா பின்லேடனின் வாழ்க்கை வரலாறை எழுதமுடியுமா?

பாஸ்கரன்
ரொறொன்ரோ, கனடா.

********

முதல் இரண்டு இதழ்களும் வாசித்தோம். நல்ல முயற்சி. ஒரு கவலையான விடயம். உங்கள் சஞ்சிகையில் வரும் படைப்புகள் புலம் பெயர்ந்தவர்களாலேயே படைக்கப்பட்டவை. இலங்கை, இந்திய படைப்புகளிற்கும் இடம் கொடுக்கவும்.

இ. இராஜேஸ்வரன்
அம்பாறை, இலங்கை

********

ஆங்கில மொழியிலும் ஒரு பகுதி வெளி-யிட்டால், ஆங்கிலம் வாசிக்கக் கூடியவர்களி-ற்கு உதவியாக இருக்கும்.

ஐ. நந்தன்
மிசிசாகா, கனடா

********

இன்று ஒரு நல்ல நாள். இந்து -சைவ ஆண்டு முதல் நாள் தமிழர்கள் மதவழிபாடு நாளாகக் கொண்டாடும் சித்திரை முதல் நாள். இந்த நன்நாளில் (13 ஏப்ரல் 2002) உங்கள் சஞ்சிகை வெளிவருகின்றது, நல்லது.

தமிழ்ப் படைப்புக்களை, உலகம் முழுவதிலும் வெளிக் கொண்டு வருவதன் மூலம் தமிழ் வாழ வழி செய்யும் உலகத் தமிழோசை-யையும், உங்கள் ஸ்தாபனத்தையும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் பாராட்டுகின்றது; வரவேற்கின்றது.

எமது இயக்கத்தின் ஆசிகள் உங்கள் அனைவருக்கும் உண்டு.

வாழ்க தமிழ்
வளர்க உங்கள் தமிழ் பணி

வேல் வேலுப்பிள்ளை
தலைவர்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

********

உங்களது இரண்டாவது இதழ் ஒரு நண்பர் மூலமாகப் பெற்று வாசித்தேன். புலம்பெயர்ந்-தோர் மத்தியில் இத்தகையதொரு சஞ்சிகை வெளியிடுவதற்காக உங்களை வாழ்த்துகிறேன்.

உங்களது அகதிகள் சம்பந்தமான தலைப்புக் கட்டுரையும், பிரான்ஸ் சம்பந்தமான கட்டுரை-யும் மிகவும் நன்றாக இருந்தன. நீங்கள் கனடாவில் வாழ்ந்தாலும் ஐரோப்பியத் தமிழரையும் மறந்து விடவில்லை என்பதை இது காட்டுகிறது.

சி. தர்மலிங்கம், ஜேர்மனி

********

கனேடிய மண்ணில் த மிழ் மொழியில் கட்டுரை, கவிதை, விஞ்ஞானம், சமூகவியல் ஆகியவற்றைத் தாங்கி வெளியுலகுக்கு நல்க அடிஎடுத்து வைத்துள்ள உலகத் தமிழோசை இதழின் முதலாவது மலர் வெளியீட்டை வாழ்த்துகின்றோம்!

"உலகத் தமிழோசையே நிலைத்து வாழி"

புதுப்பொலிவுடனும் இளமை எழிலுடனும் உலகத் தமிழோசை என்றும் இலங்கி உலகெலாம் ஒலி பரப்ப வாழ்த்துகின்றோம்.

நன்றி

த. சிவபாலு, எம். ஏ.

எமது இரண்டாவது இதழும் முதலாவது இதழைப் போல் பல ஆழமான கேள்விகளை எழுப்பத் தவறவில்லை.

எனினும் முதல் இதழின் அட்டைப் படத்தில் பிரசுரமாகிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் புகைப்படம் எழுப்பிய கேள்விகளைப் போலல்லாது, எமது இரண்டாவது இதழின் அட்டைப்படமும் அட்டைப் படக் கட்டுரையும் சாதகமான கேள்விகள் / கருத்துக்களையே அதிக அளவில் எழுப்பியிருந்தன.

இச் சஞ்சிகை கனடாவிலிருந்து பிரசுரமானா-லும், தனது நோக்கத்திற்கேற்ப உலகனைத்-தும் வாழும் தமிழ் மக்களின் நலன்களைக் கவனத்திற் கொண்டுள்ளதை பல வாசகர்கள் பாராட்டி எழுதியிருந்தனர்.

அதேவேளை, இத்தகையதொரு சஞ்சிகையில் ஒரு சினிமா நடிகருக்கென ஒரு முழுப் பக்கத்தை ஒதுக்க வேண்டுமா எனவும் பலர் கேள்வி எழுப்பியிருந்தனர். எமது வாழ்க்கை-யுடன் சினிமா ஒன்றிணைந்து விட்டது. திரைப் படங்களின் ஒளி நாடாக்களும், தமிழ்த் திரைப்படம் சம்பந்தமான சஞ்சிகைகளின் அமோக விற்பனையும் இதற்கு அத்தாட்சி.




தமிழருக்குத் தேவையான தகவல்களை மட்டுமன்றி, தமிழருக்கு விருப்பமான தகவல்க-ளையும் வழங்குவதே எமது நோக்கமாகை-யாலேயே எம்மால் இயன்றவரை அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய சஞ்சிகையை உங்களுக்கு வழங்குகின்றோம்.




## மறைந்தும் மறையாத ஒசாமா

*(ரியாட்)*



உலகின் மிகப் பலம் வாய்ந்த வல்லரசின் அதி நவீன இராணுவத் தாக்குதல்கள், புலனாய்வுத்துறை மற்றும் விசேட அதிரடிப்படைத் தாக்குதல்கள் இவை எல்லாவற்றினாலும் ஒசாமா பின் லாடனின் அல்கேடா அமைப்பை நிர்மூலமாக்க முடியவில்லை போல்தான் தெரிகிறது.

பின்லாடன் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பது மர்மமாக இருக்கும் வேளையில் அவரின் இஸ்லாமிய தீவிரவாத இயக்கமான அல்கேடாவின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டது என மேலை நாடுகள் கருதும் இவ் வேளையில், ஒக்ரோபர் ஆரம்பத்தில் குவைத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு சிப்பாயும், தாக்குதலை நடத்திய இருவரும் கொல்லப்பட்டனர்.

தாக்குதலை நடத்திய ஒருவரான அகமட் இப்ராகிம் அல் கண்டாரி, குவெய்த் நாட்டின் அல்-கேடா பேச்சாளரான அபுகைத்தின் 'மாணவர்' எனவும், 'ஷேக் ஒசாமாவிற்கு" தாக்குதலை சமர்ப்பணம் செய்வதாக அவர் கூறியதாகவும் அரபியப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளத.

இதே வேளை, யேமன் *(Yemen)* நாட்டுக் கரையில் ஒக்ரோபர் ஆரம்பத்தில் பிரெஞ்சு எண்ணெய் தாங்கிக் கப்பலான *Limburg* மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் அல்கேடாவுக்குப் பங்குண்டெனஅல் 'அல் ஹயாத்' என்ற இப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

## எட்டாக் கனியும் எட்டியது

*(ஒஸ்லோ)*

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டருக்கு இவ்வருடத்தின் சமாதானத்துக்கான நோபல் பரிசை வழங்க எடுக்கப்பட்ட முடிவு புதுமையானதொன்றல்ல. இச்செய்தியில் புதினமொன்று உண்டென்றால் அது திரு. காட்டருக்கு இப்பொழுதாவது பெருமைக்குரிய இவ்விருதை வழங்க நோர்வேயின் சமாதானத்திற்கான நோபல் பரிசுக் குழு தீர்மானித்திருப்பதுதான்.

செல்வாக்கை இழந்த நிலையில் தமது பதவியிலிருந்து தோற்கடிக்கப்பட்ட திரு. கார்ட்டர், தோல்விக்குப் பிறகு சோர்ந்து போய்விடவில்லை. மாறாக தமது கார்ட்டர் அமைப்பினூடு தமது சமூகப் பணிகளைத் தொடர்ந்தார்.

ஹேய்ட்டியிலும், நிக்கரகுவாவிலும் ஜனநாயகத் தேர்தல்களுக்கு வழி கோலியமை, தென்கொரியாவுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வட கொரியாவை தூண்டியமை, மத்திய கிழக்கில் சமாதானம் நிலவ முயற்சித்தமை... இவ்வாறு இவரது சமூக, சமாதான பணிகளின் பட்டியல் நீண்டது.

தமது அயராத உழைப்பு காரணமாக தமக்கென சர்வதேச ரீதியில் ஒரு மதிப்பை தேடிக்கொண்டார் திரு. கார்ட்டர். எனினும் நோபல் சமாதான பரிசு மட்டும் இவரது கைகளுக்கு எட்டாமல் இருந்தது.



தமது ஆட்சிக் காலத்தில் இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையிலான கேம்ப் டேவிட் சமாதான ஒப்பந்தத்திற்கு வழிகோலியதற்காகவும் ஆட்சிக் காலத்தின் பின்னர் தமது சமாதான பணிகளுக்காகவும் அவர் பலமுறை நோபல் சமாதான பரிசிற்காக சிபார்சு செய்யப்பட்டிருந்தார். எனினும் பரிசென்னவோ இதுவரை கிட்டவில்லை.

## பெருகும் எய்ட்ஸ்

*(ஜெனிவா)*




தென்கிழக்காசியாவில் ஊசி மூலம் போதைப் பொருள் பாவிப்போரிடையே எய்ட்ஸ் நோய் வேகமாகப் பரவி வருவதாக மருத்துவ அறிஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தற்போது 6.6 மில்லியன் எய்ட்ஸ் நோயாளிகள் இப்பிராந்தியத்தில் இருப்பதாகவும், இவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் மட்டும் 180,000 க்கு மேற்பட்ட புதிய நோயாளிகள் பதியப்பட்டிருப்பதாக ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள உலக சுகாதார அமைப்பு *(WHO)* தெரிவித்துள்ளது. எனினும் உண்மையான தொகை இதனிலும் அதிகமாக இருக்கும் என அஞ்சப்படுகிறது. ஹெரோயின் போன்ற பாரம்பரிய போதைவஸ்தும், மெதாம்பிடமின் *(Methamphetamine)* போன்ற 'நவீன செயற்கை முறையில் உருவாக்கப்படும் போதை வஸ்துக்களின் பாவனை அதிகரிப்பும் எய்ட்ஸ் வேகமாக பரவ முக்கிய காரணிகள் என இவ்வமைப்பின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் 7,300 எய்ட்ஸ் நோயாளிகள் இருப்பதாக *WHO* தரவுகள் தெரிவிக்கின்றன.

## மறையும் கடல்

*(தாஷ்கென்ற்)*

உலகம் வெப்பமயமாக்கப்படுவதால் பனி உருகி கடல் உயரும் அபாயம் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் உலகின் ஒரு மூலையில் ஒரு கடல் வற்றிக் கொண்டு வருகிறது. மத்திய ஆசியாவிலுள்ள ஆரல் என்ற உள்நாட்டுக் கடலே இவ்வாறு வற்றி மறைந்து போகும் நிலையில் இருக்கிறது.



உஸ்பெக்கிஸ்தானுக்கும், கஸாக்ஸ்தானுக்கும் இடையில் காணப்படும் ஆரல் கடல் ஒரு காலத்தில் உலகின் நான்காவது பெரிய உள் நாட்டுக் கடலாக இருந்தது; ஆனால் இப்போது தனது மூன்றிலிரண்டு பகுதி பரப்பை இழந்து விட்டது.


சோவியத் யூனியன் காலத்தில் உஸ்பெக்கிஸ்தானின் பருத்திப் பெருந்தோட்ட அபிவிருத்திக்காக ஆரல் கடல் திசை திருப்பப்பட்டது. பருத்திப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகவும் குடிநீர் பாவனைக்காகவும் எடுக்கப்பட்ட நீர் இயற்கை இக்கடலுக்கு வருடாவருடம் வழங்கிய நீரை விட அதிகமாக இருந்ததினாலேயே ஆரல் கடலின் பிரச்சினைகள் ஆரம்பமாகின.

கடல் வற்றுவதைத் தடுக்கவென தொலை தூரத்தில், வட புலத்திலுள்ள சைபீரிய நதிகளின் நீரை குழாய்கள் மூலம் ஆரலுக்குப் பாய்ச்ச சோவியத் அரசு உறுதியளித்திருந்தது. எனினும் இவ் வாக்குறுதி நிறைவேற்றப்படாத வாக்குறுதியாகவே இருந்து விட்டது.

பூமி சாத்திர வல்லுனர்களின் கூற்றுப்படி 2020ஆம் ஆண்டளவில் ஆரல் கடல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

வற்றிய பகுதிகளிலிருந்து வருடம் தோறும் 15-20 தொன் உப்பும் மணலும் காற்றினால் சுமார் 450 கிலோ மீற்றர் பரப்பளவுக்குட்பட்ட பிரதேசங்களுக்கு அள்ளிச் செல்லப்படுவதாகவும், இதனால் அப்பிரதேசங்களிலுள்ள பயிர்ச்செய்கைக்குட்பட்ட பிரதேசங்களின் மண் பாழாக்கப்படுவதாகவும் பல மத்திய ஆசிய அரசுகள் தெரிவித்துள்ளன. அத்துடன் இப்பிரதேசங்களில் மீன்பிடித் துறையை நம்பியிருந்தோர் ஆயிரக்கணக்கில் வேலையை இழந்து விட்டனர்.

பிரச்சினைகள் பாரியதாயிருந்தாலும், இப்பிராந்திய அரசாங்கங்கள் இக்கடல் மறைந்து போவதைத் தடுக்க எந்நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை.



## தினசரி 31,000 பில்லியன் (3,100 கோடி) மின் அஞ்சல்கள்!

உலகின் சனத்தொகை ஆறு பில்லியன் (6000 மில்லியன்), ஆனால் தினசரி இணையத்தில் அனுப்பப்படும் மின்னஞ்சல்களின் எண்ணிக்கை 31 பில்லியன்கள் ஆகும்.

அமெரிக்காவில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள International Data Centre (IDC) என்ற தொழில்நுட்பத்துறை ஆலோசனை நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இனிவரும் வருடங்களில் மின்னஞ்சல் பாவனை துரிதமாக வளர்ச்சியடைந்து 2006ஆம் ஆண்டளவில் 60 பில்லியனை அடையும் எனக் கூறியுள்ளது.

## தொழிலில் முன்னேற கல்வியோ பணமோ தடையல்ல!

தொழிலில் முன்னேற கல்வி, பணம், வயது, பால் எவையுமே ஒரு தடையல்ல. தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தாலே போதும் என்பதை இந்தியாவின் பிரபலமான பொருண்மிய சஞ்சிகையின் இவ்வருடத்திற்கான "Business Woman of The Year" விருதைப் பெற்றவர் நிரூபித்துள்ளார்.

பிரித்தானியா செய்திச் சேவையால் "பப்படம் இராணி" (Poppadum Queen) என அழைக்கப்படும் 70 வயது மூதாட்டியான யஸ்வந்தி (Jaswanti Ben Popat ) என்னும் பெண்மணியே இவ்வருட Business Woman of the year என்ற விருதை பெற்றவராவர்.

யஸ்வந்தி ஒரு மிகவும் வசதியற்ற ஏழை குடும்பத்தில் பிறந்தவர். மழைத்தூறலிற்கு கூட பாடசாலை பக்கம் ஒதுங்கி அறியாதவர். இவர் மற்றும் சில எழை பெண்களுடன் 1959 ஆம் ஆண்டு இரண்டு டொலர்கள் ($2) முதலீட்டுடன் பப்படம் செய்து விற்கும் தொழிலை ஆரம்பித்தார்.

இன்று இவரது நிறுவனம் இந்தியா முழுவதும் 62 கிளை நிறுவனங்களுடன் 40,000 பெண்களுக்கு வேலை கொடுத்துள்ளது. ஆமாம், இன்னும் பப்படம் செய்து விற்பதையே தொழிலாக கொண்டுள்ள இவரது நிறுவனத்தின் தற்போதைய வருட வியாபாரம் $50 மில்லியன் டொலர்களாகும்.

இந்தியாவின் பிரபல்யமான கல்லூரிகள் (Business Schools) மேற்கத்தைய முதலாளித்துவ வியாபார வரைவிலக்கணங்களுக்கு உட்படாத இந்த முகாமையாளர்கள் (Professional Managers) நிர்வாகசபை கூட்டங்கள் (Board Room Meetings) ஒன்றுமே இல்லாது கோடிக் கணக்கில் வியாபாரம் நடத்தும் நிறுவனத்தின் அபரிமித வளர்ச்சி பற்றி ஆராய்ச்சி செய்ய முன்வந்துள்ளார்கள்.

## உள்ளத்திலிருந்து...

"எனது சிறுபிராயத்தின் ஒரு பகுதியை எனது பெற்றோருக்குக் கொடுத்தேன். இளமைப் பருவத்தின் ஒரு பகுதியை கல்வி நிலையங்களுக்கு வழங்கினேன்; வாழ்வின் ஒரு பகுதியை நாட்டுக்காக கொடுத்தேன். வாழ்வில் இன்னுமொரு பகுதியை எனது குடும்பத்திற்காக அர்ப்பணித்துள்ளேன். எனது வருமானத்தின் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளேன். எனது வாழ்வின் ஒவ்வொரு தினத்திலும் ஒரு பகுதியை CNN ஐப் பார்ப்பதற்காகச் செலவழிக்கிறேன். (நோபல்) சமாதான பரிசின் ஒரு பகுதி எனக்கு வழங்கப்பட வேண்டும் என நினைக்கிறேன்." 2002 நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட வேண்டுமென்று CNN தொலைக்காட்சி நிறுவனம் தனது நேயர்களைக் கேட்ட போது Viv Pke என்ற தென் ஆபிரிக்கர் அளித்த பதில்

"உலகின் இரண்டாவது பழைய தொழிலாக அரசியல் கருதப்படுகின்றது. (ஆனால்) உலகின் மிகப் பழைய தொழிலை மிகவும் ஒத்ததாக அரசியல் உள்ளது என்பதை நான் காலப்போக்கில் அறிந்து கொண்டேன்".

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி
றொனால்ட் றேகன்

# தூய சுற்றாடல் ஒவ்வாமை அதிகரிப்பு

நீங்கள் ஒரு தூய சுற்றாடலை உருவாக்கி வைத்திருக்கிறீர்கள், அப்படியிருந்தும் உங்கள் பிள்ளைகள் அடிக்கடி ஆஸ்துமா மற்றும் வேறு ஒவ்வாமையால் (அலர்ஜிகளால்) ஏன் பாதிக்கப்படுகின்றனர் எனக் கேட்கிறீர்களா? பிரச்சினை உங்களது "சுத்தமான" சுற்றாடலில் தான் உள்ளது. ஏனெனில், தூசு மற்றும் பக்றீரியா, வைரசு குறைந்த நகர்ப்புற சூழலில் வளரும் குழந்தைகளின் ஒவ்வாமைக்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தி வீரியமிழந்து விடுகின்றது.

பல காலமாக விவாதிக்கப்பட்டு வந்த இந்தக் கூற்று இப்போது ஐரோப்பிய விஞ்ஞானிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜேர்மனிய நகர்களான மார்பேர்க், மியூனிச், சுவிஸ் நகரான பாசல் மற்றும் ஆஸ்திரிய நகரான சால்ஸ்பேர்க் ஆகியவற்றிலுள்ள அரச தரப்பு வைத்தியசாலைகளின் விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வின் இறுதியிலேயே இம் முடிவுக்கு வந்துள்ளனர். பண்ணைகளில் வளரும் நான்கு முதல் எட்டு வயதிலான பிள்ளைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி, அவர்களது நகர்ப்புற சகாக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை விட சக்தி வாய்ந்ததாக உள்ளன என்று 3,500 சிறுபிள்ளைகளை ஆராய்ந்த பின்னர் இவ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சுற்றாடலில் தூய்மை அதிகரிக்க அதிகரிக்க, பிள்ளைகளின் நோயெதிர்ப்புச் சக்தி வீரியம் குறைவதாகவும், பண்ணைகளில் வளரும் பிள்ளைகளின் நோயெதிர்ப்புச் சக்தி நுரையீரல் சம்பந்தமான வியாதிகளைத் தடுப்பதில் போதியளவு பயிற்றப்பட்டு இருப்பதாகவும் மார்பேக் பல்கலைக்கழக வைத்தியசாலையைச் சேர்ந்த ஹறால்ட் றென்ஸ் பிரித்தானிய மருத்துவ சஞ்சிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பண்ணைகளில் வளரும் பிள்ளைகள் பல்வேறு கிருமிகளால் தொடர்ச்சியாக தாக்கப்படுவதால் அவர்களின் நோயெதிர்ப்புச் சக்தி பலமாகின்றது எனவும், தமது கர்ப்பக் காலத்தில் தாய்மார் பண்ணைகளில் வேலை செய்திருந்தால் அவர்களின் பிள்ளைகளின் நோயெதிர்ப்புச் சக்தியின் 'சக்தி இன்னமும்' அதிகரிக்குமெனவும் திரு. றென்ஸ் தெரிவித்தார்.

பிள்ளைகளின் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க அவர்களை கிருமிகளும் பக்றீரியாவும் உள்ள சூழ்நிலையில் வளரவிட வேண்டுமெனவும், ஒரு வயதைக் கடந்த குழந்தைகள் இத்தகைய சூற்றாடலுக்குப் பழக்கப்படுத்தப்படா விட்டால் அவர்களின் நோயெதிர்ப்புச் சக்தி குன்றிவிடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



# சீனாவில் 'பல்'சிக்கல்




சீனாவின் கம்யூனிச அரசு புதியதொரு பிரச்சாரத்தை தேசிய ரீதியில் மேற்கொண்டுள்ளது. ஆனால் அரசியல் பற்றியதோ அல்லது வேறு "தேசத்துரோக" நடவடிக்கைகளுக்கு எதிரானதோ அல்லது இப்புதிய பிரச்சாரம்.

சீன மக்கள் சரியாக பல் தீட்டுகின்றனர் இல்லையாம். இப் பழக்கத்தை மாற்றவே இப்புதிய பிரச்சாரம். சீன அரசு திரட்டியுள்ள தகவல்களின் படி அந் நாட்டின் கிராமப் புறத்தில் வாழும் 900 மில்லியன் மக்களின் ஐம்பது சத வீதத்தினர் கூட தினசரி பல் தீட்டுவதில்லையாம். இவர்களை விட சோம்பேறிகள் நகர்ப் புறவாசிகள். நகரங்களில் வாழும் 400 மில்லியன் சீனர்களில் 10 சதவீதத்தினர் கூட சரியாகப் பல் தீட்டுவதில்லை.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வேப்பம் குச்சியால் பல்துலக்குவது போன்று பெருமளவிலான சீனர் குச்சிகளாலோ அல்லது தேநீராலோ (green-tea) மட்டுமே தமது பல் துலக்குகின்றனர். இப் பழக்கம் சாதாரண சீனர் முதல் அதிகாரத்தின் பீடத்தில் இருப்போர் வரை பரவியுள்ளது. உதாரணமாக நவீன சீனாவின் தந்தை என வர்ணிக்கப்படும் காலஞ் சென்ற மாவோ சேதுங்கின் பற்கள் காவி பிடித்துப் போய் இருந்தன. இப்போது சீன அரசாங்கம் தனது மக்களை பற்பசையும் தூரிகைகளையும் பயன்படுத்துமாறும் பல் வைத்தியர்களிடம் காலம் தவறாது செல்லுமாறும் வற்புறுத்த ஆரம்பித்துள்ளது.

அரசாங்கத்தின் இப்புதிய பிரச்சாரத்தின் இன்னொரு படியாக பாடசாலைகளில் விசேட கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றது.

# பருமனாகும் பிள்ளைகள்



இந்தியாவில் பல கோடி மக்கள் வறுமையால் வாட தலைநகரான புது டில்லியிலோ வசதி படைத்தோரின் பிள்ளைகளின் உடல் நிறை தேவையற்ற விதத்திலும் அவர்களது சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையிலும் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புது டில்லியில் உள்ள அனைத்து இந்திய மருத்துவவியல் அமைப்பு (*All India Institute of Medical Science*) விடுத்துள்ள அறிக்கையொன்றில், வசதிபடைத்தோரின் பிள்ளைகள் கல்வி கற்கும் தனியார் கல்லூரிகளின் மாணவ மாணவிகள் அரச தரப்புப் பாடசாலைகளின் மாணவர்களை விட நிறை அதிகமாகவுள்ளனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இவ்வமைப்பு புது டில்லியின் தனியார் கல்லூரிகளின் 12 - 15 வயதிற்குட்பட்ட மாணவர்களைப் பரிசோதித்த போது 7.4 சதவீதமானோரின் உடல் நிறை அளவுக்கதிகமாக இருப்பது காணப்பட்டது. ஆனால் இவ்வருடம் உடற்பருமன் கூடிய மாணவர்களின் தொகை 21 சதவீதமாக காணப்பட்டது.

இம் மாணவ மாணவிகளின் உணவுப் பழக்க வழக்கங்களே இப் பிரச்சினைக்கு பிரதான காரணமென இவ் வமைப்பின் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார். குறிப்பாக இத் தனியார் கல்லூரிகளின் சிற்றுண்டிச் சாலைகளில் காணப்படும் உருளைக்கிழங்குப் பொரியல், சமோசா மற்றும் கோலா போன்ற குடிபான வகைகள் உடல்நலத்திற்கு ஒவ்வாதவையெனவும், மாணவர்களின் உடல் நிறை அதிகரிக்க இவை முக்கிய காரணமெனவும் கூறப்படுகிறது.

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற வளர்ச்சியடைந்த பிராந்தியங்களிலும் உடல் எடை பாரியதொரு பிரச்சினையாக உருவாகி வருகிறது.

ஸ்கொட்லாந்து நகரில் குழந்தைகளின் உடல் எடையை அவதானித்த உள்ளூர் நிர்வாகம் 3-5 வயது வரையிலான குழந்தைகளுக்கென விசேட உடற்பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது. இதே போன்று ஐக்கிய அமெரிக்காவிலும் வயது வந்தோர் மட்டுமன்றி சிறுவர்களினதும் அதிகரித்து வரும் உடல் எடை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா போன்ற வளர்முக நாடுகளிலும் உடல் பருமன் பிரச்சினைக்குரிய விடயமாக மாறிவருகிறது. வளர்முக நாடுகளில் பொதுவாக வசதி படைத்தோரின் குழந்தைகளே இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர். வளர்ச்சியடைந்த நாடுகளின் கலாசாரங்களில் காணப்படும் கொழுப்புச் சத்து நிறைந்த ஹம்பேகர் போன்ற உணவு வகைகள், குளிர் பானங்கள் ஆகியவற்றில் நாட்டம் காட்டுவதுடன் உடற்பயிற்சிகளில் ஈடுபடாமல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதும், கணினிகளின் முன்னர் அதிக நேரத்தைச் செலவிடுதலும் இப் பிரச்சினைக்குக் காரணமென சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் இக் கூற்றினை உறுதி செய்யும் வகையில் அனைத்து இந்திய மருத்துவவியல் அமைப்பு இன்னொரு ஆய்வுத் தரவையும் வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் நகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான பெண்களின் உடல் நிறையைப் பரிசோதித்த இவ் அமைப்பு கிராமங்களில் வாழும் பெண்களைவிட நகர்ப்புற பெண்மணிகளின் நிறை கூடுதலாகவுள்ளதை அவதானித்தது.

கிராமப்புற பெண்கள் உடைகளைத் துவைத்தல், சமைத்தல், துப்பரவாக்குதல் போன்ற பல காரியங்களுக்கு தமது கைகளையும் உடல் வலுவையும் நம்பியுள்ளனர். இதனால் இவர்களது உடல்களில் கொழுப்புப் படிவதில்லை, ஆனால் நகர்ப்புற பெண்கள் இத்தகைய பணிகளுக்கு பல வகை இயந்திரங்களைப் பாவிப்பதால் அவர்களது உடலில் சக்தி போதுமானளவில் எரிக்கப்படுவதில்லை என இந்த அமைப்பைச் சேர்ந்த இருதய நிபுணர் சிறிநாத் ரெட்டி இந்தியப் பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்தார்.

**தனியார் கல்லூரிகளின் சிற்றுண்டிச் சாலைகளில் காணப்படும் உருளைக்கிழங்குப் பொரியல், சமோசா மற்றும் கோலா போன்ற குடிபான வகைகள் உடல்நலத்திற்கு ஒவ்வாதவையெனவும், மாணவர்களின் உடல் நிறை அதிகரிக்க இவை முக்கிய காரணமெனவும் கூறப்படுகிறது.**

# அடக்கு அல்லது அடங்கிப் போகும் சுகாதாரவாழ்வு

எமது மூதாதையர்கள் சொல்லி வைத்த ஒவ்வொரு வசனங்களிற்கும் அல்லது பழமொழி / முதுமொழிகளிற்கும் ஏதோ வகையில் ஒரு காரணம் அல்லது கருத்து இல்லாமல் இல்லை; அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு, நித்தம் போனால் முற்றம் சலிக்கும், ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்கக் கூடாது. இவ்வாறு பலவற்றைக் கூறிக் கொண்டே போகலாம். இவற்றில் சில எமக்கு அறிவுறுத்தலாகவும் மற்றவை கட்டளைகளாகவும் இருக்கின்றன. இவை எவ்வாறு இருந்தாலும் இதிலிருந்து எமது வாழ்விற்கு எது தேவையோ அதனையே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எமது சுகவாழ்வை நீடிப்பதற்கும் நோய் நொடியின்றி சிறப்பாக வாழ்வதற்கும் சில செயற்பாடுகளை அடக்கி வைத்தல் ஆபத்தானது. இன்பதற்கு உதாரணமாக சிலவற்றைக் கவனிக்கலாம்.

1. சிறுநீர்: இயற்கையாக காலா காலத்தில் வெளியேறவேண்டிய சிறுநீரை அடக்கி வைத்தால் வயிற்றில் அபான வாயு சேரும். இதனால் மாரடைப்பு, எரிவு, குத்தல் போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

2. தும்மல்: நாம் தும்மும் போது மூக்கு சுவாசப்பாதை, நுரையீரல் போன்றவற்றிலிருந்து நமக்கு வேண்டாத பல கழிவுப் பொருட்கள் வெளியேறுகின்றன. ஆகவே தும்மலை அடக்குவதால் மேற்குறிப்பிட்ட கழிவுகள் உடலில் சேர்ந்து பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இடுப்பு வலியை ஏற்படுத்தும் இதயத்துடிப்பை பாதிக்கும்.

3. மலம்: நாம் சாப்பிட்ட உணவுகள் ஜீரணம் செய்தபின் கழிவுகளை மலக்குடல் வெளியேற்ற வேண்டியது இயற்கையான நடைமுறையாகும். ஆனால் அதனைத் தடுக்கும் போது தலைவலி வயிற்றுவலி, உடல் தளர்ச்சி, மார்புவலி, புத்தி மந்தம் போன்றவை ஏற்படுகின்றன.

4. கொட்டாவி: கொட்டாவியை அடக்கினால் வயிறு சம்மந்தமான நோய்கள் அஜீரணம், மனச்சோர்வு போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

5. பசி: வேளாவேளைக்கு உணவு உட்கொள்ளாமல் அலட்சியப்படுத்தினால் அல்சர் நோய் உருவாகும். அதைத் தொடர்ந்து வாதநோய் தானாகவே உருவாகும், உடல் பலம் குன்றும், சுறுசுறுப்புப் போகும், போதிய ஊட்டச் சத்து உடலுக்கு கிடைக்காமல் நோய் எதிர்ப்புச்சக்தி குறையும் இதனால் பலவீனம் தோன்றும்.

6. தாகம்: தாகம் ஏற்படும் போது அதனைத் தணிக்கவில்லையானல் உடலுக்கு தேவையான நீர்ச்சத்து குறைந்து சோர்வு, அசதி, அஜீரணம் ஏற்படும். தொண்டை வரண்டு போகும், உடல் சூடாகும். உடல் உறுப்புக்கள் வேலை செய்வதில் சிரமம் ஏற்படும். கண் பஞ்சடையும், காது குடையும், மயக்கம் ஏற்படும், சிறுநீர் சரியாக பிரியாது மலச்சிக்கல் உருவாகும்.

7. இருமல்: உடல் நலக் கேட்டால் உருவாகும், அடக்கினால் மார்புவலி ஏற்படும். இருமலால் வெளியேறும் சளி முதலான கழிவுப் பொருட்கள், வெளியேற முடியாது. இதனால் ஆஸ்துமா (asthma) போன்ற நோய்கள் உருவாகக் கூடும்.


8. வாந்தி: வாந்தி பல காரணங்களால் ஏற்படுகிறது. வயிற்றில் பித்தம் அதிக மாவதால், விஷப் பொருட்கள் உணவுடன் கலந்து இருந்தால், அஜீரணம் ஏற்பட்டால், வயிற்றில் தங்கியிருக்கும் வேண்டாத பொருட்களை வெளியேற்றுவது கட்டாயம் ஆகும். இதுவே வாந்தியாக வருகின்றது.

9. கண்ணீர்: கண்ணீரை அடக்குவதால் கண்கள் பாதிப்படைத்து கண்நோய் ஏற்படும். தலைவலி, தலைச்சுற்று, மனச்சோர்வு போன்ற பல பாதிப்புகள் உருவாகும்.

10. வாயு: குதத்திலிருந்து கிளம்பும் வாயுவைத் தடைசெய்தால் அது உடலில் பல இடங்களில் பிரவேசமாகி தீராத வாத நோயாக மாறிவிடும். இதனால் நெஞ்சுவலி, பசியின்மை, மலச்சிக்கல், அஜீரணம், வாயுப்பிடிப்பு, மூட்டுவலி, இடுப்பு வலி போன்ற பலவித நோய்களுக்கு வழி வகுக்கும்.

11. தூக்கம்: ஓய்வு, உணவு, உழைப்பு இம் மூன்றும் சரியான அளவில் இருந்தால்தான் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும். எனவே நாள் முழுதும் உழைத்து சோர்ந்து விடும் மனிதன் தூக்கம் என்ற ஓய்வின் மூலம்தான் உடலைத் தயார் செய்து மறுநாள் சுறுசுறுப்புடன் தனது காரியங்களை செய்கின்றான். எனவே தூக்கம் என்பது மனிதனுக்கு மிகவும் முக்கியம். தூக்கம் ஒரு மருந்து. தினசரி உழைப்பின் மூலம் ஏற்படும் குறையை ஈடுசெய்து மறுநாள் வேலைகளைச் செய்ய நம்மை மறுபடியும் தயார்படுத்துகிறது.

தூக்கம் உடல், மனநலம் சம்மந்தப்பட்டது.



தளர்ந்து போன மனதுக்கு தூக்கம் ஒரு மருந்தாகும்.

ஆரோக்கியமான உடல் அமையவும் தளர்ந்து போன உடலை உற்சாகமடையச் செய்யவும் தூக்கம் இன்றியமையாதது.

உதாரணமாக ரீன் (Teen) வயதிலுள்ளவர்கள் ஆகக் குறைந்தது 9.2 மணித்தியாலங்கள் நித்திரை கொள்ளுதல் சிறந்தது. பேராசிரியர்கள் மேரி கிளாக்கட்டன் மற்றும் அமி வோல்வசனின் ஆகியோரின் அறிக்கையின் படி 25% வீதமான ரீன் வயது உடையவர்கள் 6.5 தொடக்கம் 7.2 வரையான மணித்தியாலங்களே இரவு நித்திரை கொள்கிறார்கள்.

அரிது, அரிது மானிடராகப் பிறப்பது அரிது, இப்பிறப்பை எடுத்த நாம், எமது உடலின் தேவைகளை கவனித்து, மதித்து தேவையான இயற்கை அமைப்பிற்கேற்ப வாழ்ந்தால் எமக்கு வரவி-ருக்கும் நோயில் பாதியைக் குறைக்கலாம் என்பது எனது எண்ணம்.



N. செல்வசோதி, கடந்த ஐந்து வருடங்களாக ரொறொன்ரோவில் யோகாசனம் கற்பிக்கின்றார்.



with over 30 years of real estate and engineering experience we professionally manage your residential and commercial properties

(building, apartments, residential condominiums, office condominiums, and commercial plazas)



# RMHS Property Management

- Managing your property is our top priority

contact us for our competitive rates and further information at 416.410.8893

54 Stansbury Cres, Toronto, ON, Canada

**Tel.: 416.410.8893**

Fax: 416.267.0514

email; lestersingh@sympatico.ca

RMHS PROPERTY MANAGEMENT INC.
(Managing Your Property is our top priority)

# எரியாமல் எரிக்கும் உலகின் எரிபொருள்

உலகில் யார் என்ன கூறினாலும் ஈராக்கைத் தாக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் திடமாய் இருக்கிறார். அதேவேளை ஈராக் மீதான தாக்குதலுக்கான சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பும் தளர்கின்றது; அல்லது அமெரிக்காவினால் தளர வைக்கப்படுகின்றது.

பாரிய நிர்மூலத்தை ஏற்படுத்தும் (இரசாயன, உயிரியல், அணு) ஆயுதங்களை (*weapons of mass destruction*) அல்லது அவற்றைத் தயாரிப்பதி-லான வேலையில் சட்ட விரோதமாக ஈடுபட்டுள்ளது என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அமெரிக்கா தனது இராணுவத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டு வருகின்றது. அத்துடன் ஈராக் தலைவர் சதாம் உசேன்னைப் பதவியிலிருந்து அகற்றுவது சர்வதேச ஜனநாயகத்துக்கு தேவையான செயல் எனவும் புஷ் கூறுகிறார்.

பதினொரு வருடங்களுக்கு முன்னர் 1991ஆம் ஆண்டில் வளைகுடா யுத்தத்தில் தோல்வியுற்றதை அடுத்து தனது இரசாயன, உயிரியல், அணு ஆயுதங்களை நிர்மூலமாக்க ஈராக் ஐக்கிய நாடுகள் சபைக்கு உத்தரவாதம் அளித்திருந்தது. எனினும் அணு ஆயுதங்களை அழிக்கவென அமைக்கப்பட்ட விசேட ஐ.நா. குழு தனது கடமையில் வெற்றியடைந்ததைப் போன்று ஏனைய ஆயுதங்களை அழிக்கும் குழுக்கள் வெற்றி அடையவில்லை. விசேட குழுவின் பரிசோதகர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சில தளங்களுக்கு ஈராக்கிய அதிகாரிகள் அனுமதி அளிக்க மறுத்ததே இதற்குக் காரணம். இதனால் ஆயுதத் திட்டங்கள் மறைக்கப்படுகின்றன அல்லது புதிதாக ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற ஐயம் எழுந்துள்ளது.

எனினும் பாக்தாத்தின் இரசாயன உயிரியல் ஆயுதங்களை முற்றாக ஒழித்துவிட வேண்டுமென்பதுதான் ஒரேயொரு திட்டம் என்ற புஷ்ஷின் கூற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. ஈராக்கின் சட்டவிரோத ஆயுதங்களை அழிப்பதிலும் பார்க்க ஈராக்கிய தலைவர் சதாம் உசேனை பதவியிலிருந்து அகற்றி (தனக்குச் சாதகமான) புதிய தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதில் தான் அமெரிக்காவிற்கு அக்கறை அதிகம் என பலர் கூறுகிறார்கள்.

இதற்கு ஒரு முக்கிய காரணியும் உண்டு. அதுதான் நில எண்ணெய். ஈராக் இவ்வுலகின் முக்கியதொரு எண்ணெய் தயாரிப்பு நாடு மட்டுமல்ல பெருமளவில் இன்னும் அகழ்ந்தெடுக்கப்படாத எண்ணெய் வளங்களையும் கொண்டுள்ள நாடு. இந்த எண்ணெய் அமெரிக்காவிற்கு மிகவும் தேவை.

அமெரிக்காவே எண்ணெய் வளங்களைக் கொண்டிருக்கையில், உலகில் போதுமானளவு எண்ணெய் இருக்கையில் அமெரிக்காவிற்கு ஏன் ஈராக் மீது கண்?

இதன் பின்னணியில் ஒரு அதிர்ச்சி தரும் உண்மை இருக்கிறது: தற்போதைய எண்ணெய் கண்டுபிடிப்பு, பாவனை நிலைமை தொடருமானால் விரைவில் பாரிய எண்ணெய் பற்றாக்குறை ஏற்படும்.

உலகின் பொருளாதார இயந்திரம் இயங்க எரிபொருள் முக்கியம். அதுவும் குறிப்பாக அமெரிக்க பொருளாதாரம் மலிவு எரிபொருள் வழங்கலில் தான் தங்கியுள்ளது.

## உலகின் எண்ணெய் வளம்

உலகின் மொத்த எண்ணெய் வளத்தினை கணிப்பிடுவதில் பூகோள, தொழில்நுட்ப, அரசியல் பிரச்சினைகள் உள்ளன.

இதில் முக்கியதொரு பிரச்சினை யாதெனில் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுவிட்ட, ஆனால் சரியாக அளவிடப்படாத நிலக்கீழ் எண்ணெய் வளங்களின் அளவை மதிப்பிடுதல் ஆகும்.

உலகின் பிரதான எரிபொருள் தயாரிப்பு, சுத்திகரிப்பு, விற்பனை நிறுவனங்களில் ஒன்றான பிரிட்டிஷ் பெற்றோலியம் (*BP*) ஸ்தாபனத்தின் கணிப்பின் படி, கடந்த வருட இறுதியில் உலகில் காணப்பட்ட நிலக்கீழ் எண்ணெயின் மொத்தம் *1050* பில்லியன் பீப்பாய்கள் (*10 இலட்சம் = 1 மில்லியன்*), *1000 மில்லியன் = 1 பில்லியன்*) ஆகும்.

பெற்றோலிய துறையில் பிரசித்திபெற்ற இரு இதழ்களான *Oil and Gas Journal* உம், *World Oil* இதழும் எண்ணெய் வளத்தை முறையே *1028, 1004* பில்லியன் பீப்பாய் களெனக் கணிப்பிட்டுள்ளன. இதனை விட இன்னுமொரு *800* பில்லியன் பீப்பாய்கள் வரை அகழ்ந்தெடுக்கப்படக் கூடிய சாத்தியக் கூறு இருப்பதாகக் கருதப்படுகின்றன.

இந்த வளத்தின் முக்கால்வாசிக்கு மேல், அதாவது *650* முதல் *700* பில்லியன் பீப்பாய் வரை, மத்தியகிழக்கு நாடுகளிலேயே காணப்படுகிறது.

இன்றைய தினசரி எண்ணெய் பாவனை *75* மில்லியன் பீப்பாய்களாகும். இதில் ஐக்கிய அமெரிக்கா மட்டும் பாவிப்பது *25* சதவீதமாகும். ஆசிய /பசுபிக் பிராந்தியத்தின் மொத்த பாவனை *28* சதவீதம் ஆகும்.


தற்போதைய எண்ணெய் பாவனை அளவு தொடருமானால் சுமார் நாற்பது வருடங்களில் எண்ணெய் வளம் தீர்ந்து போகும். கனடாவின் அல்பேட்டா (*Alberta*) மாகாணத்திலுள்ள எண்ணெய் கொண்ட தார் மண் (*Athabasca Tar Sands*) மற்றும் வெனிசுவெலாவிலுள்ள ஓரினோகோ பார எண்ணெய் படிவுகள் கூட சுமார் இருபது வருடங்களில் தீர்ந்து விடும்.


## ஹபேர்ட் மாதிரி (Hubbert Model)

நில எண்ணெய் ஒரு தீரா ஊற்றல்ல. ஆனால் உலகப் பொருளாதார, கைத்தொழில் இயக்கத்திற்கு மிக முக்கியமான இக்கனிப்பொருளின் எதிர்காலம் பற்றி முதன் முறையாக ஆரூடம் பார்த்தார் அமெரிக்க கனிப்பொருள் ஆய்வாளரான எம். கிங் ஹபேர்ட் (*M. King Hubbert*).



அமெரிக்காவின் எண்ணெய்ப் படிவுகளின்






## உலக நாடுகளின் எண்ணெய் தயாரிப்பு

கணிப்புகளையும், தயாரிப்பு அறிக்கைகளையும் ஆராய்ந்த அவர், எழுபதாம் ஆண்டுகளில் அமெரிக்காவின் எண்ணெய்த் தயாரிப்பு உச்சத்தை அடைந்து பின்னர் குறையத் தொடங்கும் என 1956ஆம் ஆண்டிலேயே கட்டியம் கூறியபோது அவரை பலர் எள்ளி நகையாடினர்.


ஆனால் 1970ஆம் ஆண்டில் அமெரிக்காவின் எண்ணெய் உற்பத்தி உச்சத்தை அடைந்து பின்னர் குறையத் தொடங்கியதும் எண்ணெய் நிறுவனங்களான ஷெல் (Shell), எஸ்ஸோ (Esso), மற்றும் உலக வங்கி கூட ஹபேர்ட் மாதிரியை உபயோகிக்கத் தொடங்கினர். அவர்களின் கணிப்பின் படி உலகின் எண்ணெய் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் உச்சத்தை அடைந்திருக்கும்.

ஆயினும் எழுபதாம் ஆண்டுகளின் மத்திய கிழக்கு போரைத் தொடர்ந்து எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) எண்ணெய் விலையை உயர்த்தியதை அடுத்து எண்ணெய்ப் பாவனை குறைந்தது. அதேபோல் தொண்ணூறாம் ஆண்டுகளிலும் எண்ணெய்ப் பாவனை குறைந்தது.

தற்போதைய கணிப்புகளின் படி உலக எண்ணெய் உற்பத்தி இத்தசாப்தத்தின் நடுப்பகுதியில் உச்சத்தை அடைந்து பின்னர் படிப்படியாகக் குறையத்தொடங்கும்.

உள்ளூர் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதில் புஷ் அரசாங்கம் கரிசனை காட்டினாலும் கூட, 2020ஆம் ஆண்டளவில் தனது தேவையின் மூன்றிலிரண்டு பங்கை வெளிநாடுகளிலிருந்தே அமெரிக்கா இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்.

இதனால் தான் எண்ணெய் வளநாடுகளின் அரசியலில் அமெரிக்க அரசு தீவிர ஈடுபாடு காட்டிவருகிறது. மத்திய ஆசிய நாடுகளான அசர்பைஜான், கஸாக்ஸ்தான் போன்ற நாடுகளின் எண்ணெய் அரபிக் கடலுக்குக் குழாய் மூலம் கொண்டு வருவதற்கு இவற்றின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் நிலையான அரசு ஒன்று தேவைப்படுகிறது என்பதற்காகவே முன்னாள் தலிபான் ஆட்சியாளரை அமெரிக்க அரசாங்கம் மறைமுகமாக ஆதரித்து வந்தது. அந்நாட்டின் தற்போதைய தலைவரான ஹமீத் கர்சாய் அமெரிக்க எண்ணெய் நிறுவனமொன்றின் ஆலோசகராக இருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் உலகின் மிகப்பெரிய எண்ணெய்ப் படிமங்களைக் கொண்டுள்ள சவூதி அரேபியாவிலிருந்துதான் அமெரிக்காவின் பிரதான எதிரியான பின்லாடனும் அவரது முக்கிய சகாக்களும் வந்தனரென்றாலும், சவூதி அரேபியா உலகின் பல பாகங்களிலும் உள்ள தீவிரவாத இஸ்லாமியருக்கு ஆதரவளிக்கின்றது என்றாலும் கூட அமெரிக்கா அந்நாட்டுக்கு ஆதரவளிப்பது ஏனென்றால் அந்நாட்டு அரசாங்கம் அமெரிக்க ஆதரவு அரசு என்பதாலேயாகும்.




சவூதி அரேபியாவிற்கு அடுத்தபடியாக எண்ணெய் வளம் நிரம்பிய நாடு ஈராக். எனவே அந்நாட்டில் ஒரு அமெரிக்க ஆதரவு அரசாங்கம் இருப்பது முக்கியமாகின்றது. இதேவேளை மத்திய கிழக்கின் இன்னுமொரு முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடான ஈரானின் எல்லைப் புறத்தில் ஆப்கானிஸ்தானுள் அமெரிக்க இராணுவத்தினர் முகாமிட்டுள்ளதும், எண்ணெய் உற்பத்தி நாடான வெனிசுவேலாவில், அமெரிக்க எதிர்ப்பு ஜனாதிபதியான ஹியூகோ சாவேஸை (Hugo Chavez) பதவி கவிழ்க்கும் முயற்சிகளுக்கு அமெரிக்க அரசாங்கம் ஆதரவளித்து வருவதும், தனக்குத் தேவையான எண்ணெயை பெற்றுக் கொள்வதில் அமெரிக்கா காட்டி வரும் கரிசனையைக் காட்டுகிறது.

**- இ. செந்தில்நாதன்**


OMV PRESS PHOTOS

அவுஸ்திரேலியாவிலுள்ள எண்ணெய் அகழ்வு நிலையம்

# வணிகம் செய்திடுவோம் இந்தியா



உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் உன்னத முயற்சியில், பல வாசகர்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் முகமாக ஒவ்வொரு இதழிலும் ஒரு நாட்டைத் தேர்ந்தெடுத்து அந்நாட்டைப் பற்றியும், அந்நாட்டுடன் வணிகம் செய்வதைப் பற்றியதுமான செய்திகளைத் தர உள்ளோம். அந்த வரிசையில், முதலாவது கட்டுரை இந்த இதழில் ஆரம்பமாகின்றது. இது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை அல்ல; ஆனால் பயனுள்ள செய்திகளைக் கொண்ட சுவையான கட்டுரைத் தொடராகத் திகழும். வணிகத்துக்கு உடனடியாக உதவக் கூடியதாகவும் அமையும் என எதிர்பார்க்கிறோம்.

உலகத் தமிழர்களுக்கு எல்லாம் தாய் நாடாக விளங்கும் இந்தியாவிலிருந்து இக் கட்டுரைத் தொடரை ஆரம்பிக்கின்றோம். இந்தியாவில் 1991 இல் தாராளமயமாக்கல் பொருளாதாரக் கொள்கை தொடங்கப்பட்டது. அது இன்றளவும் பல்வேறு அரசுகளின் கீழ் மேன்மேலும் வேரூன்றி வருகின்றது. பல்வேறு துறைகளிலும் ஆரம்பமான தாராளமயமாக்கல் வணிகத்திலும் கையாளப்பட்டு வருகின்றது. கடந்த பல ஆண்டுகளில் ஆண்டுக்கு ஆண்டு, இந்தியா வணிகத்தில் தனது கட்டுப்பாடுகளை மிகவும் தளர்த்தியோ, நீக்கியோ வந்துள்ளது. இந்நிலை தொடரும் என்றே தோன்றுகின்றது.

இன்றைய இந்திய வணிகத்தைப் பார்க்கமுன் காலக் கண்ணாடியை சற்றே பின்னால் திரும்பிப் பார்ப்போம். காலம் காலமாக, திரை கடலோடி திரவியம் தேடச் சென்ற தமிழன், காலத்தின் கோலத்தால் அகதிகளாகப் பல நாடுகளுக்கும் சென்றது இன்றைய நாள் சரித்திரம். இன்றைக்குத் தமிழர் இல்லாத இடம் உலகத்தில் இல்லை என்றாகி விட்டது. மொழியால் ஒன்றிணைந்த உலகத் தமிழர்களை, உணர்வாலும், உணவாலும் நடைமுறை வாழ்க்கையில் ஒன்றிணைப்பது வணிகமே ஆகும்.

சென்ற ஆண்டு சென்னையில் நான் இருந்த போது அரிசி ஏற்றுமதி செய்யும் ஒரு வணிகரைப் பார்த்தேன். அவரிடம் நீங்கள் எந்த நாடுகளுக்கு எல்லாம் அரிசி ஏற்றுமதி செய்கிறீர்கள் என்றபோது, அவர், "தமிழன் எங்கெல்லாம் இருக்கிறானோ, அங்கெல்லாம் அரிசி ஏற்றுமதி செய்கிறேன்" என்று பதில் அளித்தார். இந்தப் பதிலில் மிகுந்த உட்கருத்து இருப்பதாக எனக்குப் பட்டது. ஏறத்தாழ உலகின் எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதாக அவரே எனக்கு பிறகு விளக்கமும் அளித்தார். உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து, ஒருவருக்கொருவர் தமக்குள் வணிகம் செய்ய முன்னுரிமை தரும் போது உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழும் வாழும் தமிழர்களும் வாழ்வர். இத்தகைய வணிகம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழர்களை ஒருவரை ஒருவர் இறுகச் சாரச் செய்வதோடு மொழி, இன, கலாசார வளர்ச்சிக்கும் மிகவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

உலக வணிகம் தமிழர்களுக்குப் புதியதன்று. பழந்தமிழகத்தோடு உரோமானியர்களும், கிரேக்கர்களும் வணிகம் செய்ததற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன. அந்நாளில் இந்த வணிகம் தமிழர்களுக்குச் சார்புடையதாக இருந்ததாகத் தெரிகின்றது. அதாவது தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருட்கள் மிகுதியாகவும் இறக்குமதியான பொருட்கள் குறைவாகவும் இருந்ததாகத் தெரிகின்றது. அன்றைய தமிழகத்திலிருந்து அவ்வாறு ஏற்றுமதியான பொருட்கள்: கிராம்பு, ஏலக்காய் போன்ற வாசனைப்பொருட்கள், தரத்தில் உயர்ந்த மஸ்லீன் பருத்தித் துணிகள், யானைத் தந்தங்கள், விலை மதிப்புடைய கற்கள் முதலியன.

பெரி. முத்துராமன்

சிலப்பதிகாரத்தில் பூம்புகார் நகர வணிகம் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. முத்தும், விலையுயர்ந்த கற்களும், சந்தனமும், தங்க நகைகளும் விற்பதற்கென தனித்தனி தெருக்கள் இருந்ததாம். அத்தெருக்களில் வெளிநாட்டவரும், உள்நாட்டவரோடு தோளோடு தோள் உரசி வணிகம் செய்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

ஆச்சரியப்படும் வகையில் பழந்தமிழக வரலாற்று வணிகத்தை ஒத்ததாகவே இன்றைய இந்தியாவின் ஏற்றுமதியும் உள்ளது. உதாரணத்துக்கு 2001 - 2002இல் முதல் ஆறுமாதங்களில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பெரும்பான்மை பொருட்களை ஆராய்வோம். இந்தியாவின் முக்கிய ஐந்து ஏற்றுமதிப் பொருட்கள்: தைத்த (ரெடிமேட்) ஆடைகள் மற்றும் பல்வேறு துணிவகைகள் (23%), நகை மற்றும் நகைக் கற்கள்(18%) இரசாயனப் பொருட்கள் (15%) பொறியியல் (இஞ்சினியரிங்) பொருட்கள் (13%) அரிசி, கோதுமை, உள்ளிட்ட விவசாயப் பொருட்கள் (8%); இதேகால கட்டத்தில் இந்தியா இறக்குமதி செய்த நான்கு முக்கிய பொருட்களின் விவரம்: பெற்றோலியப் பொருட்கள் (30%), தங்கம், வெள்ளி (10%)

இலத்திரனியல் (எலக்ட்ரோனிக்) பொருட்கள் (7%) இயந்திரங்கள் (மெஷினறி) (7%).

இந்தியாவின் மிகப்பெரிய வணிகப் பங்குதாரர் அமெரிக்கா தான். இந்திய ஏற்றுமதிப் பொருட்களில் சுமார் 20 சதவீதம் அமெரிக்காவுக்குத்தான் போகின்றது. இந்தியாவும், அமெரிக்காவிலிருந்தே அதிக அளவில் இறக்குமதி செய்கின்றது. ஆனால் சதவீதத்தில் பார்க்கும் போது இந்தியாவில் இறக்குமதியான பொருட்களில் அமெரிக்கப் பொருட்களின் அளவு 6 சதவீதம் மட்டுமே. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் முக்கிய வணிகப் பங்குதாரராக விளங்குவது இங்கிலாந்து தான். இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகும் இந்தியப் பொருட்களின் அளவு சுமார் 5 சதவீதம் அதேபோல இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் இறக்குமதியான பொருட்களின் அளவும் 5 சதவீதமே.

சமீப காலங்களில் இந்தியப் பொருட்கள் அதிகம் ஏற்றுமதியான மற்ற நாடுகள்: ஹொங்கொங் (6%), UAE (6%) இங்கு குறிப்பிடாத நாடுகளின் வணிக சதவீதம் 2க்கும் குறைவே. இந்தியா சமீப காலங்களில் சுவிட்சர்லாந்திலிருந்து அதிகம் இறக்குமதி (7%) செய்து கொண்டிருக்கிறது. ஹொங்கொங், UAE போன்ற நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதியும், மற்ற நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதியும் 2 சதவீதத்துக்கும் குறைவே. இந்திய-கனேடிய வணிகம், இந்திய ஏற்றுமதியிலும் சரி இறக்குமதியிலும் சரி, ஒன்றிலிருந்து இரண்டு சதவீதத்துக்குள் இருந்து வருகின்றது. இந்தியாவின் வணிகம், பாகிஸ்தான் உள்ளிட்ட உலகில் உள்ள ஏறத்தாழ எல்லா நாடுகளோடும் உள்ளது என்பது குறிப்பிடத் தகுந்தது. இந்திய ஏற்றுமதிகளை மேலும் ஆராய்ந்தால் அரிசியிலிருந்து கார் வரை பல்வேறு தரப்பட்ட பொருட்களும் ஏற்றுமதியாவது தெரிய வருகின்றது.

சமீப காலம் வரை உலக அளவில் அரிசி ஏற்றுமதியில் தாய்லாந்து முதலிடத்தையும், வியட்நாம் இரண்டாவது இடத்தையும் வகித்தது. இப்போது இந்தியா குறுகிய காலத்தில் அரிசி ஏற்றுமதியில் உலக அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்து முதலிடத்திற்கு முயன்று வருகின்றது. கோதுமை ஏற்றுமதியில் இந்தியா ஏழாவது இடம் வகிக்கின்றது. ஒரு காலத்தில் பஞ்சத்தால் பரிதவித்து உணவை இறக்குமதி செய்த இந்தியா, உலகின் முன்னணி உணவு ஏற்றுமதி-யாளராக முன்னேறியிருப்பது குறிப்பிடத்-தகுந்தது. கடந்த வருடத்தில் 73 மெட்ரிக் டன் உணவு தானியங்கள் 16 உலக நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்-டிருக்கின்றன.

வைர விற்பனையில் சிறப்பான இடத்தை இந்தியா சமீப காலங்களில் பெற்றுள்ளது. இதில் தலைமைப்பீடத்தைத் தொட இந்தியா தொடர்ந்து முயன்று வருகின்றது. பட்டை தீட்டப்படாத வைரங்கள் வரியின்றி இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டு, ஜொலிக்கும் வைரக் கற்களாக உருமாறி, மீண்டும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி முக்கிய உலக வைரச் சந்தைகளைச் சென்றடைகின்றது.

கடந்த ஒரு வருடத்தில் இந்தியாவின் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஏற்றுமதி 60 சதவீதம் அதிகரித்துள்ளது. போர்ட் இந்தியா (Ford India) மட்டும் முந்தைய ஆண்டை விட 44சதவிதம் அதிகம் கார் ஏற்றுமதி செய்துள்ளது. மாருதியின் ஏற்றுமதி அளவு இதே காலகட்டத்தில் 68 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியர்கள் கொடி கட்டிப் பறக்கும் துறை ஒன்று இன்று உண்டு என்றால் அது கம்பியூட்டர் சாப்ட் வேர் (Computer Software) துறையே ஆகும். இந்தியாவின் வருவாய், இந்தத் துறையால் சமீபகாலங்களில், நேரடியாகவும், மறைமுகமாகவும் பலமடங்கு அதிகரித்துள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி 23% அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. 2002 -2003இல் இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதி 10 பில்லியன் டாலர்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்காவையே சென்றடைகின்றது. மேலும் பல அமெரிக்க நிதித்துறை, காப்புறுதி (Insurance), மருத்துவத்துறை மற்றும் உற்பத்தித் துறை கம்பெனிகள், தங்கள் மென்பொருள் (Soft Ware) தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இந்தியாவையே நாடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியர்களின் திறமையும், மலிவு விலையுமே இதற்குக் காரணங்களாகும்.

இருபத்திநான்கு (24) முக்கிய ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஏற்றுமதி வளர்ச்சிக் கழகங்களை இந்திய அரசின் வணிகத் துறை

### இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்

(சதவீதத்தில்) (2001 - 2002 ஏப்ரல் - செப்ரெம்பர்)

| | |
|---|---|
| துணிகள் (டெக்ஸ்ரைல்ஸ்), தைத்த (ரெடிமேட் ஆடைகள்) | 23 |
| நகை, நகைக் கற்கள் | 16 |
| இரசாயனப் பொருட்கள் | 15 |
| பொறியியல் (இஞ்சினியரிங்) பொருட்கள் | 13 |
| விவசாயப் பொருட்கள் | 8 |
| மற்றவை எல்லாம் | 25 |
| | 100 |

### இந்தியாவின் முக்கிய இறக்குமதிப் பொருட்கள்

(சதவீதத்தில்) (2001 - 2002 ஏப்ரல் - செப்ரெம்பர்)

| | |
|---|---|
| பெற்றோலியப் பொருட்கள் | 30 |
| தங்கம், வெள்ளி | 10 |
| இலத்திரனியல் (எலக்ரோனிக்) பொருட்கள் | 7 |
| இயந்திரங்கள் (மெஷினரி) | 7 |
| மற்றவை எல்லாம் | 46 |
| | 100 |

### இந்தியாவின் வணிகம் (அமெரிக்க டாலர்களில் _மில்லியனில்)

| வருடம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| 1990 - 91 | 18128 | 24053 |
| 1998 - 99 | 33218 | 42389 |
| 1999 - 2000 | 36805 | 49710 |
| 2000 - 2001 | 44560 | 50536 |
| 2001 - 2002 (எ) | 28851 | 34721 |

ஏப்ரல் - நவம்பர்
(எ) - எதிர்பார்க்கபடுகின்றது.

### பயன் தரும் சில இணையதள முகவரிகள்:

| அமைப்பின் பெயர் | முகவரி |
|---|---|
| 1. Federation of Indian Export Organisation | http://www.fieo.com. |
| 2. Ministry Of Commerce | http://commin.nic.in |
| 3. Director General of Foreign Trade | http://dgft.delhi.nic.in |
| 4. Reserve Bank of India | http://www.rbi.org.in. |
| 5. Export - Import Bank of India | http://www.//eximbankindia.com. |
| 6. Federation of Indian Chambers of Commerce & Industry | http://www.ficci.com. |
| 7. Confederation of Indian Industry | http://www.ciionline.org. |
| 8. The Associated Chambers of Commerce and Industry of India. | http://www. assocham.org. |
| 9. India Trade Promotion Organisation | http://www.indiatradePromotion.org |
| 10. Foreign Investment Promotion Board. | http:finance.indiamart.com |

அமைச்சகம் நிறுவியுள்ளது. இந்த ஏற்றுமதி வளர்ச்சிக் கழகங்களை ஒன்றிணைப்பது *FIEO* எனப்படும் பெடரேஷன் ஆப் இந்தியன் எக்ஸ்போர்ட் ஆர்கனைஸேஷன் (*Federation of Indian Export Organization*). அவர்களின் இணையத்தள முகவரி: www.fieo.com. இந்த இணையத்தளம் வணிகம் பற்றிய நல்ல பல செய்திகளைத் தெரிவிப்பதோடு, 24 முக்கிய ஏற்றுமதி வளர்ச்சிக் கழகங்களின் இணையத்தளங்களுக்கும் செல்லக் கூடிய வசதியைச் செய்து தருகின்றது. அதாவது இந்த ஓர் இணையத்தள முகவரியை நினைவில் கொண்டாலே நீங்கள் 25 வணிகம் பற்றிய இணையத் தளங்களைச் சென்றடைய முடியும்.

இந்திய அரசின் வணிகத்துறை இணையத்தள முகவரியும், மத்திய வங்கி மற்றும் பல்வேறு அமைப்புக்களின் இணையத்தள முகவரிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவோடும், இந்தியாவிலிருந்தும் வணிகம் செய்ய விரும்புவோர்க்கு இந்த இணையத் தளங்கள் நிச்சயம் உதவும்.

1000 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட வல்லரசு நாடான இந்தியாவின் உலக வர்த்தகம் மொத்த உலக வர்த்தகத்தில் தற்சமயம் வெறும் 0.67 சதம் மட்டுமே. 2007 இல் இதை 1 சதவீதம் ஆக்க இந்தியா பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. வெற்றி பெறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



பெரி. முத்துராமன், M.BA, M.Com, இந்திய வங்கி ஒன்றில் உயரதிகாரியாகப் பணியாற்றியபின் தற்பொழுது கனடாவில் பணியாற்றுகிறார். இவரது கட்டுரைகள் இந்தியாவிலும், கனடாவிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அடுத்த இதழில் இங்கிலாந்துடன் வணிகம் செய்வது பற்றி ஆராயவுள்ளோம். இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
விளம்பர முகாமையாளர், உலகத் தமிழோசை, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto ON, M1B 5P9 Canada.

# கோப்பித் தோட்டங்களின் சோகம்

கோப்பி - இது தேநீர் கலாசாரத்துடன் பிறந்து வளர்ந்த எம்மிடையே பிரபல்யமாகி வரும் ஒரு பானம். குறிப்பாக வடஅமெரிக்காவில் வாழ்வோர் செல்லுமிடமெல்லாம் கோப்பிக் கடைக்குள் புகுந்து, பிளாஸ்ரிக் கோப்பையில் கோப்பியை நிறைத்து எடுத்துக் கொண்டு போவது வழக்கம்.

ஆனால் கோப்பிச் சந்தையில் கடந்த சில வருடங்களாக ஏற்பட்டு வரும் நெருக்கடிகள் காரணமாக கோப்பியை உற்பத்தி செய்வோர் வாழ்வு அவலமாயுள்ளது. வியட்நாம், ஹொண்டுயூராஸ் போன்ற நாடுகளில் கோப்பி உற்பத்தியில் ஏற்படும் நட்டம் காரணமாக பல விவசாயிகள் தமது சொத்துக்களை விற்பதாகவும் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதை நிறுத்தி விட்டதாகவும் இங்கிலாந்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள ஒக்ஸ்பாம் (*Oxfarm*) என்ற அரச சார்பற்ற அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இதற்கெல்லாம் பிரதான காரணம் மிகையான கோப்பி உற்பத்திதான்.

சர்வதேச கோப்பி அமைப்பின் (*International Coffee Organization*) கணிப்பின் படி, 2001/2002ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கோப்பியின் அளவு 6.8 மில்லியன் மெற்றிக் தொன்னாகும். ஆனால் வருடாந்த கோப்பி பாவனையோ 6.4 மெற்றிக் தொன் தான். இதனைவிட சுமார் 1/4 மில்லியன் மெற்றிக் தொன் கோப்பி களஞ்சிய சாலைகளில் தேங்கிக் கிடக்கின்றது. கோப்பிச் சந்தைக்கு வியட்நாமின் வருகையும், உலகின் முக்கிய கோப்பி உற்பத்தி நாடாகிய பிறேசிலில் அதிகரித்த கோப்பி விளைச்சலுமே சர்வதேச கோப்பிச் சந்தையில் மிகையான வழங்கலுக்குக் காரணம்.

பிறேசில், வியட்நாம் உட்பட கோப்பி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 40 நாடுகளும் அங்குள்ள சுமார் 25 மில்லியன் கோப்பி விவசாயிகளும் இந்த உற்பத்தி அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்று சர்வதேச சந்தையில் கோப்பியின் விலை சராசரியாக கிலோவுக்கு 1.25 அமெரிக்க டொலர்களாகும். ஆனால் எண்பதுகளிலோ இவ்விலை மூன்று டொலராக இருந்தது. இன்றைய விலைச் சரிவு கடந்த 30 ஆண்டுகளிலே மிக மோசமானதாகும்.

இலங்கை எவ்வாறு ஒரு காலத்தில் தேயிலை ஏற்றுமதியை நம்பி இருந்ததோ, அதுபோல் சில ஆபிரிக்க, தென்அமெரிக்க நாடுகள் கோப்பியை நம்பியுள்ளன. உதாரணமாக உகண்டாவின் அந்நிய செலாவணி வருமானத்தின் 40 சதவீதமும் ஹொண்டுயூராசின் வருமானத்தின் 20 சதவீதமும் கோப்பி ஏற்றுமதியிலிருந்தே வருகின்றன.



சர்வதேச கோப்பிச் சங்கத்தின் தரவுகளின் படி, கோப்பி உற்பத்தி நாடுகளின் தற்போதய வருடாந்த வருமானம் தொண்ணூறாம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் இருந்த 10 - 12 பில்லியன் டொலர்களிலிருந்து 5.5 பில்லியன் டொலர்களாகக் குறைந்துள்ளது. வியட்நாம் போன்ற நாடுகளின் விவசாயிகள், போட்டி காரணமாக உற்பத்திச் செலவின் 60 சதவீதத்திற்கே கோப்பியை விற்கின்றனராம்.

கோப்பியின் விலை குறைவிற்கும் உற்பத்தியாளர்களின் வறுமைக்கும் அதிகரித்து விட்ட உற்பத்தி மட்டும் காரணமல்ல. உற்பத்தி மட்டும் தான் காரணமென்றால் நாங்கள் வாங்கும் கோப்பியின் விலையும் மலிந்திருக்க வேண்டும். புள்ளிவிபரங்களைக் கூறும் கதை-


யோ வேறு: தொண்ணூறாம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் கோப்பி நுகர்வோர் நாடுகளில் விற்பனை மூலம் கோப்பி நிறுவனங்களுக்கு கிடைத்த வருமானம் 30 பில்லியன் டொலர். ஆனால் கடந்த வருடம் கிடைத்த வருமானமோ 70 பில்லியன் டொலர் ஆகும். இது கோப்பி உற்பத்தி செய்வோரில் ஆரம்பித்து நுகர்வோரில் பூர்த்தியாகும் சங்கிலியில் உள்ள சமநிலையின்மையைக் குறிக்கின்றது.

கோப்பி உற்பத்தியாளர்களின் பிரச்சினை சர்வதேச கோப்பி அமைப்பில் இருந்தே ஆரம்பிக்கின்றது எனக் கூறலாம். இவ்வமைப்பு தயாரிப்பாளர்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்டிராமல் அமெரிக்கா போன்ற முக்கிய (மேற்குலக) நுகர்வு நாடுகளையும் அங்கத்துவர்களாகக் கொண்டிருப்பது ஒரு பெரும் பலவீனம் ஆகும். ஏனெனில் நுகர்வோர் எப்போதுமே மலிந்த கொள்விலையைப் பேணுவதிலேயே சிரத்தையுடனிருப்பர். இதனால் தான் ICO இனால் பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் (OPEC) போன்று சர்வதேச சந்தையில் கோப்பியின் விலையை தமது விருப்பம் போல் நிர்ணயிக்க முடியவில்லை.

கோப்பிச் சந்தையின் கட்டமைப்பும் கோப்பி உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு காரணியாகும். நெஸ்லே (Nestle), கிராஃப் (Kraft), சாரா லீ (Sara Lee), புறொக்டர் அன்ட் காம்பிள் (Proctor and Gamble) மற்றும் சீபோ (Tschibo) ஆகிய நிறுவனங்கள் கோப்பிக் கொட்டையை வாங்கி நுகர்வோருக்கு பதப்படுத்தப்பட்ட கொட்டையாகவோ அல்லது அரைத்து தூளாகவோ விற்கும் வியாபாரத்தை பெரிதும் கட்டுப்படுத்துகின்றன. இன்று சந்தையில் விற்கப்படும் கோப்பியில் 50 வீதம் இவ் ஐந்து நிறுவனங்களே வாங்குவதால் இவற்றால் சந்தை விலையை கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. இதனால்தான் கோப்பிக் கொட்டை வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் வறுமையில் திண்டாடுகையில் நெஸ்லே நிறுவனம் தனது உடனடி காப்பி (instant coffee) விற்பனையில் மட்டும் 26 சதவீதம் இலாபத்தைப் பெறமுடிகிறது.

## போராட்டம்

தமது நிலைமை சீராகாமல் தொடர்ந்தும் மோசமாகிப் போவதையடுத்து கோப்பித் தோட்டத் தொழிலாளர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். ஏன் ICO கூட சர்வதேச ரீதியில் கோப்பி விலையை உயர்த்தப் பாடுபட்டு வருகின்றது. ஒக்ஸ்பாம், ICO போன்றவை வேண்டி நிற்கும் ஒரு முக்கிய கோரிக்கை தரம் குறைந்த கோப்பியை மலிவு விலைக்கு இந்த ஐந்து நிறுவனங்களும் வாங்கி, அதி நவீன தொழில் நுட்பத்தைப் பாவித்து பதனிட்டு விற்பதை நிறுத்தலாகும்.




இதே வேளை உற்பத்தி நாடுகள் தங்கள் உற்பத்தியின் அளவைக் குறைக்க வேண்டும் என்பது பலரது கோரிக்கையாகும். கோப்பிச் சந்தையின் தற்போதைய அமைப்பில் அதாவது உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் நுகர்வோருக்கு இடையிலான உறவில் மாற்றம் ஏற்படாதவரை கோப்பித் தோட்ட தொழிலாளருக்கு விமோசனம் கிடைப்பது என்பது கேள்விக் குறியே!



# அணு

சி.விமலேந்திரன்

இவ்வுலகில் சிறியதற்கு வரைவிலக்கணம் அணு. அக்கறை இல்லாதவனைப் பார்த்து "அணுவளவேனும் அக்கறை இருக்கிறதா" எனக் கேட்டுவிடுவோம். ஆனால் துளியினும் சிறிய அணுவைக் கண்டு அஞ்சாதோரில்லை. இதில் இருந்து மின்சக்தி பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மறுதலையாக மனித குலத்தையே அழிக்கவல்ல அணுக்குண்டும் கூட அணுவின் பிளவை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இயற்கையின் மிகப்பெரிய சக்தியின் ஊற்றுக்கும் கூட அணுவே காரணம் ஆகிறது. சூரியன் போன்ற நட்சத்திரங்கள் பெருமளவு சக்தியை பல காலமாக வெளிவிடுவது அணுக்களின் சேர்க்கையினாலே ஆகும்.

## அணு என்றால் என்ன?

ஒரு பொருளை சிறியதாக வெட்டிக் கொண்டே போகும்போது வரும் மேலும் வெட்ட முடியாத மிகச் சிறிய கூறே அணுவாகும். ஒரு பொருளின் அணுவை அப்பொருளின் தன்மை கெடாதவாறு மேலும் சிறியதாகக் கூறு போட முடியாது. அணுவின் பருமனைக் கருதினால் அது சாதாரண கண்களுக்கோ அல்லது சாதாரண நுணுக்குக் காட்டிகளுக்கோ புலப்படாது. ஓர் அங்குலத்தை மில்லியன் கூறுகள் ஆக்கி, அதில் ஒரு கூற்றை எடுத்து மேலும் மில்லியன் கூறுகள் ஆக்கினால் வரும் ஒரு கூறே அணு ஒன்றின் பருமனாகும்.


## அணு என்ற பதத்தின் மூலம்

முதன் முதலில் அணு என்ற பதத்தை முன் வைத்தவர் கி.மு 400களில் வாழ்ந்த *Democritus* - டிமோகிரைரஸ் என்ற கிரேக்க அறிஞர் ஆவார். ஒவ்வொரு பொருளும் பிரிக்க முடியாத மிகச் சிறிய துணிக்கைகளினால் ஆனது எனவும் அப் பிரிக்க முடியாத துணிக்கையை அணு எனவும் அவர் கூறினார். ஏறக்குறைய அவரது சமகாலத்தில் வாழ்ந்த விஞ்ஞானி, கணித மேதை, தத்துவஞானியான அரிஸ்ரோட்டில் அணுக்கள் கூடப்பிரிக்கப்படலாம் எனக் கூறினார். அணுவின் ஆங்கிலப் பதமான ATOM என்பது வெட்டப்பட முடியாதது எனப் பொருள்படும் ATOMAS எனும் கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது.

## அணுவின் கூறுகள்

பொருள் ஒன்றின் மிகச் சிறிய கூறு அணு என்றாலும் இந்த அணுவானது மூன்று வகையான மிகச் சிறிய துணிக்கைகளால் ஆனது. ஒன்று இலத்திரன் எனப்படும். இது எதிர் மின் ஏற்றம் கொண்ட, மிகவும் திணிவு குறைந்த துணிக்கையாகும். இன்னொன்று புரோத்தோன் எனப்படும். இது நேர் மின் ஏற்றம் கொண்ட துணிக்கையாகும். மூன்றாவது துணிக்கை ஏற்றம் இல்லாத நியூத்திரன் ஆகும். புரோத்தோன்களும் நியூத்திரன்களும் இலத்திரன்களுடன் ஒப்பிடுகையில் பருமன் கூடிய துணிக்கைகள். இலத்திரன்களின் மின்னேற்றத்தின் அளவும் புரோத்தோன்களின் மின்னேற்றத்தின் அளவும் சமனானவை. அணு ஒன்றில் பொதுவாக இலத்திரன்களும் புரோத்தன்களும் சம அளவில் காணப்படும்.

## அணுக்களை இனம் காணல்




வெவ்வேறு பொருட்களின் அணுக்களை வேறுபடுத்தி அறிவதற்கு அணு எண், அணுநிறை என்னும் பதங்களை விஞ்ஞானிகள் பாவிக்கின்றார்கள். அணு ஒன்றில் உள்ள புரோத்தோன்களின் எண்ணிக்கையே அணு எண் எனப்படுகிறது. அணுவில் உள்ள புரோத்தோன்களினதும் நியூத்திரன்களினதும் எண்ணிக்கையின் கூட்டுத்தொகையே அணுநிறை எனப்படும். உதாரணமாக அணு ஒன்றில் ஏழு இலத்திரன்களும் ஏழு புரோத்தோன்களும் எட்டு நியூத்திரன்களும் இருந்தால், இந்த அணு அணுஎண் 7 (புரோத்தோன்களின் எண்ணிக்கை) அணு நிறை 15 (புரோத்தோன்கள் + நியூத்திரன்கள்) எனக் குறிப்பிடப்படும்.



அணுக்கருவும்
இலத்திரன்களது பாதையும்

## அணுவின் அமைப்பு

அணு கண்ணுக்குப் புலப்படாத சூரியத் தொகுதி என்றும் அழைக்கப்படுகிறது. அணுவின் மையத்தில் புரோத்தோன்களும், நியூத்திரன்களும் இணைந்து ஒன்றாக இருக்கும் பகுதி அணுக்கரு எனப்படும். அணுக்கரு நேர்மின் ஏற்றம் கொண்டது. இந்நேர் மின்ஏற்றம் கொண்ட அணுக் கருவைச் சுற்றி எதிர் மின் ஏற்றம் கொண்ட இலத்திரன்கள் வெவ்வேறு பாதைகளில் வலம் வருகின்றன. ஆனால் சூரியனை கோள்கள் வலம் வருவது போல் ஒழுங்கான பாதையில் வலம் வருவதில்லை. குறிப்பிட்ட பகுதிகளில் (கோளப் பரப்புகளில்) அணுக் கருவை வலம் வருகின்றன.

## அணுசக்தி


அணுக்கருவில் நேர் ஏற்றம் கொண்ட புரோத்தோன்கள் நியூத்திரன்களுடன் ஒன்றாக இணைந்துள்ளன. பொதுவாக ஒத்த ஏற்றங்கள் ஒன்றை ஒன்று தள்ளும். அணுக் கருவில் உள்ள வலிமையான அணுக் கருவிசை ஆனது புரோத்தோன்களை ஒன்றாக இணைத்து வைத்திருக்கிறது. இவ் விதம் அணுக் கருவில் புரோத்தோன்களையும் நியூத்திரன்களையும் ஒன்றாக வைத்திருக்கும் சக்தியே அணுசக்தி எனப்படுகின்றது.

அணுக் கருவில் புதையுண்டு கிடக்கும் பெருமளவு சக்தியை கண்ட மனிதர் அதனை வெளிக் கொண்டு வந்து மின்சக்தியாக தமது பாவனைக்குப் பயன்படுத்த முனைந்து அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

## அணுக்குண்டு

அணுக் குண்டையும் அணுக் குண்டின் பாரதூரமான விளைவுகளையும் அறியாதோர் இன்று இல்லை. அதற்கான சாட்சி ஹிரோசிமாவும் நாகசாகியும். இந்த அணுக்குண்டு கூட அணுச்சக்தியை வெளிக்கொண்டு வரும் முயற்சியின் ஒரு விளைவே.

அணுக் கருவின் பருமன் அதிகரிக்கையில் அவ்வணு உறுதியில்லாதது ஆகிறது. இப்படி உறுதியில்லாத அணுக்கரு ஒன்றினை நியூத்திரன் துணிக்கை ஒன்றினால் மோதும் போது உறுதியில்லாத பெரிய அணுக்கரு பிளவுண்டு இரண்டு உறுதியான அணுக் கருக்களை உண்டாக்குகிறது. இது அணுக் கருப் பிளவு எனப்படும். இவ்விதம் அணுக் கருப் பிளவு ஏற்படும் போது ஏராளமான சக்தியும் சில நியூத்திரன்களும் வெளிவிடப்படுகின்றன. இந்த வெளிவீசப்பட்ட நியூத்திரன்கள் மேலும் உறுதியில்லாத பெரிய அணுக் கருக்களை மோதி அவற்றை அணுக் கருப் பிளவுக்கு உள்ளாக்குகின்றன. எனவே மேலும் பெருமளவு சக்தியும் நியூத்திரன்களும் அணுக் கருவில் இருந்து வீசப்படுகின்றன. இந் நிகழ்வு அல்லது தாக்கம் தொடர்ந்து நடைபெற தொடர்ச்சியாக சக்தி வெளிவிடப்பட பெருமளவு வெப்பமும், கதிர் வீச்சுச் சக்தியும் தொடர்ந்து வெளிவிடப்படுகிறது. அணுக் குண்டு ஒன்றின் செயற்பாடும் இவ்விதமே ஆகும்.



ஜப்பானில் வீசப்பட்ட அணுக்குண்டின் மாதிரி

அணுச் சக்தியில் இருந்து மின்சாரத்தையும் இதர சக்திகளையும் பெறுவதற்குக் கூட மேற்கூறப்பட்ட அணுக் கருச் சங்கிலித் தாக்கமே பயன்படுகிறது. ஆனால் அதற்கு தீவிர பாதுகாப்புடன் மட்டுப்படுத்தப்பட்ட அணுக்கருத் தாக்கங்கள் செய்யப்படுகின்றன.



சி. விமலேந்திரன் (கனிமாஸ்டர்) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெற்றவர். கடந்த பத்து வருடங்களாக வானொலிகளிலும் கடந்த நான்கு வருடங்களாக 'விளம்பரம்' பத்திரிகையிலும் முறையே 'சிந்துவெளி நாகரிகம்', 'விண்வெளி', மற்றும் 'விஞ்ஞான ஆய்வு' விவரணங்கள் செய்து வருகின்றார்.




இவர்களுடைய இலக்கை அடைய உதவுங்கள்!

THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

இலாபநோக்கற்ற அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்புத் திட்டம் (R.E.S.P.)

உலகின் எப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்

எந்நேரமும் இலவச ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ளலாம்


**சீலன் ஜயாத்துரை**
**416.451.0271**
கனடா

சிவ ஞானநாயகன்

# முன்னோக்கி சுற்றும் கிரகம் எவ்வாறு பின்னோக்கி வருகிறது?

பூமி மற்றும் கிரகங்கள் எல்லாம் சூரியனை சுற்றி வருகின்றன என்பது நாங்கள் எல்லோரும் அறிந்த விடயம். இவ்வாறு சுற்றும் போது ஒரு கிரகம் (சனி என உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம்) எவ்வாறு ஓர் இராசியில் இருந்து அடுத்த இராசிக்கு முன்னோக்கி சென்றுவிட்டு பின்னர் முன்பு இருந்த இராசிக்கு பின்னோக்கி வந்து (வக்கிரம் அல்லது *Retrograding*) திரும்பி முன்னேறுகிறது? இது எவ்வாறு சாத்தியமாகும்? நமக்கு தெரிந்த வரையில் கிரகங்கள் எல்லாம் ஒரே திசையில் தான் சூரியனை சுற்றிக் கொண்டு இருக்கின்றன. எப்போதாவது நின்று திரும்பிப் போய் மீண்டும் வந்ததாகக் கேள்விப்படவில்லையே. பின்னர் ஏன் எமது சோதிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்?

இதை விளக்குவதற்கு முதலில் நாங்கள் "தொடர்பு வேகம்" என்றால் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டு பொருட்கள் அசையும் போது ஒன்று தொடர்பாக மற்றது அசையும் வேகமே தொடர்பு வேகமாகும். இத் தொடர்பு வேகம் இரண்டு பொருட்களும் தனித்தனியே அசையும் வேகத்தைவிட வித்தியாசமானதாக இருக்கும்.




பூமி வேகமாக ஒரு சிறிய நீள்வட்ட பாதையில் சூரியனை சுற்றி வருகிறது. (ஒரு சுற்று சுற்றி வர ஒரு வருடம் எடுக்கிறது). சனி மெதுவாக ஒரு பெரிய நீள்வட்டப் பாதையில் சூரியனை சுற்றி வருகிறது. (ஒரு சுற்று சுற்றி வர 30 வருடங்கள் எடுக்கிறது.)

தற்போது அருகில் உள்ள படத்தைப் பாருங்கள். பூமி சூரியனை சுற்றி வரும் போது அதன் பாதையில் கடக்கும் 5 நிலைகள் *1a, 2a, 3a, 4a, 5a* எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் சனி சூரியனைச் சுற்றி வரும் தனது பாதையில் நிற்கும் 5 நிலைகளும் முறையே *1b, 2b, 3b, 4b, 5b* எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கிரகங்களும் ஒரே திசையில் எப்போதும் முன்னோக்கி சுற்றுவதாகவே இந்த 5 நிலைகளும் குறிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள்.

இப்போது பூமியில் இருந்து பார்ப்பவருக்கு சனியின் பாதை (பூமி தொடர்பான சனியின் வேகம்) எவ்வாறு இருக்கும் என்று பார்ப்போம். அதாவது *1a*ஐயும் *1b* ஐயும் இணைத்து நீட்டினால் அது இராசிக் கூட்டங்களை சந்திக்கும் இடத்தில் *1c* இல் இருப்பது போல் தெரியும். இவ்வாறே ஏனைய நான்கு புள்ளிகளையும் இணைத்து நீட்டவும். *1c, 2c, 3c, 4c, 5c* என்ற ஐந்து புள்ளிகளையும் இணைத்தால் வரும் பாதையே சனிக்கிரகத்தின் பூமி தொடர்பான பயணப் பாதையாகும். இப்பாதை முன்னே சென்று பின்னர் சிறிது தூரம் பின்னோக்கி சென்று மீண்டும் முன்னோக்கி செல்வதை நீங்கள் இப்போது அவதானிக்கலாம்.

இவ்வாறு பூமி தொடர்பான சனியின் பாதையில் சனி பின்னோக்கி செல்வது போன்று தோன்றுவதையே எம்மவர்கள் சனி வக்கிரகிக்கிறது (*Retrograding*) என சோதிடத்தில் சொல்லுகிறார்கள்.

'தொடர்பு வேகம்' என்ற கலைச்சொல் அகராதிக்கு வந்து ஒரு சில ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகியிராது. ஆனால் எம்மவர்கள் தொடர்பு வேகம், அதன் பிரயோகங்கள் பற்றி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதை எமது சோதிடக்கலை காட்டுகிறது.



*சிவ ஞானநாயகன், M.Sc., P.Eng. இவர் கனடாவின் Georgian College இல் Astrology கற்றவர்.*



# GLOBAL EXPORTERS OF ALL INDIAN & SRI LANKAN FOOD ITEMS

All items are manufactured under very hygienic conditions by a well trained workforce.


Interested importers are welcome to visit our manufacturing unit in Madras.

In addition we can export pooja items, brass ware, stainless steel, cooking utensils, etc.

Arrangements can be made to supply items not included in the above list.

**MELROSE EXPORTS (P) LTD.**
**7 Chockanathar Street**
**Karthikeyan Nagar**
**Maduravoyal,**
**Chennai 602 102,**
**India**

**Tel: 91.44.3780750**
**91.44.5016891**
**Fax: 91.44.3780751**
**Mobile: 91.9841026955**
**E-mail: melrose@eth.net**




# குழுமேல் குழு! கண்காணிப்புக் குழுவை மடக்கும் சந்திரிகா

photo: Reuters

இலங்கையில் சமத்துவத்துடனான அமைதியைக் கொண்டுவரும் பணிகள் அரசியல், இராஜதந்திர ரீதியில் மெதுவாக ஆனால் திடமாக முன்னேறும் இவ் வேளையில், இவற்றைப் பின்னடையச் செய்யத் திடம் கொண்டுள்ள சக்திகள் இந்த யுத்த நிறுத்தப் பேச்சு வார்த்தைத் தொடரில் தமிழரை நம்பிக்கை இழக்க வைக்கும் வகையில் புதிய யுக்திகளை மேற்கொண்டு வருகின்றன.

பலமான பின்னணி என்று ஒன்றுமில்லாமல், கோர்வையற்ற சிறு நடவடிக்கைகள் போல் தோன்றினாலும் இராணுவ, சமாதான - விரோத அரசியல் சக்திகளிடமிருந்து வரும் இந்நடவடிக்கைகள் உண்மையில் மிகவும் அபாயமானவை. ஏனெனில் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியான நோர்வேயின் பணியை வீரியமிழக்கச் செய்து, பேச்சுவார்த்தைகளை முறித்து, அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழியைப் போடுவதே இந்தக் குழுக்களின் நோக்கமாகும்.

ஒக்ரோபர் நடுப்பகுதியில் - மூன்று நாள் இடைவெளிக்குள் - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் இச் சக்திகளின் உள்நோக்கத்தைக் காட்டியது மட்டுமன்றி, தற்போதைய சமாதான முயற்சிகளில் தமிழருக்கு மிகுந்த கரிசனையைக் கொடுத்துள்ளது.

பொலிஸ், விசேட அதிரடிப் படை *(STF)* மற்றும் ஊர்காவல் படையினர் தமிழர் மீது தாக்குதல் நடத்தும் அதேவேளை, யுத்த நிறுத்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகளை பலவீனமாக்கிவிட்டதுடன் பொதுமக்களையும் அபாயத்துக்குள்ளாக்கி விட்டதாகவே பல தமிழர் கருதுகின்றனர். மட்டக்களப்பு நகரிலிருந்து 85கி.மீ தெற்காகவுள்ள கஞ்சிரங்குடாவிலும் திருமலை நகரிலும் நடைபெற்ற சூட்டுச் சம்பவங்களும் ஆயுதந் தரிக்காத விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை படையினர் நடத்தும் விதமும் நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது.

இவை எல்லாவற்றையும் விட அபாயகரமானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கிழிசல்களைக் கொண்டு வரும் முயற்சிகளே.

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அதன் அமுலாக்கம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் (சம்பந்தப்பட்ட) கட்சிகள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், முடிக்குரிய நோர்வே அரசாங்கம் இலங்கை கண்காணிப்புக் குழுவின் *(SLMM)* தலைவரை நியமிக்கும். அவரே இந்த

**ஜே.எஸ். திஸ்ஸநாயகம்**
கொழும்பு

ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தைத் தீர்மானிப்பார்.

இந்த ஒப்பந்தம் மேலும் என்ன கூறுகின்றதென்றால், இதில் கைச்சாத்திட்ட ஏதாவதொரு கட்சி முறைப்பாடு ஒன்றைச் செய்யும் பட்சத்தில், அது பற்றிய உடனடி நடவடிக்கை எடுப்பதும் விசாரணை நடத்துவதுடன் இம் முறைப்பாடு தொடர்பாக கட்சியினருக்கிடையே பிரச்சினை எழும் பட்சத்தில் அதனைத் தீர்க்க உதவுவதும் கண்காணிப்புக் குழுவின் கடமையாகும்". அதாவது பிரச்சினைகள் எழும் பட்சத்தில் அவற்றைத் தீர்க்க வேண்டியது கண்காணிப்புக் குழுவின் கடமையாகும்.

ஆனால் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களை அடுத்து இலங்கை அரசாங்கமும், ஜனாதிபதியும் கிட்டத்தட்ட நிரந்தரமாக இயங்கவிருக்கும் சில குழுக்களை நியமித்தமை மட்டுமல்லாது, கஞ்சிரங்குடா மற்றும் திருமலை நகர் வன்செயல்களை விசாரிக்க எனவும் பிரத்தியேகக் குழுக்களையும் நியமித்துள்ளனர்.

இந்த இரு வன்செயல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யவென அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுக்கள் பற்றி நாம் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் நாம் தீர ஆராய வேண்டியவை உள்நாட்டு அமைச்சு நியமித்துள்ள குழுவும், சமாதானத்தைப் பேணும் சாட்டில் பல குழுக்களை அமைக்கும் ஜனாதிபதியின் ஆலோசனையையும் தான்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த உள்துறை அமைச்சர், ஜோன் அமரதுங்க தலைமையில் சமயப் பிரதிநிதிகளையும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழுவொன்றை அமைப்பது பற்றி கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அலுவலகம் ஒக்ரோபர் 13ஆம் திகதி விடுத்த அறிக்கை ஒன்றில் மூன்று படைகளினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களை

**கஞ்சிரங்குடா, திருமலை வன்செயல்களின் சூடு தணியு முன்னரேயே, விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த மீறல்களைச் சுட்டிக் காட்டியும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் படையினரின் பங்கு குறித்து பாராட்டியும் ஜனாதிபதி அறிக்கை விடுத்தார்.**



யாழ். மத்திய கல்லூரி இடிந்து கிடக்கிறது

photo: Reu

வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்க ஜனாதிபதி விரும்புகிறார் எனக் கூறப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் போன்ற சம்பவங்களை விசாரிக்க கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரம் இல்லை என்பதினாலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாக இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையர், குறிப்பாக தமிழர், பார்வையில் சமாதான முயற்சிகளைக் குழப்பும் ஒருவராகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தெரிகிறார். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஒரு சில நாட்களிலேயே இவ் ஒப்பந்தம் பற்றிய தமது "கரிசனையைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு ஜனாதிபதி தெரியப்படுத்தினார். அதுமட்டுமல்ல, தாம் நினைத்தால் இராணுவத் தளபதிக்கு எழுதும் ஒரு கடிதம் மூலம் இவ்வொப்பந்தத்தை இல்லாமல் செய்துவிட முடியும் என்று ஜனாதிபதி மார் தட்டியதும் பலர் மனதை விட்டு இன்னமும் அகலவில்லை.

எட்டு மாதங்களின் பின்னர், கஞ்சிரங்குடா, திருமலை வன்செயல்களின் சூடு தணியு முன்னரேயே, விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த மீறல்களைச் சுட்டிக் காட்டியும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் படையினரின் பங்கு குறித்து பாராட்டியும் ஜனாதிபதி அறிக்கை விடுத்தார். இராணுவத்திலும், பொலிசிலும் ஜனாதிபதிக்கு உள்ள நம்பிக்கையும், அரசாங்கத்தையும் மீறி படைகள் மூலம் தமது காரியங்களை நிறைவேற்றும் ஜனாதிபதியின் தந்திரோ பாயமுமே இங்கு தெளிவாகத் தெரிகின்றது.

ஜனாதிபதியின் ஆலோசனையான மாவட்டக் குழுக்களில் முப்படைகளினதும் பொலிஸ் படைகளினதும் பிரதிநிதிகள் அடங்க இருப்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்கள் மீதான பல தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட இராணுவத்தினரை "சமாதானத்தைப் பேணும்" நோக்கில் அமைக்கப்படவிருக்கும் இக் குழுக்களில் பயன்படுத்துவது சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் யுக்தி என்றே பலராலும் கருதப்படுகின்றது.

இச்சந்தேகம் வலுப்பெற இன்னுமொரு காரணமும் உண்டு. ஜனாதிபதி குமாரதுங்காவின் மக்கள் முன்னணியின் இரகசிய தந்திரோபாய நகலொன்று ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணியின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்ததே அது. இராணுவத்தைப் பயன்படுத்திக் கிழக்கில் வன்செயல்களைத் தூண்டுவதன் மூலம் சமாதான முயற்சிகளை சிதறடிப்பதே இத் தந்திரோபாயமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் பல கேள்விகள் எழுந்துள்ளன. ஜனாதிபதியின் மாவட்ட குழுக்களில் பங்குபற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மறுத்தால், அது சமாதானத்திற்கு எதிரான அவர்களின் நிலைப்பாடு என்ற கருத்தைத் தோற்றுவிக்குமா? அப்படி தோற்றுவித்தால் அதன் விளைவுகள் என்ன? இதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல் நடத்துகையில் ஏற்படக் கூடிய

இராணுவ ரீதியிலான சிக்கல்களை புரிந்து தீர்ப்பதற்கெனவே கண்காணிப்புக் குழுவில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஷரத்துக்களை அமுல் நடத்துவதில் கண்காணிப்புக் குழுவின் அதிகாரம் தெளிவாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கையில் இம் மாவட்டக் குழுக்களின் பணி என்ன? கண்காணிப்புக் குழுவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கென தனிக் குழுக்களை நியமித்து, ஒவ்வொரு குழுவிலும் அரச, புலிகள் தரப்பிலிருந்து முறையே ஒவ்வொரு சிவிலியன் பிரதிநிதியையும், ஒரு இலங்கையரல்லாத கண்காணிப்புக் குழுப் பிரதி நிதியையும் நியமித்துள்ளது. இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கிய பின்னரேயே இக் குழுக்களின் அமைப்பு தீர்மானிக்கப்பட்டிருக்கையில், இந்த மாவட்டக் குழுக்களுக்கான அவசியம் என்ன?

ஏற்கனவே பதற்றமாயுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதியின் மாவட்டக் குழுக்களிலுள்ள இராணுவ அதிகாரிகள் கண்காணிப்புக் குழுவின் அறிக்கைகளுக்கு முரண்பாடான வகையில் அறிக்கைகள் வெளியிடும் பட்சத்தில் நிலைமை இன்னமும் மோசமடைந்து தான் செல்லும்.

ஜனாதிபதியின் இம் மாவட்டக் குழுக்கள் திட்டம் தோல்வியிடைந்தாலும், இல்லை அவற்றிற்கு முழு அதிகாரம் வழங்கப்படாவிட்டாலும், கண்காணிப்புக் குழுவினதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினதும் நம்பகத்தன்மையைச் சிதறடித்து, சமாதான முயற்சிகளையே சிதறடிக்கும் சந்திரிகா குமாரதுங்காவின் முயற்சிகளை முற்று முழுதாக புறக்கணித்து விட முடியாது.



photo: Vijai Ananth

ஜே. எஸ். திஸ்ஸநாயகம், இலங்கையின் வடக்கு கிழக்குச் செய்திகளை தாங்கி வெளிவர ஆரம்பித்திருக்கும் Northeastern Herald வாரப்பத்திரிகையின் ஆசிரியர்.

# பேச்சுக்களினால் பொருளாதாரத்தில் விறுவிறுப்பு

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் இப்போது தான் ஆரம்பமாகியுள்ளன. ஆனால் இவ்வருட ஆரம்பம் முதல் நிலவி வரும் சுமுக நிலை இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிகுந்த நன்மையைச் செய்ய ஆரம்பித்து விட்டது.

இலங்கை மத்திய வங்கியினதும் பொருளாதார நிபுணர்களினதும் கணிப்பின் படி இவ்வருட ஆரம்பத்தில் பெரும் சிக்கலை எதிர்நோக்கிய இலங்கை பொருளாதாரம் இப்போது மீண்டும் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.

இவ்வருடத்தில் இரண்டாம் காற்பகுதியில் பொருளாதாரம் ஒரு சதவீதத்தினால் வளர்ச்சியுற்றதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தொடரும் யுத்தத்தினால் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்த இலங்கையின் பொருளாதாரத்திற்கு கடந்த வருடம் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் பெருத்த இடியாய் இருந்தது. இதனைத் தொடர்ந்து சுதந்திரமடைந்த பின்னர் முதற்தடவையாக கடந்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் வளராமல் வீழ்ச்சியுற்றது. இதே வேளை வெளிநாட்டு முதலீடு 2000ஆம் ஆண்டின் 231 மில்லியன் (அமெரிக்க) டொலரிலிருந்து, 2001ஆம் ஆண்டில் 80 மில்லியன் டொலராகக் குறைந்தது.

உக்கிரமடைந்த யுத்தத்தின் தாக்கமும் கடந்த வருடத்தின் வரட்சியும் இலங்கையின் பொருளாதாரம் மீதான தமது ஆதிக்கத்தை இவ்வருட ஆரம்பப் பகுதியிலும் செலுத்தியது. உதாரணமாக இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிகோலிய யுத்த நிறுத்தமும் சுமுக நிலையும் வெளிநாட்டு முதலீட்டாளர் மத்தியில் இலங்கை பற்றிய நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

இதே வேளை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு நுகர்வுப் பொருட்கள் அதிகளவில் செல்வதும் பொருளாதாரத்தில் ஒரு சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சமாதான முயற்சிகளின் தாக்கம் ஏற்றுமதியிலும் தெரிகிறது: கடந்த ஆகஸ்டில் மட்டும் ஏற்றுமதிகள் 47 சதவீதத்தினால் அதிகரித்தன. சாதகமாக மாறிவரும் பொருளாதாரம் பற்றி அண்மையில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு. விஜேவர்த்தன, இவ்வருடத்தில் பொருளாதார வளர்ச்சி மூன்று வீதமாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

எனினும் வாஷிங்டனில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியம் இன்னும் ஒருபடி மேலே போய் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.75 - 4.00 சதவீதமாய் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

சமாதானம் தொடர்ந்து நீடிக்குமானால் அதன் விளைவு பொருளாதாரத்தைத் தொடர்ந்து சாதகமாக பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. திரு. விஜேவர்த்தனவின் கணிப்பின் படி யுத்தமற்ற சூழ்நிலை மட்டுமே பொருளாதார வளர்ச்சியை வருடாந்தம் 3-4 வீதம் வரை கூட்டும்.

சேரன்

# வறுமையின் நிறம் தமிழ்



ஊரில் தமிழர்களை அதிகளவில் காணவில்லையே என்று ஆதங்கப்பட்ட ஒரு கவிஞருக்கு, தமிழர்களில் பலர் "காசு வயல் கதிர் அறுக்கக் கனடா போய்ச் சேர்ந்தார்கள்" என்று முதியவர் ஒருவர் மறுமொழி சொன்னதாகத் தனது கவிதையொன்றில் பதிவு செய்கிறார் இளவாலை விஜயேந்திரன்.


கனடாவுக்கு வந்து சேர்ந்த தமிழர்கள் கனவான்களாகவும் செல்வந்தர்களாகவும் தான் வாழ்கிறார்களா? இந்தக் கேள்விக்கான பதில் பெருத்த ஆய்வுக்குரியது. கனடாவில் வாழும் மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கிற மக்களைப் பற்றியும், வறுமையில் வாடும் குழந்தைகளைப் பற்றியும் நிறையத் தரவுகளும் புள்ளிவிவரங்களும் உள்ளன. எனினும், இனத்துவக் குழுமங்கள் (Ethnic Groups) அதிகம் வாழ்கிற நகரங்களில் இனத்துவக் குழுமங்களின் வாழ்க்கைத் தரம், வறுமை நிலை, முன்னேற்றம், வேலை வாய்ப்பு நிலைமைகள் பற்றிப் பரந்த அளவுக்கு ஆய்வுகள் இடம் பெறுவது குறைவாகவே இருந்து வருகிறது.

ஒரு பெரிய விதி விலக்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரொறொன்ரோ நகரில் வாழ்கிற இனத்துவக் குழுமங்களுக்கிடையே காணப்படுகிற அசமத்துவ நிலை பற்றி ஒரு முக்கியமான ஆய்வை யோர்க் பல்கலைக் கழகத்தின் சமூக ஆய்வுக்கான நிறுவனம் செய்திருந்தது. 1996ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டு விவரங்களை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்டிருந்த இந்த ஆய்வின் மூலம் அதிர்ச்சி தரக் கூடிய பல விவரங்கள் வெளியாகின. குறைந்தது 2500 மக்களையாவது கொண்டிருக்கும் 89 இனத்துவக் குழுமங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. கல்வி, வேலை வாய்ப்பு, வருமானம் ஆகிய மூன்று விடயங்களிலும் இனக்குழுமங்களின் நிலை என்னவென்பதைக் கண்டறிவதே திட்டமாக இருந்தது. ரொறொன்ரோ நகரசபையின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், ஐரோப்பிய நாடுகளையும் பிரித்தானியாவையும் சேர்ந்த மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடை-யே மிகப்பெரிய அசமத்துவம் நிலவுவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய இனக் குழுமங்களைச் சார்ந்த மக்களில் 14.4% குடும்-பங்கள் வறுமையில் வாடுகின்றன. பிரித்தானிய மூலத்தைக் கொண்ட மக்களில் 11.4% குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. ஆனால், ஆபிரிக்க, கறுப்பின மக்களின் குடும்பங்களில் 44.6% வறுமையில் வாடுகின்றன. தென்னாசியர்கள் என்ற பொதுப் பிரிவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கின்ற குடும்பங்களின் வீதம் 34.6. அரபு மக்களுக்கு இந்த விகிதம் 45.2 ஆகும். தமிழர்களுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பவர்களின் விகிதம் 53.5 ஆக இருக்கிறது.

குடும்பங்களிலும் தனியே வாழும் தாய்மாருடைய குடும்பங்களில் தான் மிக அதிகளவில் வறுமை காணப்படுவதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் ரொறொன்ரோ நகரசபை எல்லைக்குள் வாழ்கிற பல்வேறு இனத்துவக் குழுமங்களை மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் (Most Severely Disadvantaged). மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் (Severely Disadvantaged), கணிசமான அளவு பிற்படுத்தப்பட்டோர் (Significantly Disadvantaged) மற்றும் வசதியானோர் என்று வகைப்படுத்துகிறது இந்த ஆய்வு.

மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் கானா நாட்டைப் பிறந்தகமாகக் கொண்டோர், ஆப்ஃகானிஸ்தானியர், எதியோப்பியர் மற்றும் சோமாலியர்கள் அடங்குகிறார்கள். மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்ற வரிசையில் தமிழர்கள் பாகிஸ்தானியர், பங்களாதேஷ் மக்கள், பிற ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தோர், அரபு மக்கள், மத்திய அமெரிக்க மக்கள் போன்றோர் அடங்குகின்றனர்.

மாத வருமானத்தின் அடிப்படையில் இந்த இனத்துவக் குழுமங்களை ஆய்வு செய்து பட்டியலிட்ட போதும் தமிழர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவிலேயே அடங்குகிறார்கள். அவர்களுடைய சராசரி ஆண்டு வருமானம் குடும்பத்துக்கு 30,000 டொலர்களுக்கும் குறைவாகவே இருக்கிறது. எனவே ரொறொன்ரோவில் வறுமையின் நிறம் தமிழ் என்று சொல்வது பெருமளவுக்குப் பிழையற்ற கூற்று என்று கருதலாம்.





ரொறொன்ரோவிலுள்ள இனக்குழுமங்களின் ஆண்டு வருமானம்

எனினும் இந்த ஆய்வு தமிழ்ச் சமூகம் பற்றியோ அல்லது ஏனைய 88 இனக்குழுமங்களைப் பற்றியோ முற்று முழுதான படம் ஒன்றைத் தருகிறது என்று சொல்ல முடியாது. ரொறொன்றோ நகர சபையின் எல்லைக்குள் வாழும் குடும்பங்கள் மட்டுமே இங்கு கவனத்தில் எடுக்கப் பட்டுள்ளன. தமிழர்களில் பெரும்பாலானோர் ஸ்காபொ-ரோ, வட யோர்க், மெல்ல மெல்ல மார்க்கம் என்று பரவி விட்ட படியால் இந்த ஆய்வு பெருமளவு தமிழ்க் குடும்பங்களைக் கணக்கில் எடுக்கவில்லை. கணக்கில் எடுக்கப்பட்ட பல குடும்பங்களும் தங்களை 'சிறிலங்கா' என்று அடையாளப்படுத்தியமையால் Sri Lankans என்ற ஒரு தனிப் பிரிவு வேறு ஏற்பட்டுள்ளது. சிறிலங்கன் என்ற பிரிவுக்குள்ளேயே சிங்களவர்களும் அடங்குகிறார்கள்.

இத்தகைய சிக்கல்கள் இருந்தாலும், ரொறொன்ரோ நகரசபை எல்லைக்குள் செய்யப்பட்ட இந்த ஆய்வு முழுத் ரொறொன்ரோ மாநகரின் அசமத்துவத்தைப் பிரதி பலிக்கிறது என்பதை நாம் கண்டு கொள்ள முடியும். சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீடு மற்றும் சமூக பொருளியல் புள்ளி விவரங்கள் முற்று முழுதாக வெளியாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை ஆகலாம் என்று தெரிய வருகிறது. எனவே இந்தப் புள்ளி விவரங்களையும் கணக்கில் எடுத்து இன்னுமொரு பெரிய சமூகவியல் - பொருளியல் ஆய்வை நடத்துவதற்கு இப்போதே முயற்சிகள் இடம் பெறுகின்றன.

எம்மைப் பற்றிய மிதமிஞ்சிய கற்பனைகளும், வெளிநாடுகளில் எம்மவரது கனவுகளும் புனைவுகளும் பற்றிய நிதானமான பார்வையை நாங்கள் உருவாக்கிக் கொள்ள இத்தகைய சமூகவியல் ஆய்வுகள் எங்களுக்கு உதவக் கூடும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சமூகவியல், உளவியல், மனிதப் பண்பியல், அரசியல் விஞ்ஞானம் புள்ளி விவர இயல் போன்ற அறிவுத் துறைகளின் தேவையும் அவசியமும் எங்களுடைய சமூகத்தில் உணரப்படவில்லை. டாக்குத்தரும், எஞ்சினியரும், கணினிக் கணக்கரும் தான் எங்களுடைய உலகம் என்றால் இன்னும் நாங்கள் பிரித்தானியர் ஆட்சியில் காலனித்து மன நிலையில் தான் வாழ்கிறோம் என்று அர்த்தம்!

ரொறொன்ரோவில் வாழும் இனக் குழுமங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் வீதம்




## தமிழர் உலகம்

1. வடஅமெரிக்காவில், தமிழர்கள் அதிகமாக வாழும் நாடு கனடா. ஏறத்தாழ 250,000 தமிழர்கள் வாழ்கிறார்கள்.

2. கனடாவில் தமிழ் ஊடக நிலையங்கள்

அ. 24 மணிநேர தொலைக்காட்சி நிலையங்கள் - 3

ஆ. 24 மணிநேர வானொலி நிலையங்கள் - 3

இ. வாராந்த, அரைமாத, மாத, காலண்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் 10 இற்கு மேல்

ஈ. வருடாந்த விளம்பர வியாபார கைநூல்கள் - 5

* இதனைவிட மேலதிக தொலைக்காட்சி, வானொலி சேவைகள் நடைபெறுகின்றன.

3. உலகில் மக்கள் பேசும் மொழிகளின் வரிசையில் தமிழ் 21 வது இடத்தில் உள்ளது.

4. இந்தியாவில் வாழும் தமிழர்கள் ஏறத்தாழ ஏழு கோடி (70 மில்லியன்)

5. தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் ஏறத்தாழ ஆறுகோடி (60 மில்லியன்)

6. அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர் - 40 ஆயிரத்திற்கு மேல்

# சிந்துவெளி எழுத்துமுறை: தொடரும் புதிர்

ந. அசோகன்

தமிழர்தான் சிந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தினை உருவாக்கியவர்களா? அப்படியானால்
தமிழர் / திராவிடர் தான் இந்தியாவின் மூத்த குடிகளா?

இந்தக் கேள்விகள் இன்று தமிழ் மக்களிடையே பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றன.

துரதிர்ஷ்டவசமாக சிந்துவெளிப் பள்ளத்தாக்கின் தொன்மையும், அதன் சரித்திரமும் இன்னமும் தீர்க்கப்படாத புதிர்களாகவே இருந்து வருகின்றன. இதற்கு ஒரு காரணம் இந் நாகரிகத்தின் எழுத்துக்கள் இன்னமும் மொழிபெயர்க்கப்படாமையே.

## சிந்துவெளி நாகரிகம்

பாகிஸ்தான் நாட்டின் மேற்குப் பகுதியில் சிந்துநதி பாய்ந்தோடி அராபிக் கடலில் விழுகிறது. சிந்து நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் 1920இல் நடைபெற்ற புதைபொருள் அகழ்வாராய்ச்சியின் போது ஹரப்பா, மொகஞ்சதரோ என்ற இடங்கள் முன்னொரு காலத்தில் பெரும் நகரங்களாகத் திகழ்ந்தன என்பது ஐயத்துக்கிடமின்றி நிலை நாட்டப்பட்டது. இந்த நகரங்களைக் கட்டியெழுப்பியோரின் நாகரிகத்துக்கு "சிந்துவெளி நாகரிகம்" என்ற பெயரும் வழங்கப்பட்டது.

தற்காலத்துப் பாகிஸ்தானையும் மேற்கு இந்தியாவையும் உள்ளடக்கிய பாரிய நிலப்பரப்பெங்கும் இந்த நாகரிகம் பரவியிருந்தது. இதன் கடைசிக் கட்டம் கி.மு. 2500 இலிருந்து கி.மு 1800 வரை நீடித்து இருந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இதற்கு முன்னரே பல நூற்றாண்டு காலம் இந்தப் பிரதேசத்தில் வசித்து வந்த மக்கள் தான் படிப்படியாக இந்த நாகரிகத்தை உருவாக்கினர் என்றும் கருதப்படுகிறது. இவர்கள் யார் என்பதைப் பற்றித் திட்ட வட்டமாக எதுவும் இன்னும் தெரியவில்லை.

## எழுத்துமுறை (scripts)

சிந்து நதிப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆய்வுகளின் போது பல முத்திரைகளும் *(seals)* முத்திரைக் கற்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் பட உருவமுள்ள எழுத்துக்கள் இருந்தன. முன்பின் தெரியாத ஓர் எழுத்து முறையைக் கிரகித்து அறிந்து கொள்ளும் முயற்சி "மறைவகற்றல்" *(decipherment)* எனப்படும். சிந்துவெளி முத்திரைகளின் எழுத்துக்களைப் படிக்க முடிந்தால் அவற்றை எழுதிய மக்களைப் பற்றிய புதிர்களை எல்லாம் அவிழ்க்கலாம்.

## சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சில முத்திரைகள்

புதைபொருள் ஆராய்ச்சியாளர் விசித்திரமான எழுத்துக்களைக் கொண்ட பண்டங்களைக் கண்டெடுத்தது பலமுறை நடந்திருக்கிறது. சில வேளைகளில் இவ்வகையான எழுத்து முறைகள் வெற்றிகரமாக மறைவகற்றப்பட்டன. பதினெட்டாம் நூற்றாண்டில் எகிப்தியப் பட எழுத்துக்கள் ஒரு புதிராகவே இருந்தன. 1799ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட "றொசெற்றாக் கல்" என்ற கல்வெட்டில் ஒரே செய்தி பட எழுத்திலும், கிரேக்க, பின்லாந்து டெமோட்டிய எழுத்துகளிலும் எழுதப்பட்டிருந்தது. கிரேக்க எழுத்து முறையைப் படிக்கத் தெரிந்ததால் அறிஞர்கள் எகிப்திய பட எழுத்து முறையையும் ஊகித்து அறிந்து கொள்ள முடிந்தது.


துரதிர்ஷ்டவசமாக இப்படியான ஒரு மொழி பெயர்ப்போடு சிந்துவெளி எழுத்து முறையில் செய்தி எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

சிந்துவெளியிலிருந்து உதித்த புராதனமான, கிரகிக்கக் கூடிய ஆவணம் இருக்கு வேதமே. ஆனால் சிந்துவெளி நாகரிகம் மறைந்த சில நூற்றாண்டுகளின் பின்னரே வேதகாலம் ஆரம்பமானது. இந்தத் தொடர்ச்சியறுப்பால் தான் சிந்துவெளி வாசிகளைப் பற்றிய விபரங்கள் தெளிவாகத் தெரியாமற் போனது.

சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் எழுத்துத் தொடர்களும் மிகவும் குறுகலானவை. அனேகமாக ஐந்தாறு சின்னங்களே காணப்படுகின்றன. மறைவகற்றலுக்கு இதுவும் ஒரு பாரிய இடையூறாக இருக்கிறது.

## மறைவகற்றலின் வரலாறு: பேராசிரியர் பர்பொலவின் முயற்சிகள்

சிந்துவெளி எழுத்து முறை மறைவகற்றும் ஆய்வில் குறிப்பிடத்தக்கவர் பின்லாந்திய இந்தியவியலாளர் பேராசிரியர் அஸ்கொ பர்பொல. 1960களில் தன்னுடைய ஆய்வுக-




ளைத் தொடங்கிய பர்பொல, இந்தத் துறையில் பல நூல்களையும் கட்டுரைகளையும் பிரசுரித்துள்ளார்.

சிந்துவெளி எழுத்து முறையில் இதுவரை கிடைத்த முத்திரைகளை ஆராய்ந்த பர்பொல கிட்டத்தட்ட 400 குறிகளை இனம் பிரித்துக் கண்டுள்ளார். இந்த எண்ணிக்கை மூலம், சிந்துவெளி எழுத்துமுறை "ரீபஸ்" அல்லது "படப்புதிர்" கோட்பாட்டின்படி எழுதப்படும் சொல் - அசை (*logo-syllabic*) வகையைச் சேர்ந்தது என்ற முடிவுக்கு அவர் வந்தார். இவ் வகையான எழுத்து முறையில் பொதுவாக அசைகள் (*syllables*) அல்லது சொற்கள் படவுருவத்தில் எழுதப்படுவன. ஆனால் இந்தப் படவுருவங்கள் சில வேளைகளில் அந்தச் சொல்லின் ஒலி வடிவத்தையுடைய வேறு பொருள் கொண்ட சொற்களையோ அசைகளையோ குறிக்கவும் பயன்படலாம். இந்தப் பொருளை விளங்கிக் கொள்ள ஒரு கற்பனையான உதாரணத்தைச் செய்து பார்ப்போம்.

### கதை

ஒரு கதாயுதத்தின் படவுருவத்தை "கதை" என்ற சொல்லைக் குறிப்பிடப் பயன்படுத்துவோம். "கதை" என்ற சொல்லுக்கு உள்ள பரிச்சயமான மற்ற அர்த்தத்துக்கு (*story*) படவுருவம் வரைவது இலகுவல்ல. ஆகவே இதே படவுருவத்தையே வீமனின் கதை ஆயுதத்துக்கும் பாட்டி சொன்ன கதைக்கும் பயன்படுத்துவோம்.

### அருகதை

இப்பொழுது "அருகதை" என்ற சொல்லை எப்படிக் குறிப்பிடலாம்? "அரு" என்பது "அறு" அல்லது "ஆறு" போல ஒலிக்கிறது. ஆகவே இதனை ஆறு கோடுகளால் குறிப்பிடலாம். அதற்குப் பின்னால் வரும் "கதை" என்ற சொற்றுண்டுக்குத் தனியான அர்த்தம் எதுவும் இல்லா விட்டாலும் அதன் ஒலிவடிவத்தை நாங்கள் ஏற்கனவே உபயோகித்த "கதை" என்ற படவுருவத்தால் குறிப்பிடலாம். இப்படியான எழுத்துமுறையைப் படப் புதிர் எழுத்துமுறை என்பர். ஏனென்றால் இந்த எழுத்துக்களைப் படித்துப் புரிந்து கொள்வது ஒரு புதிரை அவிழ்ப்பது போல இருக்கும். ஒரு படவுருவத்தின் பொருள் அதன் வடிவத்தில் மட்டுமல்ல அது தோன்றும் சந்தர்ப்பத்திலும் தங்கியிருக்கும்.

ஆகவே, சிந்துவெளி எழுத்து முறையை மறைவகற்ற முதல் அவை இருக்கும் சந்தர்ப்பங்கள் பற்றியும் அவையால் எழுதப்பட்ட மொழியைப் பற்றியும் சில அனுமானங்கள் செய்ய வேண்டும். அல்லாவிட்டால், ஆராய வேண்டிய சாத்தியக் கூறுகள் அளவுக் கடங்காது.

கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் உபயோகத்தைப் பற்றி ஒரு துப்பு கிடைத்திருக்கிறது. அனேகமான முத்திரைகள், முத்திரைக் கற்களும் களியால் செய்யப்பட்ட தகடுகளிலே உள்ளன. முத்திரைக் கற்களை களித் தகடுகளில் பதிப்பதன் மூலம் முத்திரைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

குஜராத்தில் லோதல் என்ற இடத்தில் ஓர் எரிந்து அழிந்து போன சிந்துவெளி நாகரிக காலத்துப் பண்டகசாலையின் சிதைவில் முத்திரைகளைக் கொண்ட நூற்றுக் கணக்கான களித்தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தத் தகடுகளில் பலவும் துணி, நாணற் புல், பாய் போன்ற பொதிகளோ மூட்டைகளோ செய்யத்தக்க பொருட்களோடு சேர்ந்திருந்ததாகத் தெரிவதால் இந்த முத்திரைகள் வணிகம் சம்பந்தமானவை என்று பர்பொல கருதுகிறார்.

சுமேரிய, பபிலோனிய நாகரிகங்களின் நகரமான மொசொபொத்தேமியாவிலும் இப்படியான வணிக சம்பந்தமான முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றிலுள்ள எழுத்துக்கள் பெரும்பாலும் தனியாட்களின் பெயர்களையும் சிலவேளை பதவி பட்டங்களையும் குறிப்பிடுவன. ஆகவே சிந்துவெளி முத்திரைகளும் இத்தகையன என்று பர்பொல அனுமானிக்கிறார்.

அடுத்து இந்த முத்திரைகள் எழுதப்பட்ட மொழியைப் பற்றி சில ஊகங்கள் செய்ய வேண்டியது அவசியம். எந்த மொழி உபயோகிக்கப் பட்டிருக்கிறது என்று ஓரளவு தெரிந்தால் தான் சொற்களின் ஒலி வடிவங்களைக் கருத்திற் கொண்டு படப் புதிர்களை அவிழ்க்கப் பார்க்கலாம்.

### ஒரு மொழியா பலவா?

சிந்துவெளியின் பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன. ஆகவே இந்தப் பிரதேசமெங்கும் ஒரே எழுத்துமுறை தான் வழக்கில் இருந்தது என்ற முடிவுக்கு வரலாம்.

சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட எருது இலச்சினை



ஆனால் இதிலிருந்து உடனடியாக இந்த மக்கள் எல்லோரும் ஒரே மொழியைத்தான் பேசினார்கள் என்ற முடிவுக்கு வரமுடியாது. உதாரணமாக இன்று உலகத்தில் பல மொழியினர் உரோம எழுத்துக்களை உபயோகிக்கிறார்கள். எழுத்து முறை ஒன்றேயென்றாலும் எழுதப்படும் மொழிகள் முற்றிலும் வேறுபட்டவையாக இருக்கலாம்.

ஆனால் சிந்துவெளி முத்திரைகளின் மீள்திறன் (*frequency*) ஆய்வின் மூலம் அந்தப் பிரதேசத்தின் வெவ்வேறு இடங்களிலிருந்து பெற்ற முத்திரைகளின் எழுத்துத் தொடர்களும் ஒரே மாதிரியானவை என்று தெரியப்பட்டது. ஆகவே சிந்துவெளியெங்கும் ஒரே மொழியே பேசப்பட்டது என்று கருதலாம்.

## திராவிட மொழியா இந்தோ-ஐரோப்பிய மொழியா?

சிந்துவெளி முழுவதும் ஒரே மொழி நிலவியதென்றால், அடுத்த கேள்வி அது என்ன மொழி? இன்றுள்ள வேறெந்த மொழியோடும் தொடர்பற்ற ஒரு மொழியாக இது இருந்திருக்கலாம். அப்படியாயின் இதனை மறைவகற்றும் சாத்தியக் கூறு மிகவும் குறைவு. இன்றுள்ள மொழிகளுடன் தொடர்புள்ளதுதான் என்றால் இந்தப் பிரதேசத்தின் வரலாற்றைக் கருத்தில் கொள்ளும் போது, இது ஒரு திராவிட மொழி அல்லது இந்தோ-ஐரோப்பிய மொழியாக இருப்பதுதான் சாத்தியம். பர்பொல இது ஒரு முன் திராவிட மொழியாக (*proto - Dravidian*) இருக்க வேண்டும் என்று கருதுகிறார். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இந்தோ-ஐரோப்பிய மொழியின் சாத்தியத்தை அகற்றும் முக்கிய காரணம் குதிரை. இந்திய உபகண்டத்திற்கு வந்த இந்தோ-ஐரோப்பிய நாடோடிகளின் கலாசாரத்தில் குதிரை (அஸ்வம்) மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. இருக்கு வேதத்திலும் மற்றைய சமகால நூல்களிலும் குதிரையின் மகத்துவம் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் சிந்துவெளியிலிருந்து அகன்றெடுத்த பொருட்களில் குதிரைகளைப் பற்றிய தடயம் எதுவும் தெரியவில்லை. அத்துடன் திராவிடக் கடன்சொற்கள் வடகிழக்கு இந்தியாவில் உருவாக்கப்பட்ட, இருக்கு வேதம் போன்ற, வடமொழி நூல்களில் காணப்படுகின்றன. இன்றும் சிந்துவெளியில் உள்ள நகர, பள்ளி, பட்டண, கோட்டை என்ற முடிவுகள் கொண்ட ஊர்ப் பெயர்களில் திராவிட மொழிச் செல்வாக்கைக் காணலாம்.

## மறைவகற்றலில் சீர்மை

பர்பொலவின் ஆய்வின் ஒரு முக்கிய அம்சம் அவரின் ஆய்வு முறையே. ஒவ்வொரு மறைவகற்றல் விளக்கத்துக்கும் அவர் பல்வேறு வழிகளில் ஆதாரம் காண முயற்சிக்கிறார். இதன் விளைவாக ஒரு சில பத்துச் சின்னங்களுக்கே அவர் மறைவகற்றும் விளக்கம் கொடுக்க முடிந்திருக்கிறது.

இது ஒரு திறமான நேர்மையுள்ள ஆராய்ச்சியின் வரைவிலக்கணம். ஓர் ஆதாரமும் தராமலோ (அடித்துச் சொல்லுவதன் மூலம் நிரூபித்தல்) அல்லது ஓரிரு ஆதாரங்களுடன் மட்டுமோ வரும் விளக்கங்கள் நம்பத்தகுந்தவை அல்ல.

## அரசியல் ஊடுருவல்

இனி பலரும் சிந்து நதிப்பள்ளத்தாக்கின் சரித்திர ஆராய்ச்சியில் பாய்வதற்கு முக்கியமானதொரு காரணம் அரசியல். ஒரு புறம் சிந்துநதி எழுத்து முறை வடமொழியோடும் வேதங்களோடும் தொடர்பு கொண்டிருக்கிறது என்று நிரூபிக்கப் பலர் விரும்புகிறார்கள். மறுபுறம் இந்து வாசிகளின் வழித் தோன்றல்கள் நாம் என்று உரிமை கொண்டாட தமிழரும் மற்றும் திராவிட மொழி பேசுவோரும் முன்னிற்கத் தயங்குவதில்லை.

பர்பொலவின் ஆய்வுகள் இந்த முடிவையே நாடிச் சென்றாலும், இன்னும் முற்றுமுழுதான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்பது முக்கியம்.

இந்த ஆய்வுத் துறையில் மிகவும் மதிப்புப் பெற்ற இன்னொரு ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன். இவர் பர்பொலவின் விளக்கங்களை அனேகமாக ஏற்றுக் கொண்டாலும், முற்றுமுழுதான ஆதாரம் வருவதற்கு புதைபொருள் ஆராய்ச்சியில் எதிர்பாராத முன்னேற்றம் வந்தாலன்றிக் கிடையாது என நினைக்கிறார்.

இன்னொரு ஆய்வாளரான பாகிஸ்தானிய புதைபொருள் ஆராய்ச்சியாளர் அஹ்மத் ஹஸன்டனி, தெற்கு நோக்கிய திராவிடப் புலம் பெயர்வு பற்றி ஒரு கேள்விக் குறி எழுப்பியிருக்கிறார். சிந்துநதி நாகரிகத்தைக் கட்டிய மக்கள் தெற்கு நோக்கித் தள்ளப்பட்டனர் என்றால் அவர்கள் தென்பகுதியில் ஏன் அவ்வாறான ஒரு நாகரிகத்தைக் கட்டி எழுப்பவில்லை? கட்டணைகள் போன்ற சிந்து நதிப் பிரதேசத்திலிருந்த கட்டடக்கலை நுணுக்கங்கள் தென் இந்தியாவில் பல நூற்றாண்டுகளின் பின்னரே தான் தோன்றின.


மேற்கொண்டு அறிய
www.harappa.com/script/scriptres.html
asnic.utexas.edu/asnic/subject/peoplesandlanguages.html
www.harappa.com



ந. அசோகன் - பின்லாந்தில் வாழ்ந்துவரும் இவர் சரித்திர ஆய்வுகளில் ஆர்வமுடையவர்.

## மறைவகற்றப்பட்ட சின்னங்கள்

### • மீன் சின்னம்



பர்பொல விபரிக்கும் முதலாவது சின்னம் "மீன் சின்னம்" எனப்படும். தமிழில் மட்டுமல்ல மற்ற திராவிட மொழிகளிலும் மீனைக் குறிக்கும் சொற்கள் "மீன்" என்ற அடியிலிருந்துதான் எழுகின்றன. தமிழில் (விண்) மீன் என்றால் நட்சத்திரம் என்றும் பொருள்படும். ஆகவே மீன் சின்னம் இரண்டு கருத்துக்களிலும் உபயோகிக்கப்பட்டிருக்கலாம் என்று பர்பொல கருதுகிறார்.

சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தண்ணீரும் நீர்வாழ் உயிரினங்களும் முக்கியம் போலத் தெரிகிறது. மீனைத் தவிர, நீர் எருமை போன்ற படங்களும் புதைபொருள் ஆராய்ச்சியில் எடுக்கப்பட்ட பொருள்களில் காணப்படுகின்றன. ஆகவே இந்த மீன் சின்னம் ஒரு நீர் சம்பந்தப்பட்ட தெய்வத்தையும் குறிப்பிடலாம். நட்சத்திரம் என்ற பொருளில் இந்த மீன் சின்னம் கார்த்திகா, ரேவதி போன்ற தற்கால தனியாட்களின் பெயர்களிலும் தோன்றியிருக்கலாம்.

### • காப்புச் சின்னம்

வேறு ஒரு சின்னத்தை இப்போது பார்க்கலாம். இரண்டு குறுக்குவெட்டும் வளையங்கள் உள்ள சின்னத்தைக் "காப்புச் சின்னம்" என்று அழைப்போம். இந்தச் சின்னம் ஆறு கோடுகளுடன் சேர்ந்த மீன் ("அறுமீன்") சின்னத்தின் ஒத்தகருத்துப் போல சில முத்திரைகளில் வருகிறது. பழந்தமிழில் முருகனை "அறுமீன் காதலன்" என்று குறிப்பிடுவதால் அறுமீன் என்பது முருகனைக் குறிக்கலாம். ஆகவே காப்புச் சின்னமும் முருகனையே குறிக்கும் என்கிறார் பர்பொல. இதனை "முருகு" என்று படிக்கலாம். முருகு என்பது காப்பு அல்லது வளையல் என்றும் பொருள்படும். முருகன் திராவிட மக்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு தெய்வம். ஆகவே, சிந்து நதிப் பள்ளத்தாக்கு வாசிகள் திராவிடரானால், அவர்களிடம் முருகவழிபாடு இருந்திருப்பது எதிர்பார்க்கத்தக்கதே.

# அருகிவரும் பொன்னிறம்

பொன்னிறம் அதாவது *blonde* - நிற தலைமயிர் கொண்டோரை நாம் சந்தித்திருக்கிறோம். மேற்குலக நாடுகளில் இவர்களை, குறிப்பாக இந் நிறத் தலைமயிரைக் கொண்ட பெண்களைப் பற்றி பல பிரமைகள் உள்ளன. அழகானவர்கள், ஆனால் முட்டாள்கள் என்பது முக்கியமான பிரமை.

ஆனால் இன்னமும் 200 வருடகாலத்தின் பின்னர் இத்தகைய தலைமயிர் கொண்டவர்கள் இல்லாமல் போய்விடுவர் என ஜேர்மன் நாட்டு ஆய்வு ஒன்று முடிவுக்கு வந்திருக்-கின்றது.

*Blonde* தலைமயிரைக் கொண்டவர்களின் தொகை அருகி வருவதாகவும், 2202ஆம் ஆண்டளவில் இவர்கள் தொகை பூச்சியத்தை தொட்டுவிடுமெனவும் இவ் ஆய்வை அளித்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதற்குக் காரணம் பொன்னிறத் தலைமயிரின் உருவாக்கத்திற்குக் காரணமான பரம்பரை அணுதான். ஒரு பிள்ளை பொன்னிற மயிருடன் பிறப்பதற்கு அப் பிள்ளையின் பெற்றோரின் பெற்றோர் *blonde* தலைமயிருடையவராய் இருத்தல் வேண்டும்.

உலகின் *blonde* 'வர்க்கத்தின்' பூர்வீகம் வட ஐரோப்பா, குறிப்பாக ஸ்கன்டிநேவிய நாடுகளாகும். எனினும் புலம்பெயர்வு, குடிவரவு, கலப்புத் திருமணம் போன்ற காரணங்களால் பொன்னிற தலைமயிருள்ளோர் எண்ணிக்கை இங்கு குறைந்து வருவதாக பிரித்தானிய எழுத்தாளரான கதி பிலிப்ஸ் (*Kathy Phillips*) தனது புத்தகமான *The Vogue Book of Blondes* இல் குறிப்பிடுகிறார்.

ஜேர்மன் ஆய்வின் கணிப்பின் படி, உலகின் கடைசி *blonde* பேர்வழி பின்லாந்திலிருந்து தான் வருவாராம்.



# பாக்கு நீரிணையில் இராமர் கட்டிய பாலத்தின் சுவடுகள்

அமெரிக்க தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா (*NASA*) வெளியிட்டுள்ள விண்வெளியில் எடுத்த படங்கள் பாக்கு நீரிணையில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு பாலம் இருந்ததிற்கான அறிகுறிகளை காட்டுகிறது.

நீரினுள் அமிழ்ந்து இருக்கும் சங்கிலி தொடர் போன்ற மணல் திட்டுக்களை (*Shoal*) இச்செய்மதிப் படங்கள் தெளிவாக காட்டுகின்றன. 30கிலோ மீற்றர் நீளமான இந்த பாலத்திற்கு தற்போது "ஆதாமின் பாலம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் தனித்துவமான வளைவும், மணல் திட்டுக்களின் தொகுப்பும் இது ஒரு செயற்கையான பாலம் என்பதை தெளிவுபடுத்துகிறது. இந்தப்பாலம் கிட்டத்தட்ட 17 இலட்சம் வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.



இராமாயணத்தில் வரும் இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையே இராமர் கட்டுவித்த பாலமாக இது இருக்கும் என *Indolink* என்ற கலிபோர்ணியாவை சேர்ந்த செய்தித்தாபனம் ஒன்று தனது இணையத்தளத்தில் தெரிவிக்கிறது. இந்த பாலமானது இராமர், சீதையை சிறை மீட்க இலங்கை வருவதற்காக கட்டப்பட்டது. இதற்கு ஆதாரமாக இந்த இணையத்தளம் இராமாயணம் நடந்தது என நம்பப்படும் "திரேதாயுகம்" காலப்பகுதியை சுட்டிக் காட்டுகிறது.

இந்துக்களின் பஞ்சாங்கப்படி இற்றைக்கு 8 இலட்சம் வருடங்களுக்கு முற்பட்ட 13 இலட்சம் வருடங்கள் "திரேதாயுகம்" எனப்படும்.

நன்றி:
www.indolink.com/Religion/r091702-130924.php

## இந்துக்களின் வருடங்கள்

| | | |
|---|---|---|
| முதல் 1,728,000 வருடங்கள் | = | கிருதாயுகம் |
| அடுத்த 1,296,000 வருடங்கள் | = | திரேதாயுகம் |
| அடுத்த 864,000 வருடங்கள் | = | துவாபரயுகம் |
| அடுத்த 432,000 வருடங்கள் | = | கலியுகம் |

தற்போது நடைபெறுவது கலியுகத்தில் 5104 ஆவது வருடம்

தகவல்: நட. கருணாகரன்
அவுஸ்ரேலியா

*Export & Import,*
*Retailer & Gift Items,*
*Children wear*

# RASHI SILKS



ஹர்சிதா
பிரியதர்சினி
ரம்யா
சிவாஞ்சி
அஸ்வினி
சாலினி
பிரியா
ரியா
டியா
சாவாந்தி
ஸ்ரீவித்யா
ஆராதனா
சௌந்தர்யா
ஜோதிகா
தரிகா
அவந்திகா
ரசிதா
நித்யா

# ராசி சில்க்

**2649 Eglinton Ave. East**
**Toronto, ON M1K 2S2, Canada**

**416.264.1939, 416.264.0768**

# 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் தமிழ் யாருடையது?
# இலங்கைத் தமிழரினுடையது!

கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படம் இவ்வருட ஆரம்பத்தில் வெள்ளித் திரைக்கு வந்தவுடன், இலங்கையை மையமாக வைத்த அதன் கதை பல நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியது. இப்படத்தின் தமிழ், தமிழ் ஊடகங்களிலும், தமிழர் அல்லது தமிழ் சினிமா சம்பந்தப்பட்ட இணையத்தளங்களிலும் கண்டனத்தைக் கிளப்பியது.

இலங்கையில் தமிழ் பல்வேறு விதமாகப் பேசப்படுகின்றது: கொழும்புத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ், ஏன் யாழ்ப்பாணத் தமிழில் கூட பல பிரிவுகள் உண்டு. ஆனால் கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படத்தில் நந்திதாதாசும், இன்னும் பல "இலங்கையர்களும்" பேசும் தமிழோ புதுமையானது.

"அவர்கள் கேட்பதெல்லாம் ஒரு குடை நிழல்... நாம் கொடுத்ததோ அகதி முகாம் என்ற பெயரில் திறந்த வெளிச்சிறை" என்று தமிழகத்தின் இராமேஸ்வரம் அகதி முகாமை கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற ஒரு பிரதான நீரோட்டப் படம் சாடுவது என்றால் அதைப் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் படத்தைத் தயாரித்தவர்களுக்கு இலங்கைத் தமிழ் பற்றி அறிவுறுத்த, ஆலோசனை வழங்க, இலங்கைத் தமிழர் கிடைக்காமலா போய்விட்டனர்? அண்மைக் காலங்களில் இந்திய திரைப்பட உலகம் இலங்கைப் "பிரச்சினை" பணத்தை ஈட்டித் தரும் ஒரு விடயம் என்பதைக் கண்டு பிடித்து விட்டது என்ற முடிவுக்குப் பலர் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படமும் எம்மவர் அவலங்களை விகாரமாக சந்தைப்படுத்திப் பணம் சம்பாதிக்கும் ஒரு முயற்சி தானா?

ரொறொன்ரோவில் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் கன்னத்தில் முத்தமிட்டால் திரையிட்ட போது இப்படத்தின் இயக்குநர் திரு. மணிரத்தினமும் இங்கு வந்திருந்தார். திரு. மணிரத்தினத்தைச் சந்திக்கப் போகிறோம் என்பது உறுதியானவுடன் தமிழோசையின் சார்பில் பல கனடாவாழ் தமிழரை அணுகி அவரை என்ன கேள்வி கேட்கலாம் என்று கேட்டபோது, அனைவரினதும் பதில் ஒன்றாகத்தான் இருந்தது (பதில் தரமுன்னர், தாமும் மணிரத்தினத்தைச் சந்திக்க வரலாமா எனக் கேட்டனர் அனைவரும் என்பது வேறுவிடயம்): ஏன் இப்படி இலங்கைத் தமிழரை அவமதித்தீர்கள்?

எனவே நாமும் திரு. மணிரத்தினத்திடம் இக் கேள்வியைக் கேட்டோம். அவரோ தமது பதிலில், தாம் இப்படத்திற்காக பல இலங்கைத் தமிழர்களை விசேடமாக வேலைக்கமர்த்தியதாகக் கூறிவிட்டார்.

"படம் முழுக்க *dialogue* எழுதின பிறகு ஒரு பெரிய *Srilankan write,r dialogue* ஐ முழுக்க *Jaffna* தமிழுக்கும் *Colombo* தமிழுக்கும் தனித்தனியே *correct* பண்ணியிருக்காங்க".

இதனைவிட படப்பிடிப்பின் போது இரு இலங்கைத் தமிழர்கள் இலங்கைத் தமிழைச் சரிப்படுத்தவென இருந்ததாகவும், நந்திதாதாஸ் படத்துக்குரிய தனது குரல் பதிவைச் செய்யும் போது பதிவறையில் ஒரு இலங்கைத் தமிழர் இருந்து அந்நடிகையின் "ஒவ்வொரு உச்சரிப்பையும்" திருத்தியதாகவும் இயக்குநர் மணிரத்தினம் கூறினார்.

அவர் எமக்கு அதிர்ச்சி தரும் ஒரு செய்தியையும் கூறுகினார். அதாவது இலங்கைத் தமிழராக நடித்த துணை நடிகர், நடிகைகள் அனைவருக்கும் குரல் கொடுத்தது இலங்கைத் தமிழர்தானாம். அதிலும் யாழ்ப்பாணத் தமிழராக வருபவர்களுக்கு யாழ்ப்பாணத் தமிழரும், கொழும்புத் தமிழர்களாக வருபவர்களுக்கு கொழும்புத் தமிழரும் தான் குரல் கொடுத்தனராம்.

இதுவெல்லாம் போதாதென்று உரையாடல்களும், அவற்றின் பதிவுகளும் வேறு இலங்கைத் தமிழராலும் கண்காணிக்கப்பட்டனவாம். "நாங்க எடுத்துக்கிட்ட முயற்சி (பற்றி) தெரிஞ்சதுன்னா இன்ன மாதிரி பேச்சு வராது" என்று கூறும் திரு. மணிரத்தினம், இப்படத்தில் இலங்கை சம்பந்தப்பட்ட காட்சிகளையும் உரையாடல்களையும் யதார்த்தமாகக் காட்ட வேண்டும் என்று எடுத்த முயற்சிகளில் "எள்ளளவு கூட" குறை ஏதுமில்லை எனக் கூறினார்.

ஆனால் திரு. மணிரத்தினம் அவ்வளவு இலகுவாக இலங்கைத் தமிழர் எழுப்பும் கண்டனக் குரலிலிருந்து தப்பித்து விட முடியாது. அவர் இவ்வளவு முயற்சிகள் எடுத்திருந்தால் ஏன் இவ்வளவு பிழைகள் ஏற்பட வேண்டும் என்று "உலகத் தமிழோசை" சார்பில் கேட்டோம்.


அதற்கு அவரது பதில் "அவங்களுக்கு (இலங்கைத் தமிழராக நடித்த துணை நட்சத்திரங்களுக்கு குரல் கொடுத்த இலங்கைத் தமிழருக்கு) ஸ்ரீல-ங்கா தமிழ் தெரியாதுன்னா அது என் தப்பு இல்ல; அவங்க தப்பு" என்று கூறினார்.

உண்மையில் இது யாருடைய தப்பு?











# சிம்ரனுக்கு வயது என்ன?

இவருக்கு வயது என்ன என்பதில் நமக்கு என்ன இருக்கிறது? அவரவர் நல்ல தோற்றத்துடன் உடல் ஆரோக்கியமாக வாழ்ந்தாலே போதும் என்ற மிகப் பெரிய உண்மையைத் தெரிந்த பின்பும் ஏனோ தெரியவில்லை உண்மையான வயதினை நாலுபேர் மத்தியில் தெரியப்படுத்துவதை பெரும்பாலானவர்கள் மறைக்கவே செய்கின்றனர். இந்திய சினிமா உலகில் இதற்கு ஒரு தனி சிறப்பே உண்டு. என்றென்றும் 18 வயது என்று திரையிலும் சரி வயதிலும் சரி நடித்து வரும் பெரும்பாலான நடிகைகள் மத்தியில் அவரவர் உண்மை வயது பற்றிய துப்புக் கிடைத்து விட்டால் சொல்லவா வேண்டும்!



அண்மையில் கிடைத்த சிம்ரனின் உண்மையான வயது பற்றிய நம்பகரமான துப்பு இன்று நடிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வருடம் வெளிநாடு ஒன்றில் நடைபெற்ற மாபெரும் நட்சத்திர இரவுக்கு கலந்து கொள்ளச் சென்ற அனைத்து நடிகர்களதும் கடவுச் சீட்டினை கையாள வேண்டிய பொறுப்பு ஒரு நடிகருக்குக் கிடைத்திருந்தது. அந்நடிகரோ இதுதான் தருணமென்று அவசர அவசரமாக கிடைத்த சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்த போது அதிசயிக்கும் வண்ணம் சிம்ரனின் வயது 38 என்பதைக் கண்டு கண் இருண்டு ஆச்சரியத்தில் மூழ்கி விட்டாராம்.

தனது உண்மை வயது இப்படி அம்பலமாகி விட்டதே என்று சிம்ரன் அந்நடிகருடன் கடுகடுப்பானாராம். சினிமா வட்டாரம் கூட பெருத்த ஆச்சரியக் குறியுடன் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இதைப் படிக்கும் உங்கள் நிலை எப்படியோ?

தயவு செய்து யாரும் தீக்குளித்து விடாதீர்கள்!



# அமெரிக்கத் தொலைக்காட்சியில் சிறுபான்மையினருக்கு இடமில்லை

தனது பன்மொழிக் கலாசாரத்தைப் பற்றி பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவின் தொலைக்காட்சி உலகில் ஆசியருக்கும், தென் அமெரிக்கருக்கும், ஏன் அந்நாட்டின் பூர்வீகக் குடிகளுக்கும் கூட இன்னமும் போதுமான இடம் ஒதுக்கப்படவில்லை.
இந்த சோக முடிவை மீண்டும் ஒரு முறை அந்நாட்டின் பல்-இன ஊடகத்துறை கூட்டமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் பிரதான தொலைக்காட்சிச் சேவைகளான *ABC, CBS, NBC, FOX* ஆகியவற்றில் பூர்வீகக் குடிகள், ஆபிரிக்க அமெரிக்கர், ஆசியர், இலத்தின் அமெரிக்கர் ஆகியோருக்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் குறித்து இவ்வருடமும் ஆராய்ந்த இந்த அமைப்பு, ஆஸ்திரேலிய-பிரித்தானிய ஊடகத்துறை தொழிலதிபரான ருபேர்ட் மேர்டொக்கின் *(Rupert Murdoch) FOX* தொலைக்காட்சிச் சேவை மட்டுமே குறிப்பிடத்தக்களவில் சிறுபான்மையின மக்களுக்கு இடம் கொடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

இவ்வமைப்பு, தொலைக்காட்சி நிலையங்களில் நிர்வாக பதவிகளிலும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நடிகர்/நடிகையர் பதவிகளிலும் உள்ள சிறுபான்மையினரின் எண்ணிக்கையையும், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தையும் பொறுத்து இந் நிலையங்களுக்கு *A* முதல் *D-* வரை புள்ளிகள் வழங்கியிருந்தது.

இதில் *FOX* நிலையம் "சிறப்பாகத்" தேறி 2001ஆம் வருடத்தின் *C-* இடத்திலிருந்து *B-* இற்கு முன்னேறியது. இதற்குப் பிரதான காரணி இந் நிலையத்தின் பிரதான காட்சி நேரம் *(prime time)* நிகழ்ச்சிகளில் இரு ஆசியர்கள் நடிப்பதாகும்.

*ABC* நிலையமும் தனது *D-* நிலையத்திலிருந்து இவ் ஆண்டு *C-* நிலைக்கு முன்னேறியது. இந் நிலையம் இவ்வாண்டு இலையுதிர் காலத்தில் அறிமுகப்படுத்தியுள்ள ஏழு புதிய பிரதான காட்சி நேர நிகழ்ச்சிகளில் ஓர் ஆசியர் கூட இல்லாவிடினும், பொதுவாகவே நிலையத்தில் சிறுபான்மையினரை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்கு இம்முன்னேற்றம் வழங்கப்பட்டதாக ஆசிய, இலத்தின் அமெரிக்க, ஆபிரிக்க-அமெரிக்க மற்றும் பூர்வீகக் குடிகளின் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பான பல்-இன ஊடகத்துறை கூட்டமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இன்னொரு பிரதான தொலைக்காட்சி நிறுவனமான *NBC, C* இடத்திலிருந்து *C-* க்குத் தள்ளப்பட்டது. பொதுவாகவே இந்நிலையத்தின் சிறுபான்மையினரை வளர்க்கும் முயற்சியில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளதாலேயே *NBC*க்கு இந்த மதிப்பீடு வழங்கப்பட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வருடம் மிகமோசமான புள்ளிகளைப் பெற்றது *CBS* நிலையமாகும். கடந்த வருடத்தின் *D+* இருந்து *D-*இற்குத் தள்ளப்பட்டுள்ள இந்நிலையத்திற்கு விளம்பரம் வழங்க வேண்டாமென்று கூட்டமைப்பு ஜெனரல் மோட்டர்ஸ், ஜொன்சன் ஜொன்சன், யுனிலிவர் போன்ற அமெரிக்காவின் முக்கிய நிறுவனங்களை கேட்டுள்ளது.

அமெரிக்காவின் தொலைக்காட்சியில் மட்டுமன்றி, ஹொலிவூட்டிலும் சிறுபான்மையினருக்கு சந்தர்ப்பங்கள் வழங்கவும், சிறுபான்மையினரை "கள்ளர் - கபடர்", "ஆங்கிலம் தெரியாதவர்கள்," "நாகரிகம் அற்றவர்கள்" என்று காட்டுவதை நிறுத்தவும் என பல வருடகாலமாக போராட்டம் நடைபெற்று வருகிறது.

இவ்வகையில் ஹொலிவூட்டின் சரித்திரத்தில் முதன்முறையாக இவ்வருடம் சிறந்த நடிகர், நடிகைக்கான ஒஸ்கார் விருது ஆபிரிக்க-அமெரிக்கர்களான டென்ஸில் வாஷிங்டனுக்கும், ஹாலி பெரிக்கும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.


## சந்தாதாரர் ஆகுங்கள் நேரத்தைச் சேமியுங்கள்

*வாசகர்களே!*

*உலகத்தமிழோசை காலாண்டுக்கொருமுறை உங்கள் வீடு தேடி வரவேண்டுமா? கீழேயுள்ள இப்பத்திரத்தை நிரப்பி, உரிய முகவரிக்கு பணத்துடன் அனுப்பி வையுங்கள்.*

முழுப்பெயர்: ______________________

______________________

விலாசம்: ______________________

______________________

______________________

நகரம்: ______________________

மாநிலம்/மாகாணம்: ______________________

Postal Code / Zip: ______________________

நாடு: ______________________

விலை: நான்கு சஞ்சிகைகளுக்கு: ____________

கனடா: $10.00, ஐரோப்பா: € 8.00
அவுஸ்திரேலியா/ நியூசிலாந்து: $10.00,
அமெரிக்கா: $8.00, இலங்கை: Rs.200, இந்தியா: Rs.100

அனுப்பவேண்டிய முகவரி

கனடா/அமெரிக்கா:
Ulaka Thamiloszai
P.O.Box: 37527
31 Tapscott Road
Toronto, ON M1B 5P9
Canada

ஐரோப்பா:
44-208-6408228

அவுஸ்திரேலியா: N. Karunakaran
25A, Cornelia Road
Toongabbie
NSW 2146
Australia

இலங்கை: இந்திரன்
94-21-3528
New Bama Hardwares
11/3, Stanley Road
Jaffna.

இந்தியா: குகன்
91-44-4745438

# சிம்பியூட்டர் - ஏழைகளுக்கான கம்பியூட்டர்

கடந்த ஆண்டின் மிக முக்கிய கணினித்துறை செய்தி யாது?

பில்கேற்றின் Microsoft நிறுவனத்தின் புதிய இயக்குதளமான (operating system) windows xp இன் அறிமுகமா? இல்லை அப்பிள் (Ap-ple) நிறுவனத்தின் புதிய கணினி அமைப்பான Powerbook G4இன் அறிமுகமா?

உலகின் மிக முக்கிய பத்திரிகைகளில் ஒன்றான நியூயோர்க் ரைம்ஸ் (NewYork Tim-es) கருத்துப்படி, இவை இரண்டுமே இல்லை. மாறாக புதிய நூற்றாண்டின் முதலாவது முக்கிய கணினித்துறை முன்னேற்றம் இந்தி-யாவிலிருந்தே வந்தது. கடந்த வருட இறுதி-யில் இப்பத்திரிகையில் பிரசுரமான கட்டுரை-யின் படி, இந்தியர்களினால் உருவாக்கப் பட்டுள்ள Simputer என்ற கணினியே இந்த முக்கிய முன்னேற்றம் ஆகும். சிம்பியூட்டர் என்பதை இலகுவானது, மலிவானது எனப் பொருள் கொள்ளலாம். அதாவது simple com-puter.

வினய் தேஷ்பாண்டே என்ற கணினிப் பொறியியலாளரின் உருவாக்கமே, வறிய நாடுகளின் தகவல் பரிமாற்றத் தேவையைப் பூர்த்தி செய்யவென கிளம்பியுள்ள இந்த சிம்பியூட்டர்.

அமெரிக்கப் பல்கலைக்கழகமான ஸ்ரான்-போர்ட்டில் (Stanford) கல்வி கற்ற திரு. தேஷ்பாண்டே திருமண வீடொன்றில் ஒரு சிறு கிராம வங்கியின் உரிமையாளரைச் சந்தித்த போது, அந்த உரிமையாளர் தமது வங்கிப் பிரதிநிதிகள் தம்மை ஏமாற்றுவதைத் தடுக்க வழியொன்று பற்றிக் கேட்டார்.

இந்த வங்கியின் பிரதிநிதிகள் கிராமம், கிராமமாகச் சென்று சேமிப்பாளர்களின் சேமிப்புகளை வாங்குவதுடன் சிறு அளவிலான (சில வேளைகளில் ஒரு சில ரூபாய்களே பெறுமதியான) பண வழங்கல்களையும் மேற்-கொள்வர். சில வேளைகளில் சேமிப்புக-ளுக்கான பற்றுச் சீட்டுகளை மாற்றி பணத்தைக் குறைத்து வங்கி தலைமை அலுவலகத்திடம் கையளிப்பார்களாம். இத்தகைய மோசடிகளில் சிறிதளவு பணமே மோசடி செய்யப்படு-கின்றதென்றாலும் இவற்றைக் கண்டுபிடிக்க வாரக் கணக்கில் செல்லும்.



இத்தகைய மோசடிகளைத் தவிர்க்கவென இந்த வங்கி உரிமையாளர் இலகுவான, மலிவான (சுமார் 200 அமெரிக்க டொலர் செலவிலான) கருவியொன்றைத் தேடினார். ஒரு சிறு அச்சு இயந்திரத்துடன் (printer) இணைக்கப்படும் இக்கருவி, சேமிப்புப் பற்றிய பற்றுச் சீட்டை அச்சடிப்பதுடன், அத்தரவை பதிந்து வைத்து, வங்கிக்கு modem மூலமாக தகவல் அனுப்பக் கூடியதாய் இருத்தல் வேண்டும். பங்களூரில் அமைந்துள்ள தனது மென்பொருள் நிறுவனமான Encore software இல் பொறியியலாளர்களுடனும், இந்திய விஞ்ஞானக் கல்லூரியின் (Indian - Institute of Science) வல்லுநர்-களுடனும் கலந்தாலோசித்த திரு.தேஷ்பாண்டே சிம்பியூட்டரை உருவாக்கத் தொடங்கினார்.

சிம்பியூட்டருக்கு இறுதி வடிவம் கொடுக்கும் போதே இதனுடன் சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளுக்கு இக் கருவியின் பிற உபயோகங்கள் புலப்பட ஆரம்பித்தன.

சிம்பியூட்டர் என்ற பெயர் உண்மை-யில் Simple Inexpensive Multi-lin-gual comPUTER என்ற பதத்திலி-ருந்தே உருவாகியது.



> புதிய நூற்றாண்டின் முதலாவது முக்கிய கணினித்துறை முன்னேற்றம் இந்தியாவிலிருந்தே வந்தது.



உள்ளங்கையினுள் அடக்கக் கூடிய சிறு கணினியான palmஐ விட சக்தி வாய்ந்த சிம்பியூட்டர் ஒரு மோடத்தையும் கொண்டுள்ளது. இவ்வாண்டு நடுப் பகுதியில் விற்பனைக்கு விடப்பட்ட இச் சிம்பியூட்டரின் விலை சுமார் 9,000 இந்திய ரூபாய்களாகும். எனினும் இதுவும் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு கட்டுப்படியாகாது.

இப்பிரச்சினையைக் கருத்திற் கொண்டே கடன் அட்டை போன்ற (smart card) கூட்டுறவு அம்சம் சிம்பியூட்டரில் பொருத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு கிராமிய பாடசாலை அல்லது பஞ்சாயம் சிம்பியூட்டரை வாங்கி தனது மாணவர்களுக்கோ அல்லது பஞ்சாய உறுப்பினர்களுக்கோ 'கடனாக வழங்கலாம். பாவிப்பவர் தமது தரவுகளை தமக்குரிய smart card இல் சேமித்து வைக்கக் கூடியதாக இருப்பதனால் தகவல் பரிமாற்றத்திற்கு இன்றியமையாத நம்பகத் தன்மை (confidentiality) பாதுகாக்கப்படுகின்றது. இந்த சிம்பியூட்டரின் இன்னொரு சிறப்பம்சம் யாதென்றால் நாம் வாய் மூலம் கூறுவதை இக் கருவியின் விசேட மென்பொருள் எழுத்துக்களாக மாற்றும் இவை பின்னர் தகவல் பரிமாற்ற மென்பொருள் மூலம் ஏனைய கணினிகளுக்குப் பரிமாற்றப்படலாம். ஏறத்தாழ 42% வீதமானோர் வாசிக்கத் தெரியாத அல்லது முடியாத இந்தியா போன்ற நாட்டின் கிராமப் பகுதிகளில் வசிப்போர் இதனால் பெரிதும் பயனடையக் கூடியதாகவுள்ளது.



ஒரு சிறு வங்கியில் மோசடிகளைத் தவிர்ப்பதற்கென உருவாக்கப்பட்ட இந்த சிம்பியூட்டர் இன்று கணினித்துறையில் புரட்சியை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு வளர்ந்து விட்டது. இந்தியாவின் தபால் திணைக்களம் பணக்கட்டளை விநியோகத்திற்கு சிம்பியூட்டரைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்து வருகிறது. தமது உறவினருக்கோ இல்லை நண்பருக்கோ பணத்தை அனுப்பவிரும்புவர் தபாற்காரரிடம் பணத்தை வழங்கிய பின்னர், தபாற்காரரின் சிம்பியூட்டரில் தமது Smart Cardஐப் பாவித்து தமது விலாசம், பணத்தைப் பெறுபவரின் பெயர், விலாசம் போன்ற தேவையான விபரங்களைப் பதித்தால், தபாற்காரர் தமது தலைமை அலுவலகத்திற்கு இத்தகவல்களை அனுப்புவார். தலைமை அலுவலகம், பணம்பெறுபவரின் பிராந்தியத்திற்குப் பொறுப்பான தபாற்காரரின் சிம்பியூட்டருக்கு இத்தகவல்களை அனுப்புவார். அவர் பணத்தை உரியவரிடம் சேர்த்து விடுவார்.

தேசமெங்கும் பரவிக் கிடக்கும் சிறிய மற்றும் பெருந்தோட்டங்களின் விவசாய உற்பத்தியை சிம்பியூட்டர் மூலம் சரியாகக் கணிப்பிடவும் இந்திய அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

இதேவேளை சிம்பியூட்டரின் பெருமையை உலக ஊடகங்கள் மட்டுமல்ல, பல வெளிநாட்டு அரசாங்கங்களும் அறிந்து கொள்ள ஆரம்பித்துள்ளன. கிராமப் புறங்களில் கர்ப்பிணிப் பெண்களின் சிசு வளர்ச்சியை கண்காணிக்கவென சிம்பியூட்டரைப் பயன்படுத்த தென் ஆபிரிக்காவிலுள்ள சுகாதார அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இதே வேளை உலகில் தீவிரமாகி வரும் கணினி உள்ளோர், இல்லாதோர் பிரிவைத் தடுக்கவென பிரேசிலும் சிம்பியூட்டர் போன்றதொரு இலகுவான, மலிவான கணினியை அறிமுகப்படுத்தியுள்ளது. மக்கள் கணினி (Volkscomputer) என்று அழைக்கப்படும் இக் கணினி, சிம்பியூட்டரைவிட பெரியது. சுமார் 300 அமெரிக்க டொலர் பெறுமதியான இக் கணினியை தென் பிரேசிலுள்ள மினாஸ் ஜெராசின் மத்திய பல்கலைக்கழகத்தை பொறியியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

| | |
|---|---|
| CPU | = 206 MHz |
| RAM | = 16-64 MB |
| Display | = 240x320 |
| Connectivity | = Modem |
| Power | = 3AAA |
| Operating System | = Lynux |
| விலை | = 200US$ |

**உலகின் இணையப் பாவனையாளர்கள்**

| | |
|---|---|
| இந்தியா | = 1% |
| பிரேசில் | = 5% |
| கனடா | = 60% |
| வடஅமெரிக்கா | = 41% |

# சாதனைகளை முறியடிக்கும் சாதனை வீரன்



தர்மலிங்கம் யோகராஜா

பல உலக சாதனைகளை முறியடித்து புதிய உலக சாதனைகளை இன்று ஒரு தமிழ் மகன் ஏற்படுத்தி வருகிறார். அவரை உலகத் தமிழோசை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்.

சுரேஸ் ஜோக்கிம் (Suresh Jochim) 1989 இல் ஓர் 20 வயது தமிழ் வாலிபன். இவர் பெரும்பாலான தமிழ் வாலிபர்களைப் போல் பெற்றோர் விருப்பத்திற்கு இணங்க பட்டயக் கணக்காளர்க்கு உரிய கல்வியை கற்று விட்டு கொழும்பு நகரிலுள்ள ஒரு பெரிய நிறுவனத்தில் கொள்வனவு முகாமையாளராக (Purchasing Manager) வேலை செய்தார். ஒரு நாள் தனது வேலை நண்பர்களுக்கு தேநீர் இடைவேளையின் போது சுரேஸ், "நாளை எனது பிறந்தநாள். நான் யாழ்ப்பாணம் சென்று எனது குடும்ப அங்கத்தவர்களுடன் கொண்டாடப் போகிறேன்" என்று கூறினார். யாழ்ப்பாணம் என்றவுடன் அவரது நினைவிற்கு அடிக்கடி வந்து போவது எல்லாம் சிங்கள அரசின் வெறித்தனத்தால் அழியுண்ட, காயப்பட்ட தாய் தந்தை சகோதரர்களை இழந்து அனாதரவாக இருக்கும் வறிய சிறார்களின் நினைவுதான்.

மறுநாள் மாலைநேரம் யாழ்ப்பாணத்தில் வீட்டின் பின்புறத்தில் உள்ள செம்பரத்தம் பூமரங்களும் வாழை மரங்களும் நிறைந்த தோட்டத்தில் இருந்து பொழுது போக்காக போல் மாமாவுடன் (Uncle Paull) உரையாடிக் கொண்டிருக்கும் போது சுரேஸ் கூறுகிறார், "நான் பணம் சேகரித்து வசதியற்ற சிறுவர்களுக்கு உதவப் போகிறேன். பணம் சேகரிப்பது என்றால் மைக்கல் ஜக்சன் (Michael Jackson) அல்லது பில் கேற் (Bill Gates) போல பிரபல்யமானவர்களாக வரவேண்டும். இவர்களைப் போல் பிரபல்யமாக வந்து விட்டால் வசதியற்ற சிறுவர்களுக்கு பலவிதமாக உதவலாம். என்னைப் போல் ஒரு சாதாரண வாலிபனை யார் மதிக்கப்போகிறார்கள்? யார் நம்பி பணம் தருவார்கள்? என்னால் பாடவும் முடியாது நடனம் ஆடவும் முடியாது நான் என்ன செய்யலாம்?" அதற்கு போல் மாமா கூறினார், "ஏழை சிறுவர்களுக்கு உதவ வேண்டும் என நினைத்து தேடினால் அவர்களுக்கு உதவுவதற்கு உனக்கே உரிய வழி ஒன்றை நீ கண்டுபிடிப்பாய்."

அன்று மாலை பிறந்தநாள் பரிசுப் பொருட்களை பிரித்து பார்த்துக் கொண்டிருந்த சுரேஸின் கவனத்தை ஈர்த்த பரிசு ஒரு புத்தகம். அது கின்னஸ் உலக சாதனை புத்தகம் (Guinness Book of Records) அந்த புத்தகத்தில் உள்ள சாதனைகளின் வகைகள், யார் யார் எப்போது எப்படி சாதனைகளை முறியடித்தார்கள் என்பதனை வாசித்த சுரேஸ் கூறினார், "பிரபல்யமாக வருவதற்கு இது நல்ல ஒரு வழி." சுரேஸ் உணர்ச்சி வசப்பட்டு இவ்வாறு கூறியதை கேட்ட தங்கை சுமித்திரா "ஒன்றை செய்து பாரேன்" என்றாள் புன்னகையுடன்.

33 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக ஒருவர் ஒரு காலில் நின்று நிலை நாட்டிய சாதனையை வாசித்த சுரேஸ் "இந்த சாதனையை முறியடித்தல் இலகு. இதை என்னால் முறியடிக்க முடியும்." என்று தங்கையிடம் கூறினார். அப்போது அவரிடம் சாதனையை முறியடிக்கும் எண்ணம் மட்டும் அல்ல இது வாழ்வின் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் சிறுவர்கள், சிறுமியர்களிற்கு உதவக் கூடிய ஒரு தகுந்த வழிமுறை என்ற ஒரு எண்ணமும் சிந்தனையில் இருந்தது.

முதன் முறையாக ஒரு காலில் நின்ற சுரேஸ் இரண்டரை மணித்தியாலங்களில் மயக்கமுற்று கீழேவிழுந்து விட்டார். பின்னர் போட்டி விதிகளை படித்த சுரேஸ் ஒற்றைக் காலில் நிற்கும் ஒவ்வொரு மணித்தியாலமும் ஐந்து நிமிட ஓய்வு எடுக்கலாம் என்பதை அறிந்தார்.

ஒருசில மாதங்களாக சுரேஸ் தொடர்ந்து ஒரு காலில் நின்று பயிற்சி செய்து வந்தார். சரியாக ஐந்து நிமிடங்கள் மட்டும் ஒவ்வொரு மணித்தியாலத்தின் போதும் ஓய்வு எடுத்துக் கொண்டார். இக்காலப்பகுதியில் தனது இந்த சாதனை முறியடிப்பு நிகழ்ச்சிக்கு தகுதியான இடம், தகுதியான சாட்சிகள் எல்லாவற்றையும் திட்டமிட்டார். அரிமா சங்கத்தின் (Lions Club) இளைஞர் பிரிவான Leo Club சுரேஸின் இந்த முயற்சிக்கு உதவ முன்வந்தது.

1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் சுரேஸ்




தனது 9வது உலக சாதனைக்காக 21 மணி 30 நிமிடங்கள் தொடர்ச்சியாக அசையாது ஒரே நிலையில் ஒரு சிலை போல் நின்றார்

ஒற்றை காலில் தொடர்ச்சியாக 45 மணித்தியாலங்கள் நின்று, கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்ட முன்னைய 33 மணித்தியாலங்கள் ஒற்றை காலில் நின்ற சாதனையை முறியடித்தார். உற்சாகம் மேலிட சுரேஸ் தனது புதிய சாதனை ஆவணங்களை கின்னஸ் சாதனை பதிவு செய்யும் இடத்திற்கு அனுப்பி வைத்தார். இரண்டு மாதங்கள் கழித்து சுரேஸிற்க்கு வேறு ஒருவர் 55 மணித்தியாலங்கள் ஒற்றை காலில் நின்று அவரின் சாதனையை முறியடித்து விட்டாராம் என்ற செய்தி வந்தது. மனம் தளராத சுரேஸ் தங்கையிடம் "இது எனது முயற்சியில் ஒரு சிறு தடங்கலே தவிர தடை அல்ல நான் இன்னொரு சாதனையை முறியடிக்கப் போகிறேன்" என்று கூறினார்.

சுரேஸ் எப்போதுமே மனம் தளராதவர். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்" என எமது அய்யன் கூறியபடி சுரேஸ், "நினைத்தால் மனிதனால் உலகில் செய்ய முடியாதது எதுவுமில்லை" என்று பலருக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்.

சுரேஸின் இந்தவித இலட்சியங்களுக்கு எல்லாம் அவருடைய குடும்பப் பின்னணியும் ஒரு காரணமாய் இருந்தது என்று கூறலாம். சுரேஸின் பூட்டன் புலவர் தம்பிமுத்துப்பிள்ளை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பன்மொழிப் பண்டிதர் எனப் பட்டம் பெற்ற சுவாமி ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தந்தையாராவர். ஆங்கில இலக்கியத்தில் புலமை பெற்று அச்சுவேலிப் பாவலர் என்று புகழப்படும் மியரி ஜேம்ஸ் துரைராசா தம்பிமுத்து சுரேஸின் அன்னையாரின் சகோதரராகும்.

ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி என்னும் வளம் பொருந்திய விவசாயக் கிராமத்தின் ஜேம்ஸ் தம்பிமுத்து குடும்ப வழித் தோன்றலே சுரேஸ் ஜோக்கிம் ஆவார். இவர் வீரம் விளைந்த பண்டார வன்னியன் ஆண்ட வன்னி மண்ணில் 1968ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் பதினெட்டாம் நாள் பிலிப் ஜய அருளானந்தம் அவர்கட்கும் மேரி பெற்றோநிலாவிற்கும் மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் பாடசாலையிலும், அடுத்து அச்சுவேலி புனித திரேசம்மாள் பாடசாலையிலும் பின்னர் இளவாலை புனித ஹென்றி அரசினர் கல்லூரியிலும் பயின்றார்.

உலக சாதனை படைக்கவேண்டும் என்ற வேட்கை சுரேஸிற்க்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது அவரது அடிமனத்தில் சிறுவயதில் இருந்தே இருந்திருக்க வேண்டும். தனது 10வது வயதில் உலக சாதனை பற்றி பூரண அறிவோ அல்லது கின்னஸ் அமைப்புப் பற்றியோ அல்லது அதன் விதிமுறைகளோ தெரியாத காலத்தில் தொடர்ச்சியாக 21 மணித்தியாலங்கள் வவுனியா முற்றவெளி விளையாட்டு அரங்கில் துள்ளல் நடனம் ஆடினார். "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பது எங்கள் பழமொழி தானே.

சுரேஸ், தனது ஒற்றைக்காலில் நிற்கும் சாதனை முறியடிக்கப்பட்ட பின்னர் அடுத்த முயற்சியாக நெடும் தூரத்தை தொடர்ந்து ஓடவேண்டும் என முடிவு செய்தார். கொழும்பு ஒக்ஸ்போர்ட் கழகம் கொடுத்த அனுசரணையுடனும் கழகத்தின் தலைவர் எம். ரெஜினோல்ட் என்பவர் அளித்த ஆதரவுடனும் தொலைதூர ஓட்டங்கள் என்ற பிரிவில் கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்ட 1,000 மணித்தியாலங்கள் (41 நாட்கள் 16 மணித்தியாலங்கள்) தொடர்ச்சியாக ஓடும் சாதனையை முறியடிப்பதற்கான முயற்சியை ஆரம்பித்தார்.

இந்த சாதனையை 1993இல் அவுஸ்திரேலியரான கிறெயிங்றோவ் என்பவர் அவுஸ்திரேலிய மென்லி கடற்கரையில் 1,000 மணித்தியாலங்களில் 3,307கிலோமீற்றர் தூரத்தை ஓடிக் கடந்து நிலைநாட்டியிருந்தார். பல நாட் பயிற்சியின் பின்னர் 1996 ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள விகாரமகாதேவி பூங்காவில் 1,000 மணித்தியாலங்கள் 3,495 கிலோ மீற்றர் தூரத்தை தொடர்ந்து ஓடி முடித்தார். சுரேஸ் உடன் இந்த ஓட்டத்தின் போது இலங்கைத் துடுப்பாட்டக் குழுவும் (Srilank's Cricket Team) வேறும் பல பிரபல்யமானவர்களும் இடையிடையே சேர்ந்து ஓடி இவரைத் தொடர்ந்து ஓட ஊக்கமளித்து இருந்தார்கள். இவ்வோட்டத்தின் மூலம் சுரேஸ் இலங்கையில் பிரபல்யமானார். இந்த சாதனை முறியடிப்பில் சேர்ந்த $500க்கு மேற்பட்ட பணத்தை சுரேஸ் ஏழைத்தமிழ் சிறுவர்களுக்கு கொடுத்து உதவினார். இதுவே சுரேஸின் முதலாவது சாதனையாக இப்பொழுதும் முறியடிக்கப்படாமல் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுகிறது.

சுரேஸ் 1997ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தனது தங்கை சுமித்திராவுடன் அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்தார். இவர்கள் இப்பொழுது சிட்னிக்கு மேற்கில் உள்ள பென்றித் (Penrith, West of Sydney) என்ற இடத்தில் வசிக்கிறார்கள். அங்கு ஒரு வியாபார நிலையத்தையும் இவர்கள் நடத்துகிறார்கள்.

அவுஸ்திரேலியா விளையாட்டில் பிரியமுள்ள

56.62 கி.மீ. தூரத்தை தொடர்ச்சியாக தவழ்ந்து செல்கிறார்





பால்போத்தலை தலையில் வைத்துக் கொண்டு
133 கி.மீ. தொடர்ச்சியாக நடந்த போது

ஒரு நாடு இங்கு நான் பல சாதனைகளை ஏற்படுத்தலாம் என தங்கைக்குக் கூறிய சுரேஸ் தனது இலட்சியத்தைப் பற்றிக் குறிப்பிடவும் தவறவில்லை. நாங்கள் இப்போது உள்நாட்டுக் கலவரங்கள் இல்லாத பாதுகாப்பான பூமியில் சந்தோசமாக இருக்கிறோம் இதுவே வசதி-யற்றோருக்கு மற்றும் அநாதை தமிழ் சிறுவர்களுக்கு நிதி சேகரிக்க தகுந்த சந்தர்ப்-பம் என்றும் கூறினார்.

அவுஸ்ரேலியாவில் கடற்கரைப் பகுதி பட்டண-மாகிய சிட்னியில் தொடர்ச்சியாக 6 நாட்கள் ஓடி, கிரீஸ் நாட்டைச் சேர்ந்தவரான யோனிஸ்-கோரஸ் நியூயோக் நகரத்தில் 1984 இல் ஏற்படுத்திய சாதனையை முறியடித்தார். மேலும் மூன்று சாதனைகளை இங்கு ஏற்படுத்தினார். இவர் இங்கு ஏற்படுத்திய நான்கு சாதனைகளும் வருமாறு:

1. 500 கிலோமீற்றர் தூரத்தை 60 மணித்தியாலங்களில் கடந்தமை.
2. 800 கிலோமீற்றர் (500 மைல்) தூரத்தை 105 மணித்தியாலங்களில் கடந்தமை.
3. 1,000 கிலோமீற்றர் தூரத்தை 135 மணித்தியாலங்களில் கடந்தமை.
4. ஆறு நாட்கள் தொடர்ந்து ஓடி 1,027.02 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்தமை.

சுரேஸ் ஏற்படுத்திய இந்த நான்கு தொலைதூர ஓட்டங்கள் சம்பந்தமான கின்னஸ் சாதனை-களால், இவரை சாதனைகள் முறியடிக்கும் இயந்திரம் என அவுஸ்ரேலியா தொலைக் காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகள் வியந்து புகழ்ந்தன.

அவுஸ்ரேலியா வாழ் தமிழ் மக்கள் காட்டிய ஆதரவாலும் அவரின் தனிப்பட்ட கடின உழைப்பாலும் அவுஸ்ரேலிய மண்ணில் பல சாதனைகளைப் படைக்க சுரேஸ் திட்டமிட்டார். யோகாசனப் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்யும் சுரேஸ் சிரசாசனம் தனக்கு நல்ல ஓய்வை (Relaxing) தருவதாகச் சொல்லுகிறார். யோகா-சனம் உடலை மட்டுமல்ல மனதையும் உறுதிபடச் செய்கிறது என்கிறார் சுரேஸ்.

சுரேஸ் தனது உன்னத இலட்சியத்தைத் தொடர சொந்த தர்ம அமைப்பு (Charity) ஒன்றை நிறுவினார். அது "உலகில் துன்பப்படும் சிறுவர்களுக்கு உதவும் நிதியம்". (Universal Funds For Suffering Children) என அழைக்கப்படும். இது சுருக்கமாக "UFFORSC" எனக் கூறப்படும். இது அவுஸ்திரேலியா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரும அமைப்பு ஆகும்.

1997ஆம் ஆண்டு வைகாசியில் இலங்கை சென்று அதேமாதம் 22ஆம் திகதி ஒற்றைக் காலில் 76 மணித்தியாலங்கள் 40 நிமிடங்கள் தொடர்ச்சியாக நின்று தான் முதலில் உடைக்க நினைத்த சாதனையை உடைத்தார். இது சுரேஸின் ஆறாவது சாதனையாக இன்னமும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுகிறது.

ஏழாவது சாதனையாக சுரேஸ் 1998ஆம் ஆண்டு சிட்னி பேர்வூட் (Burwood) நகரில் வைகாசி மாதம் 25ஆம் திகதி வெஸ்ட்ஃபில்ட் ஷொப்பிங் சென்ரரில் (Westfield Shopping Centre) அமைந்துள்ள மின் இயக்கப்படிகளில் மேலும் கீழுமாக 224.4 கிலோமீற்றர் தூரத்தை




கின்னஸ் இணையத் தளத்திலிருந்து

145 மணித்தியாலங்கள் 57 நிமிடங்களில் ஓடி உலக சாதனையை ஏற்படுத்தினார். டேவிற் பற்றிக், ஏட்ரியம் செமன் என்ற இருவரும் 1989ஆம் ஆண்டு ஆடி மாதம் இலண்டன் நகரிலே ஒக்ஸ்போட் வீதியில் 214.34 கி. மீ. தூரத்தை மின்னியக்கப் படிகளில் ஓடி இச்சாதனையை நிலைநாட்டி இருந்தனர்.

இவருடைய சாதனைகள் பல சோதனைகள் நிறைந்ததாக இருப்பது இவருடன் கூட இருப்போருக்கும் இவர் உலக சாதனைகள் படைக்கும் போது துணை புரிபவர்களுக்கும் நன்கு புரியும். இவரது எட்டாவது சாதனை, 4.5 கிலோகிராம் எடையுள்ள செங்கல் ஒன்றை விரல்களால் கீழ் நோக்கிய வண்ணம் அழுத்திப் பிடித்தபடி ஓய்வு ஒழிச்சலின்றி தொடர்ந்து ஓடி 127 கி.மீ. தூரத்தை கடந்ததாகும். இந்தச் சாதனையை 1998இல் ஒரு பிரித்தானியர் நிலை நாட்டியிருந்தார். இவருடைய சாதனையை முறியடிப்பதற்காக சுரேஸ் இரண்டு தடவைகள் முயற்சிக்க வேண்டி இருந்தது. சுரேஸின் முதலாவது முயற்சி ஒரு தீக்குளிப்பு என்றுதான் சொல்லவேண்டும். கரடு முரடான செங்கல் அவரது விரல்களை காயப்படுத்தியதோடு அகலம் கூடிய கல் என்பதால் அவருடைய பெருவிரலுக்கும் ஏனைய விரல்களுக்கும் இடையில் இருக்கும் பகுதியில் பெரும் கிழிவு ஏற்பட்டது. இதனால் அவர் நடந்து சென்ற



பாதை அனைத்தும் குருதி சிந்திக் கொண்டே இருந்தது. குருதி சொட்டச் சொட்ட தொடர்ந்து சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்தார். இச் சாதனையை முறியடிக்க சுமார் 7 கி.மீ. தூரமே இருக்கும் போது கூடி நின்ற மக்கள் அனைவரும் உன்னால் முடியும் நட நட என்று ஊக்குவித்த போதும் அந்த வீரன் இரத்த வெள்ளத்தில் சோர்ந்து வீழ்ந்தான். வீழ்வதும் எழுவதும் சுரேஸின் வாழ்வின் சாதாரண நிகழ்வு. மீண்டும் ஆறு மாத ஓய்வின் பின் 1999 ஆம் ஆண்டு மார்கழியில் *Sydney's Hornsby* என்ற இடத்தில் செயற்கை நீர் ஊற்று *(Florence Street Mall Fountain)* ஒன்றை சுற்றி சுற்றி 4.5 கிலோகிராம் செங்கல்லை விரல்களால் தூக்கி கொண்டு 126.6 கி.மீ. தூரத்தை தொடர்ச்சியாக நடந்து சென்று சாதனை படைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது சேகரித்த $500ஐயும் சுரேஸ், அவுஸ்திரேலிய சிறுவர் புற்றுநோய் மையத்திற்கு*(NSW Children's Cancer Institute)* வழங்கினார். சுரேஸின் இந்த சாதனையை மைக்கல் பவல் *(Michael Powell)* என்ற படத்தயாரிப்பாளர் படமாக எடுத்தார். இப்படம் *"The Brick Carring Fillm"* என அழைக்கப்பட்டது. இப்படம் புகழ் பெற்ற *"Tropfest Film Festival 2000"* என்ற படவிழாவில் காண்பிப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டது.




4.5 கிலோகிராம் நிறை கொண்ட கல்லை 126.675 கி.மீ தூரம் இடைவிடாது கை விரல்களினால் மட்டும் காவிச் சென்றமை


சுரேஸின் ஒன்பதாவது சாதனை வியப்பானதும், வித்தியாசமான விதத்தில் கடினமானதும் ஆகும். 'சும்மா இரு' என்றும் 'சும்மா இருத்தல் அரிது' என்றும் பல ஞானிகள் முன்பு கூறியிருக்கிறார்கள். சுரேஸின் இந்த சாதனையோ அசையாது ஒரு சிலைபோல் நிற்றல் ஆகும். கின்னஸ் விதிகளின் படி இந்த சாதனையின் போது சாதனையாளர் ஆடாமல் அசையாமல் ஒரு சிலைபோல் நிற்க வேண்டும். விழிகள் அசைவின்றி குத்திட்ட பார்வையுடன் இருக்க வேண்டும். விழி மடல்களை மாத்திரம் இமைப்பொழுதுக்குள் மூடித்திறக்கலாம். இந்த சாதனையை இந்தியரான ஓம்பிரகாசிங் 18 மணி 10 நிமிடங்கள் அசையாமல் நின்று சாதனை படைத்திருந்தார். ஒற்றைக்காலில் நின்ற சாதனையைப் போல் இதனையும் இருமுறை செய்யவேண்டி இருந்தது. முதற் தடவை இந்த சாதனையை சுரேஸ் 19 மணித்தியாலங்கள் தொடர்ந்து அசையாமல் நின்று முறியடித்தார். சுரேஸினுடைய சாதனை கின்னஸ் ஏட்டில் பதியப்பட முன்னர் சுரேஸின் சாதனையை ஓம்பிரகாசிங் 20 மணித்தியாலங்கள் 10 நிமிடங்கள் நின்று முறியடித்து விட்டார். பின்னர் சுரேஸ் சிட்னி பென்றிக் நகரில் அவுஸ்ரேலிய இராணுவச் சீர் உடை அணிந்து 21 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் தொடர்ச்சியாக அசையாது நின்று சாதனை படைத்தார். இச்சாதனை இப்பொழுதும் முறியடிக்கப்படாமல் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுகின்றது.

சுரேசின் 10வது உலக சாதனை நவநாகரிக உடைகள் அணிந்து விற்பனை விளம்பரத்திற்காக அழகு நடைபயிலும் அழகிய பெண்களுடன் *(Models)* 137 கிலோமீற்றர் தூரத்தை அழகுநடையில் நடந்து வந்து காட்சி கொடுத்தது ஆகும்.

## சுரேஸின் சாதனைகள்

1. 1,000 மணித்தியாலங்களில் 3,495 கி.மீ. தூரத்தை தொடர்ச்சியாக ஓடியமை.
2. 60 மணி 1 நிமிடம் 30 விநாடிகளில் 500 கி.மீ. தூரத்தை ஓடியமை.
3. 105 மணி 3 நிமிடங்கள் 20 விநாடிகளில் 800 கி.மீ. (500 மைல்) தூரத்தை ஓடியமை.
4. 135 மணி 35 நிமிடங்களில 1,000 கி.மீ. தூரத்தை ஓடியமை.
5. 6 நாட்கள் தொடர்ச்சியாக ஓடி 1,027.02 கி.மீ. தூரத்தை கடந்தமை.
6. 76 மணி 40 நிமிடங்கள் தொடர்ச்சியாக ஒற்றைக் காலில் நின்றமை.
7. மின்சாரத்தில் நகர்ந்து செல்லும் படிகளில் மேலும் கீழுமாக தொடர்ச்சியாக 145 மணித்தியாலங்கள் 57 நிமிடங்களில் 224.444 கி.மீ தூரத்தை நடந்து சென்றமை.
8. 4.5 கிலோகிராம் நிறை கொண்ட கல்லை 126.675 கி.மீ தூரம் இடைவிடாது கை விரல்களினால் மட்டும் காவிச் சென்றமை.
9. 21 மணி 30 நிமிடங்கள் தொடர்ச்சியாக அசையாது ஒரே நிலையில் ஒரு சிலை போல் நின்றமை.
10. நவநாகரிக உடைகள் அணிந்து நடை காட்டும் பெண்களுடன் 137 கி.மீ. அழகு நடைபோட்டமை.
11. 85 மணிநேரம் தொடர்ச்சியாக வானொலி ஒலிபரப்பாளர்களாக பாலசிங்கம் பிரபாகரன் என்பவரோடு ஒலிபரப்பு சாதனை படைத்தமை.
12. 24 மணி நேரத்தில் 156.71 கி.மீ தூரத்துக்கு கூடைப்பந்தாட்டப் பந்தை ஒரு கையால் அடித்துச் சென்றமை.
13. 56.62 கி.மீ. தூரத்தை தொடர்ச்சியாக தவழ்ந்து சென்றமை.
14. 11.5 மணித்தியாலங்களில் 80.46 கி.மீ. விரைவாக நடந்தமை.
15. 12 மணித்தியாலங்களில 86 கி.மீ. தூரத்தை விரைவாக நடந்தமை.
16. 12 மணி 19 நிமிடங்களில் 100 கி.மீ தூரத்தை விரைவாக நடந்தமை.
17. 48 மணித்தியாலங்களில் 214.96 கி.மீ தூரத்தை விரைவாக கடந்தமை.
18. பால்போத்தலை தலையில் வைத்துக் கொண்டு 133 கி.மீ. தொடர்ச்சியாக நடந்தமை.
19. வெண்திரையில் 53.30 மணித்தியாலங்களில் 19 திரைப்படங்களை தொடர்ச்சியாக பார்த்தமை.
20. நடைபயிலும் (Tredmill Walt) இயந்திரத்தில் 12 மணித்தியாலங்களில் 93 கி.மீ. விரைவாக நடந்தமை.
21. நடைபயிலும் இயந்திரத்தில 100 மைல்களை 23½ மணித்தியாலங்களில் விரைவாக நடந்தமை.
22. நடைபயிலும் இயந்திரத்தில் 1,673 கி.மீ. களை விரைவாக நடந்தமை.





நவநாகரிக உடைகள் அணிந்து நடை காட்டும் பெண்களுடன் அழகு நடை...

இவற்றைத் தொடர்ந்து இன்னும் பல சாதனைகள் செய்தார். பத்து வருட விடாமுயற்சியும் ஏழு வருடங்களாக தொடர்ந்து செய்த சாதனைகளாலும் இன்று சுரேஸின் இருபத்தியிரண்டு உலக சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டு இருக்கின்றன.

சுரேஸிற்கு தற்போது 34வயது. அவர் 22 உலக சாதனைகளை முறியடித்து தனது பெயரை 22 தரம் கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்து இன்றுவரை உலகின் அதிக உலக சாதனைகளை முறியடித்த இரண்டாவது சாதனை வீரன் என்ற நிலைக்கு உயர்ந்து உள்ளார். சுரேஸிற்கு தனது இலட்சியத்தை விட இன்னும் ஒரு ஆசை உள்ளது. அது கின்னஸ் புத்தகத்தில் அதிக உலக சாதனைகளை முறியடித்தவர் என்ற பதிவையும் ஏற்படுத்துவதே ஆகும். தற்போது அதிக உலக சாதனைகளை முறியடித்தவராக கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளவர் 60 உலக சாதனைகளை முறியடித்திருக்கிறார்.

அடுத்த ஐந்து வருடங்களில் 60 உலகசாதனைகளை முறியடித்து தானே உலகில் அதிக உலக சாதனைகளை முறியடித்தவன் என்று கின்னஸ் புத்தகத்தில் பதியப்படுவேன் என்று சுரேஸ் உறுதியாக கூறுகிறார்.

சுரேஸ் தனது வருங்கால திட்டங்களைப் பற்றி கூறுகையில் தான் இப்போது நீந்த பயிற்சி எடுத்து வருவதாகவும் விரைவில் 167 மணித்தியாலங்களுக்கு மேல் தொடர்ச்சியாக நீந்தி ஒரு சாதனையை நிலைநாட்டப் போவதாகவும் சொன்னார். இவற்றைவிட 153 கி. மீ. தூரத்தை பின்னோக்கி நடத்தல், 48 மணித்தியாலங்கள் இடைவிடாது பாடுதல் போன்றவற்றையும் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

உங்கள் கைகளில் இந்த உலகத் தமிழோசை தவழும் நேரம் சுரேஸ் தனது 23ஆவது சாதனையையும் முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டியிருப்பார். சுரேஸ் தனது 23ஆவது சாதனையை இவ்வருடம் கார்த்திகை மாதம் 2ஆம் திகதி ஸ்பென்சர் பிளாசா சென்னை, இந்தியாவில் நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளார். இனிவரும் சாதனைகளின் போது கலைத்துறையில் தனக்கிருக்கும் திறமைகளை வெளிக்கொணர இருக்கிறார். இதுதொடர்பாக திரைப்படத் துறையைச் சார்ந்த கலைஞர்கள் நிபுணர்களை தற்போது சுரேஸ் சந்தித்து வருகிறார்.

2003 ஆம் ஆண்டு கனடாவில் ஒரு உலக சாதனையை நிலைநாட்டுவதற்காக தற்போது சுரேஸ் ட்றம் (Drum) இசைக்கருவியை பயின்று வருகிறார். தொடர்ச்சியாக 40 மணித்தியாலங்கள் தான் இந்தியக் கலைஞர்களுடன் சேர்ந்து ட்றம் வாத்தியத்தை இசைப்பதே கனடாவில் சுரேஸ் செய்யத் திட்டம் போட்டுள்ள சாதனையாகும்.

சுரேஸின் உன்னத சாதனையாக 2004ஆம் ஆண்டில் யேசுபிரான் அவதரித்த இடமான பெத்தலேகமில் இருந்து ஒரு சமாதான விளக்கை ஏந்திய வண்ணம் 104 நாடுகளில் உள்ள 190 முக்கிய நகரங்களுக்கு சமாதான தூதுவராக சென்று உலக தலைவர்களை சந்திப்பதுடன், 30,000 கி.மீ. தூரத்தை ஓடி சாதனை படைக்க திட்டமிட்டுள்ளார். இச்சாதனைகள் மூலம் 4000 கோடி ரூபாவை ($400 மில்லியன் டொலர்கள்) சேகரித்து துன்பப்படும் சிறுவர்களின் விமோசனத்திற்காக தனது "உலகில் துன்பப்படும் சிறுவர்களுக்கு உதவும் நிதியம்" என்ற தரும அமைப்பின் மூலமாக வழங்க இருக்கிறார்.

எந்தத் துறையிலும் கால் பதித்தாலும் அவற்றை நேர்த்தியாக செவ்வனே செய்து முடிக்கக் கூடிய சுரேஸ் 2005ஆம் ஆண்டில் தமிழ் மண்ணில் துன்பத்தில் உள்ள சிறுவர்களில் மூன்றில் இரண்டு பங்கு சிறுவர்களை துன்பத்தில் இருந்து மீட்டு எடுப்பேன் என உறுதி செய்துள்ளார்.

சுரேஸ் தனது இலட்சியப் போக்குக்கு வழிகாட்டிகளாக அன்னை திரேசா, இளவரசி டயானா என்பவர்களை மனதில் கொண்டு செயற்பட்டு வருகிறார்.

சுரேஸ் பல சோதனைகளுக்கும் மத்தியிலும் சாதனை படைப்பதையே தனது உன்னத முயற்சியாக கொண்டு உடலை வருத்தி ஊனை உருக்கி சாதனைகள் பல படைத்து வருகிறார். சுரேஸ், இந்த நூற்றாண்டின் இணையற்ற தமிழ் மகன் என்பது உலகத் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். "கடவுள் தன் கருணையை என்மேல் காட்டுகிறார் அவரது கருணையுடன் தான் 60 உலகசாதனைகளை முறியடிப்பதோடு மட்டும் அல்லாமல் நிறைந்த பணம் சேகரித்து துன்பப்படும் சிறுவர்களையும் துன்பத்தில் இருந்தும் மீட்பேன்" என்று சுரேஸ் கூறுகிறார்.

---



தர்மலிங்கம் யோகராஜா - ஜப்பானில் தனது மேற்படிப்பை முடித்த இவர் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவருகிறார்.


I hold the world's WACKIEST RECORDS!

பத்திரிகைகளில் செய்தி



மடித்து வைத்த பக்கங்கள்

த. சிவதாசன்

# போர் ஆட்டம்

புலன் வழித் தூண்டல்களின் இம்சை தாளாது அவ்வப்போது உள்மனத் தேக்கங்களில் தக்க வைத்திருந்த உளர்வுகள் பிராவகமெடுக்க முனைவதைத் தடுக்க முடியாது வடிகால் தேடியபோது ஒரு மறுமொழி விடையாகியது. இளைப்பாறிச் சுகிப்-போமென எப்போதோ மடித்து வைத்த வாழ் நூலின் சுவையான பக்கங்கள் சில.

ஈழவிடுதலைப் போர் - ஆட்டம் கண்டிருக்கிறது. நாட்டில் அமைதிக்கான ஆரம்பம் ஆனந்தம் தருகிறது. ஆட்டத்தின் இடைவேளையில் பலரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பணவாகனம் வேகமாய்ப் பறக்கிறது நாட்டைநோக்கி. போனவர்கள் புதிய அனுபவங்களைச் சுமந்து வந்திருக்கிறார்கள். நவரசங்களையும் உட்கொண்ட விவரணங்கள். கருகிச் சருகான முகங்களில் கிணற்றுக்குள் நிலவான கண்கள் சிரிக்க முயல்கின்ற அவஸ்தைகள். போர் வேண்டாம் எஞ்சிய பொழுதில் என்னைச் சிரிக்கவாவது விடுங்கள் என்பது போன்று. கந்தையுடுத்தவர்கள் கசக்கிக் கட்ட வாய்ப்புக் கிடைத்தது பற்றி அளவிலா மகிழ்கிறார்கள். வன்னி முல்லைகள் பாரியின் கடனை அவன்பரம்பரைக்குத் திருப்பித் தந்ததற்காய் மகிழ்கின்றன. துவண்டு விழுந்த தமிழனுக்கு தேராய் நின்று கடனை மீட்டதில் அவை மகிழ்வதில் அர்த்தமுண்டு தான். பனங்கழியில் சலவை செய்தும், விதைகளில் விளக்கெரித்தும் மரநிழலில் வாழ்வை விரித்தவர்கள் தூர்ந்துபோன தமது குடிசைகளுக்குச் செல்வதற்குத் துடிக்கிறார்கள். லண்டன்-கொழும்பு-யாழ்ப்பாணம் சொகுசுப் பயணக்காரரோ குறைந்த விலையில் இடிந்த வீடுகளை வாங்கி விடவேண்டுமென்று கடிதாய்ப் பறக்கிறார்கள்.

போர் ஆட்டம் கண்டிருப்பது இருவருக்குமே மகிழ்ச்சி.


யாழ்ப்பாணத்தில் ஒரு காட்சி. இரண்டு இளம் பெண்கள் ஒரு மிதி வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். முன்னாலுள்ளவர் ஹாண்டிலைப் *(Handle)* பிடித்துக்கொள்ள பின்னாலுள்ளவர் பெடல்களை *(Pedal)* மிதிக்கிறார். முன்னாலுள்ளவர் இரு கால்களையும் இழந்தவர். பின்னாலுள்ளவர் இரு கைகளையும் இழந்தவர். எதை இழந்தாலென்ன உயிருள்ள வரை மற்றவர்களுக்காகவும் வாழ்கிறோம் என்கிறார்கள் நீர்க்கலன்களைச் சுமந்து செல்கின்ற இவர்கள்.

இடது காலை இடுப்போடு தொலைத்து விட்டு நிற்கும் இன்னுமொரு இளம்பெண். ஒரு காலத்தில் போருக்குப் போனவள், அங்கவீனர் விடுதியில் சில்லுக் கதிரையிலிருந்து சொல்லிக் கொடுக்கிறாள் ஏனைய செயலிழந்த பெண்களுக்கு இரக்கம் தம்மீது வருவதை ஏற்கிறார்களில்லை இவர்கள். பிறர் வாழ்வுக்காய் தம் வாழ்வைத் தொலைத்தவர்கள் இருக்கும் வரையில் இன்னும் செய்வோம் என்று பிடிவாதம் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைப் போற் பலர். செயலுக்கு வடிவம் தர அவயவங்கள் அவசியமல்ல என்பதைக் குத்திக் காட்டும் அமானுஷ்ய பெண்கள் இவர்கள். போர் இவர்களைப் போல் எண்ணற்றவர்களைத் தந்திருக்கிறது. ஒருவரின் துயரம் இந்த உலகத்தின் துயரம் என்று உயிருள்ள சிலைகளாகி நிற்கும் இவர்களை அமானுஷ்யர்கள் என்று போற்றிக்கொள்வதா அல்லது இவர்களை உருவாக்கியமைக்காக போரையும் போரிடும் மனிதர்களையும் தூற்றிக் கொள்வதா?

சமாதானத்திற்கான கதவுகள் உடைக்கப்பட்டு விட்டன. அது எப்போதும் வரலாம்.

photo: Reuters





## பூமியிலே ஒரு கவிதை

'மரங்கள் சொல்லின:
மனிதனே எம்மால் ஒரு
சிலுவையைத் தரமுடியும்
உம்மால் ஒரு இயேசுவைத்
தரமுடியுமா?'

பரமண்டலத்தில்,
'ஆண்டுகள் இரண்டாயிரம் கழிந்தும்
சித்திரவதைக்கான சிலுவையையும்
மனித புத்திரனான பராபசுவையுமே
மனிதர் நினைக்கிறார்கள்.
பரமபிதாவே, அந்தப் பாவிகளை
மன்னித்தருளும்....!'

# எஸ்.பொ. கவிதைகள்

## பண்பு

அடர்ந்த காட்டுக்குள்
இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த
அந்த ஆதிவாசியைக் கண்டதும்
நாகரிகவான் திடுக்கிட்டான்.

'என்னுடன் வா, உன்னை
நாகரிகப்படுத்துகிறேன்'
என்று அழைத்து,
அவனுக்கு ஆடை வழங்கினான்.

'ஆண்டவன் படைத்த நிர்வாணத்தை
மறைப்பதுதான் நாகரிகமா?' என
ஆதிவாசி பயத்துடன் கேட்டான்.





## பக்தி

'பயங்கரவாதிகள் வெறிபிடித்து அலைகிறார்கள்'
என்று கத்தினார் தளபதி.

'ஆம்' என்று சொன்னான்
இளைஞன்
மீசை கறுக்கா வயசு.
'ஏன்' அவன் கன்னத்தில்
ஓங்கி அறைந்தார்.
'உங்கள் ஆதிக்க வெறிக்கு
எதிரான சுதந்திர வெறி!'
பக்தியிலே தோய்ந்த உறுதியுடன்
அமைதியாகக் கூறினான்.



தென்னவரின் தாளம் போட்டுச்
சேதி சொல்லும் நாளுக்காய்
செவ்வந்தி நான் பூத்திருந்தேன்

பூத்து இருந்து பார்த்துமென்ன?
புண்ணாகி நோகக் கண்டு
கொண்ட பலன் தானுணர்ந்து
கொட்டு மேளம் மறந்தேனடி!

பாக்குக் கொட்டும் சாலையிலே
பால் பழமும் சேர்த்து வைத்து
நாற்று நடும் வேளைதொட்டு
நாள் வருமென்று ஏங்கினேன் நான்

முத்துச் சம்பா வரப்பினிலே
மோகம் கொண்டு முத்திடவே
போர்த்து வந்த சேலைக்கும்
போட்டியாக நான் நலிந்தேன்

நலிந்து வந்த போதுமென்ன
நாடாது விலகிச் செல்ல
தேக்கி வைத்த என் இளமை
தேய் நிலவாய் இளைத்ததடி!

பனம் பழப் பாத்தியிலே
பகல் முழுதும் பார்த்திருந்தே
சொத்து சுகம் தேடித்தான்
சொந்தம் விட்டுப் போனாயென்றேன்

போனதுமோ பொன்னுக்கு அல்ல
பொன்விளையும் விடிவுக்காய்
காற்றில் வந்த கதை எனினும்
காத்திருக்கத் துணிந்தேனடி!

- மனோ ஜெகேந்திரன்
சிட்னி, அவுஸ்திரேலியா

# "எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின்"

நாட்கள் எனும் பூக்கள் நாளுக்கு நாள் மடிய யுகம் யுகமாய் கனிந்து கொண்டிருக்கிறது காலம். உலகில் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலமே வாழ்க்கையாகும். அவ்வாழ்க்கையை வாழவேண்டியதும், அதில் வெற்றி காணவேண்டியதும், மனிதர்களின் கடமையாகும். மனிதர்கள் இவ்வுலகில் பிறந்ததும் அவர்களுடைய கையில் இறைவன் வாழ்க்கையெனும் ஒரு கல்லை அளிக்கிறான். ஒரு சிற்பி தன் குறிக்கோளை மையமாக வைத்து, தனது சிற்றுளியால் முன் யோசனையுடனும் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் செதுக்கி செதுக்கி எப்படி எழில் மிகுந்த சிற்பத்தை வடிக்கிறாரோ அப்படியே அவரவர் குறிக்கோளுக்கேற்ப வாழ்க்கையும் அமைகிறது. உலகம் என்பது உண்மையில் இன்பத்தின் பிறப்பிடம். அதனை மனிதர் துன்பத்தின் இருப்பிடமாகச் செய்து கொண்டிருக்கின்றனர். சிலர் வாழ்க்கையில் வெற்றி வாகை சூடுவதற்கும் சிலர் வாழ்க்கையில் மண் கவ்வுவதற்கும் காரணம் அவரவர் மனம் தான். அந்த அமுத சுரபியே எல்லாவித காரியங்களுக்கும் நிவாரணம் அளிக்கிறது. தன்நம்பிக்கை, தைரியம், தளராத முயற்சிகளினால் மனம் உந்தப்படும் பொழுது, விளைவாகும் செயல்களினால் வாழ்க்கையில் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. மனித உடல் உள்ளத்தின் ஊழியன். உள்ளம் எதை நினைக்கிறதோ அதை உடல் பிரதிபலிக்கிறது. எனவே வன்மையாக உடலை ஆட்சி செய்து வாழ்வை உருவாக்கும் அரும் பெரும் கருவி எண்ணம்தான் என்பதை மறுக்க முடியாது.

"உடம்பால் அழியின், உயிரால் அழிவர், திறம் பெற மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்" என்கிறார் கவியரசு கண்ணதாசன். எண்ணம் எங்கு தோற்றம் பெறுகிறது என்பதைப் பற்றி பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் அது உள்ளத்தில் இருந்துதான் உற்பத்தியாகிறது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. செடியானது வித்தில் இருந்து முளைப்பதைப் போல மனிதரது ஒவ்வொரு செயலும் அவருடைய எண்ணத்தில் இருந்துதான் உண்டாகிறது. வித்தில்லாது எப்படி செடி இல்லையோ அவ்வாறே எண்ணமில்லாது செயலும் இல்லை. நாம் முன்பு எண்ணிய எண்ணங்களின் பலனாக தற்போதைய வாழ்வும் நாம் தற்போது எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணங்களின் பலனாக வருங்கால வாழ்வும் அமைகிறது. சுருக்கமாகக் கூறின் கோடிக்கணக்கான எண்ணங்களின் கூட்டுக் கலவையே மனித வாழ்க்கையாகும். இதைத்தான் மனம் போல வாழ்வு என்பர் பெரியோர். நல்ல எண்ணங்களை, நம்பிக்கையான எண்ணங்களை, மகிழ்ச்சியான எண்ணங்களை, எண்ணி வாழும் மனிதர்கள் எப்பொழுதும் நல்ல உடலமைப்பையும் நலமான வாழ்வையும் பெறுவர்.

ஒருவர் மற்றொருவர் பால் கொள்ளும் தீமையான எண்ணங்கள் அத்தீமையான எண்ணங்களை எண்ணுபவருக்கே தீமை பயக்க வல்லன. அவை சம்பந்தப்பட்டவரின் அகத்திலும் முகத்திலும் ஊறுகளை ஏற்படுத்தி விடுகின்றன. "கவலையில்லாமல் வாழ்ந்ததால் தான் எனக்கு முதிர் பருவத்திலும் நரை, திரை ஏற்படவில்லை" என்றார் பிசிராந்தையார் என்னும் பெரும் புலவர். நல்வாழ்க்கையின் மிகப் பெரும் எதிரியாக அளவுக்கதிகமான சுயநலம், பொய், களவு, காமம், பொறாமை ஆகியவை காணப்படுகின்றன. இவை மனித இதயம், ஈரல், மூளை ஆகியவற்றை இலகுவாகப் பாதித்து நோய்களைத் தோற்றுவிக்கின்றன. அழகைக் கெடுத்து அழிவையும் இழிவையும் ஏற்படுத்துகின்றன. பேராசை, பொறாமை என்பவற்றைத் தவிர்த்து, அன்பைத் துணையாக்கி வாழும் வாழ்க்கைதான் உண்மையில் உயர்ந்த வாழ்க்கை.

## பரதன் கந்தசாமி
### மட்டக்களப்பு

மனிதரின் அறிவுக்கு அபரிமிதமான ஆற்றலை இறைவன் வழங்கியுள்ளான். எவ்வளவு அழகாக எமது கைகளைப் படைத்து அதற்கு எத்தனை வகையான திறன்களையும் கொடுத்துள்ளான். எமது கட்புலன், செவிப்புலன் என்பவை எவ்வளவு மகத்தான ஆற்றல் உடையவை. எமது உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு வனப்பும், வளமும் திறனும் திறலும் மிக்கவையாக விளங்குகின்றன.

அனைத்தையும் அருமையாகப் படைத்து எம்மை உன்னத நிலையை அடையக் கூடிய வாய்ப்பையும் வழங்கிப் பெருமைப் படுத்திய இறை தத்துவத்தை சிறுமைப் படுத்துபவர்களும் எம் மத்தியில் இல்லாமல் இல்லை. உலகம் எவ்வளவு கொடுமையானது, எங்கு பார்த்தாலும் துன்பங்களும் துயரங்களும் நோய்களும் நொம்பலங்களும் அடக்கு முறைகளும் அழுகைகளும் ஏக்கங்களும் ஏமாற்றங்களும் என்று நொந்து புலம்புவது எவ்வளவு மடமையானது. உலகில் வறுமை எண்ணத்தைப் போன்று இழிவானது வேறு எதுவுமில்லை. நான் ஓர் ஏழை. இது இறைவன் எனக்கு விட்ட வழி என்று கூறுவது தன்னைத் தானே அவமானப்படுத்தும் செயலாகும். மனிதர்களைப் படைத்த இறைவன் இவர்கள் செல்வர், இவர்கள் ஏழை, இவர்கள் அறிஞர், இவர்கள் மூடர், என்று எவ்வித சிறப்பு அடையாளங்களையும் விசேடமாகப் படைக்கவில்லை. மனிதர்கள் யாவரும் இறைவன் முன்னிலையில் சரிசமமானவர்களே. இறைவன் எல்லோரையும் ஒரே கண்கொண்டுதான் பார்க்கிறான். மனிதன் உயர்வடைவதும் தாழ்வடைவதும் அவரவர் உள்ளத்தின் தன்மையைப் பொறுத்தே அமைகின்றன.

> ஒருவர் மற்றொருவர் பால் கொள்ளும் தீமையான எண்ணங்கள்அத்தீமையான எண்ணங்களை எண்ணுபவருக்கே தீமை பயக்க வல்லன. அவை சம்பந்தப்பட்டவரின் அகத்திலும் முகத்திலும் ஊறுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய உயர்வு

என்று கூறுகிறது குறள். வெள்ளம் உயர உயர தாமரை மலரின் தண்டின் அளவும் உயர்வதைப் போல உள்ளம் உயர வாழ்க்கையும் உயரும். பெரியமனிதர்களைப் போன்று எண்ணவும் செயலாற்றவும் செய்பவர்கள் நாளடைவில் பெரிய மனிதர்களாகவே ஆகிவிடுகிறார்கள். அதுபோல தாம் நலமாக வளமாக வாழ்வதாக நினைத்துக் கொள்பவர்களும் செயலாற்றி வருபவர்களும் வாழ்க்கையை வெற்றியுடையதாகவே அமைத்துக் கொள்கிறார்கள்.

வாழ்க்கையில் நம்பிக்கையும் முயற்சியும் அத்தியாவசியம். சோதனைகளும் வேதனைகளும் வந்துற்ற போது இவ்விரண்டும் உள்ளவர்களே தளர்ச்சி அடையாது வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். "எவர் எந்தப் பொருளில் நம்பிக்கை உடையவரோ அவர் அந்தப் பொருளை ஆள்கிறார்" என்கிறது ஸ்ரீமத் பகவத் கீதை. எந்த விடயத்திலும் நம்பிக்கை உடையவர்கள் வாழ்க்கையில் எந்த

விதத்திலும் வெற்றி பெறுவர். நெருப்பு எப்படி பொன்னை ஒளிரச் செய்கிறதோ அப்படியே நம்பிக்கை மனிதனை ஒளிரச் செய்கிறது. நம்பிக்கையும் துணிவும் இல்லாதவருக்கு ஒரு குப்பை மேடு கூட கடக்க முடியாத பெரிய மலையாகத் தோன்றலாம்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு" என்கிறார் எமது அய்யன். ஆவதும் அழிவதுமாகிய பலவும் எண்ணியே ஒன்றைச் செய்யத் துணிய வேண்டும். துணிந்த பின் இடையிலே எண்ணிக்கொள்வோம் என்பது குற்றமாகும். "நான் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்னர் இரண்டு அடி திரும்பிப் பார்ப்பேன் இது பயத்தாலோ அச்சத்தினாலோ அல்ல" எண்ணித் துணிய வேண்டும் என்பதனால்தான் என்றார் நெப்போலியன். நம்பிக்கையைப் போன்று மனிதரை அணிசெய்யும் குணங்களில் ஒன்று துணிச்சல். துணிவே துணையாகக் கொள்ளும் காரியங்கள் தோல்வியில் முடிவதில்லை. அச்சம் என்பது அறியாமையாலும் சலன புத்தியாலுமே ஏற்படுகிறது. மரணத்துக்குக் கூட அஞ்சாதவர்களே உலகில் சாதனைகள் படைத்து இறந்த பின்பும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்து வெற்றிக்கு வழிகோலும் மற்றுமோர் காரணி முயற்சியாகும். முயற்சி திருவினையாக்கும் முயற்சியின்மை இன்மை புகுத்தி விடும். அடிக்க அடிக்க அம்மியும் நகர்வதைப் போன்று ஆழமுயன்றால் ஆகாததொன்றில்லை.

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"
என்கிறார் குறள் ஆசிரியர். தெய்வத்தின் அருளால் கைகூடிவராது என்றாலும் முயற்சியால் தனது உடலை வருத்தும் போது அதற்கான பலன் கிடைக்கவே செய்யும். அடுத்து வெற்றிக்கனியை பெற்றுத்தருவதில் காலம், சந்தர்ப்பம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. கறந்த பால் முலை புகாது. கடந்த காலம் திரும்பி வராது. இளமை ஒருமுறைதான் வரும். இவ்வுலகில் ஒரு தடவைதான் வாழமுடியும் என்பதை உணர்ந்து காலமழியாது கருமமாற்றுபவர்கள் வாழ்க்கையில் வெற்றி காண்கிறார்கள்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"
காலத்தை நோக்கி ஒதுங்க வேண்டிய காலத்திலே நீர்க்கொக்கைப் போல் இருக்க காலம் வாய்ந்தபோது அக்கொக்கைப் போல் தாக்கி வெல்க என்ற வள்ளுவமே வெற்றியாளர்களின் ஒளிவிளக்கு. முன்னேற வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்கள் காலத்தை தவறவிடவோ வீண் விரயம் செய்யவோ மாட்டார்கள். அடுத்து வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். இலட்சியம் இல்லாத வாழ்க்கை மீகாமன் இல்லாத மரக்கலத்தைப் போன்றது. இதை சுவாமி விவேகானந்தர் அழகாகச் சொல்கிறார். "நீ உனது குறிக்கோளில் வெற்றியடைய வேண்டுமாயின் அக்குறிக்கோள் உன் குருதியோடு குருதியாக ஓடி உடல் முழுவதும் பரவி உன்னுடைய மயிர்க் காம்பின் வழியாக வெளியேறவேண்டும்."

எனவே உலகமெல்லாம் வியக்கும் வண்ணம் வெற்றி வாழ்க்கை வாழ விரும்பின் ஆனந்தம், ஆற்றல், அமைதி, ஆரோக்கியம் ஆகியவற்றின் கவசமான நம்பிக்கையை அணிந்து கொண்டு குறிக்கோளை நோக்கி எண்ணத்தை வன்மைப் படுத்தி தாளாண்மையுடன் உழைக்க வேண்டும். உயர்ந்த எண்ணம் உள்மனதைத் தொட வேண்டும். அந்த எண்ணமே உருப்பெறும். தகாதனவற்றை அழித்து தக்கனவற்றை வாழ வைக்கும் சக்தி எண்ணத்துக்கு உண்டு. மனித மனத்தினுள்ளே நின்றுலவும் எண்ணங்கள், கனவுகள், ஆசைகள், கற்பனைகள், நம்பிக்கைகள் தேவைகள் ஆகியவை எல்லாம் அவரைச் சூழ ஓர் எண்ண வளையத்தை உண்டு பண்ணுகின்றது.

விளக்கைச் சுற்றி எவ்வாறு வெளிச்ச வளைவு இருக்கிறதோ அதேபோல எண்ணவளைவு வாழ்வின் வெற்றிக்கு ஒளியூட்டுகிறது.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. எண்ணியவர்கள் மனவலிமையாலும் செயலாற்றும் திறனிலும் உறுதியானவர்கள் என்றால் அவர்கள் எண்ணிய படியே எல்லாவற்றையும் அடையலாம். எனவே எண்ணியதை திண்ணியதாகப் பெறுவதற்கு மேலே சொன்னபடி எண்ணத்தை உயர்த்தி இலட்சியப் பாதையில் முழு நம்பிக்கையோடும் முயற்சியோடும் தளர்ச்சியடையாமல் செயற்படுவோமாயின் வேதனைகளையும் சோதனைகளையும் வென்று சாதனை படைக்கலாம் என்பதில் ஐயமே இல்லை.



"எண்ணியர் திண்ணியராகப் பெறின்"
பகுதிக்கான தேர்வுக்குழுவில் இடம் பெற்றோர்
சுடர் மகேந்திரன்
பொ. கனகசபாபதி
வி. கந்தவனம்
T. சிவதாசன்
பரதன் (ரஞ்சினி)
சிவ ஞானநாயகன்
வரன்

## கட்டுரைப் போட்டி இல. 03

### "ஞாலத்தின் மாணப் பெரிது"

எமது வாழ்வில் பலர் பலவிதமான உதவிகளை நல்கியுள்ளனர். இவற்றில் ஏதாவது ஒன்று அதன் மேன்மைக்காக எமது மனதைவிட்டு அகல்வதில்லை. உங்கள் நினைவில் இத்தகையதொரு உதவி நிற்கின்றதாயின் அதனைப்பற்றியும் அது உங்கள் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றம் பற்றியும் எம்முடன் கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

சம்பவங்களை சுவையான கட்டுரைவடிவில் எழுதி உலகத்தமிழோசை முகவரிக்கு அனுப்புங்கள்.

### கட்டுரை போட்டி விதிகள்:

1. கட்டுரை உலகத்தமிழோசை முகவரிக்கு January 31, 2003 இற்கு முன்னர் வந்து சேர வேண்டும்.

2. கட்டுரை ஏறத்தாழ 1500 சொற்களடங்கியதாக இருக்க வேண்டும்.

3. உங்களது ஆக்கம் உங்கள் சொந்த முயற்சி என்றும் வேறு எந்த ஊடகங்களில் இதற்கு முன்னர் வரவில்லை என்றும் உறுதிப்படுத்த வேண்டும்.

4. உலகத்தமிழோசைக்கு கிடைக்கும் ஆக்கங்களில் தரமானவை இனிவரும் "உலகத்தமிழோசை" இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

5. "கட்டுரை போட்டி இல. 03" இற்கு கிடைக்கப்பெறும் கட்டுரைகளில் மிகவும் சிறப்பானது என்று ஆசிரியரால் தெரிவுசெய்யப்படும் ஒன்றிற்கு உலகத்தமிழோசை பப்ளிக்கேஷன்ஸ் சார்பில் CDN $100.00 பரிசாக வழங்கப்படும்.

6. பரிசுபெற்ற ஆக்கத்தை அனுப்பியவரோடு மட்டுமே உலகத்தமிழோசை தொடர்புகொள்ளும். இப்போட்டியில் பங்குபற்றும் எல்லா வாசகர்களுக்கும் உலகத்தமிழோசை தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

7. உலகத்தமிழோசை நிறுவனத்தினர், உறவினர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

8. ஆசியரின் முடிவே இறுதியானதும், முடிவானதும் ஆகும்.



## நினைவுகள் அழிவதில்லை

# ஆழ்கடல் நடுவே அகதிகளாக...

எஸ். சந்திரபோஸ், கனடா

1990ஆம் ஆண்டு ஆவணி மாதம் எனது குடும்பத்துடன் யாழ். நகரில் கலைப் புலவர் வீதியில் அமைந்திருந்த எமது வீட்டில் வசித்து வந்த காலம் அது.

கலைப்புலவர் வீதி என்பது யாழ். ஸ்ரான்லி வீதியில் ஆரம்பித்து ஸ்ரீதர் படமாளிகைக்கும், புகையிரதப் பாதைக்கும் இடையாகச் சென்று மணிக் கூண்டு வீதியில் முடியும் சிறுவீதி. இவ்வீதியில் யாழ். மத்திய கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும் அமரருமான கலைப்புலவர் நவரெத்தினம் அவர்கள் பிறந்து வளர்ந்த வீடு அமைந்திருந்தமையினால் யாழ். மாநகர சபையினர் இவர் நினைவாக இப் பெயரினைச் சூட்டியிருந்தனர்.

இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேறிய பின்னர் மீண்டும் ஸ்ரீலங்கா அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மோதல் வெடித்திருந்தது. விடுதலைப் புலிகள் கோட்டையை முற்றுகையிட்டு இருந்தனர். பலாலி, நாவற்குழி, மண்டைதீவு முகாம்களில் இருந்தும் அரச படைகளின் தரை வழி நகர்வு மட்டுப் படுத்தப்பட்டு இருந்தது. இதனால் கோட்டைக்குள் முடக்கப்பட்ட படையினரும் ஏனைய முகாம்களில் இருந்த அரச படையினரும் யாழ். நகரக் குடியிருப்புக்கள் மீது எறிகணைகளை வீசினர். இடையிடையே அதிகாலை வேளைகளில் வவுனியா விமானப் படைத் தளத்திலிருந்து பறந்து வரும் குண்டு வீச்சு விமானங்கள் தாழப் பறந்து புலிகளின் முகாம்களைத் தகர்ப்பதாகத் தம்பட்டம் அடித்து மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுகளை வீசி மீளும். அடிக்கடி உலங்கு வானூர்திகள் இலக்கின்றி இயந்திரத் துப்பாக்கிகளை வானிலிருந்து இயக்கி வகை தொகையின்றி குண்டு மாரி பொழியும். இவ்வேளையில் மக்கள் சிதறுண்டு ஓடுவதும் பதுங்கு குழிகளையும் பாதுகாப்பரண்களையும் நாடி ஓடுவதும் ஒளிவதும் நாளாந்த வாழ்க்கையின் ஓர் அம்சமாகிவிட்டது. இதற்கு நானும் எனது குடும்பமும் என்ன விதிவிலக்கா? நமக்கும் இதே நிலைதான். தொடர்ச்சியாக அரச படைகளின் தாக்குதல் நடைபெறும் சமயங்களில் நான் குடும்பத்துடன் யாழ். புறநகர்ப் பகுதிகளுக்கு பாதுகாப்பு நிமித்தம் இடம் பெயர்வதும் அடிக்கடி நடைபெறும் நிகழ்வாகியது.

இத்தகைய சூழ்நிலையில் ஸ்ரீலங்காவில் இடம் பெற்ற 1983 ஆடி அமளியில் இரண்டு உயிர்களையும் உடைமைகளையும் இழந்து, பலதலைமுறைகளாக வாழ்ந்த பதுளை நகரைவிட்டு இடம் பெயர்ந்து, எனது மாமனாரும் அவரது மூத்தமகன் குடும்பத்தினரும் யாழ். நகரில் எமது அயலில் ஒரு வாடகை வீட்டில் குடியேறி இருந்தனர். மைத்துனர் 1989இல் கனடா சென்றுவிட்டார். அவர் தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் ஸ்பொன்சர் செய்திருந்தார். இதனால் மைத்துனரின் குடும்பம் கொழும்பிலுள்ள கனடாத் தூதராலயத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு 1990ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ஆம் திகதி செல்ல வேண்டியிருந்தது.

இந்தக் காலகட்டத்தில் கொழும்புக்கான விமானப் போக்குவரத்தோ, புகையிரதப் போக்குவரத்தோ கிடையாது. யாழ். பேரூந்து நிலையமும் புலிகளின் கட்டுப்பாட்டில் முத்திரைச் சந்தைப் பகுதியில் இயங்கி வந்தது. கொழும்பு செல்வோர் விடுதலைப் புலிகளின் அனுமதி பெற்று யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை சென்று அங்கிருந்து கொழும்பு செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. இந்தப் பயணம் மிகவும் பாதுகாப்பற்ற பயணமாகவே இருந்தது. அரச படைகளும் சிங்களக் கொள்ளையர்களும் சிங்களப் பிரதேசங்களில் வைத்து தமிழ்ப் பயணிகளின் உடமைகளையும் உயிரையும் அபகரித்தனர். பெண்பிரயாணிகள் மீது பாலியல் வன்முறையிலும் ஈடுபட்டனர் என்பதும் நாளாந்தப் பத்திரிகைச் செய்திகளாயின. இந்த நிலையில் எனது மைத்துனரின் மனைவி தனது பிள்ளைகளுடன் கொழும்பு செல்லப் பயந்தார். ஆயினும் எப்படியும் கொழும்பு சென்று நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் யாழ். நகரில் இருந்த மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக மீன்பிடி வள்ளங்களில் யாழ். நகரின் பலதுறைகளிலிருந்தும் இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்தனர். எனது மாமனாரும் தனது மகன் குடும்பத்தினரை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கொழும்பு சென்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றச் செய்யலாம் என அபிப்பிராயப் பட்டார். இக்கடல் வழிப் பயணமும் உத்தரவாதம் அற்றபோதிலும் எனது மைத்துனரின் மனைவியும் இவ்வழியில் செல்வதற்கு உடன்பட்டார்.

இந்த வேளையில் எனது நண்பர் ஒருவரும் யாழ். நவீன சந்தையின் வியாபார ஸ்தாபனம் ஒன்றில் உரிமையாளர் ஒருவரும் இணைந்து தங்கள் குடும்பங்களைப் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல ஒரு மீன்பிடி இயந்திரப் படகினை வாங்கிப் பயண ஏற்பாட்டினைச் செய்து கொண்டிருந்தனர். இவர்களுடன் தொடர்பு கொண்டதன் பலனாக எனது மாமனாரும், மைத்துனருடைய குடும்பமும் எனது இருமகன்மாரும் (14, 11 வயது) இன்னமும் சில நண்பர்களின் குடும்பங்களும் இணைந்து மண்கும்பான் பகுதியிலிருந்து 1990ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18ஆம் திகதி இரவுப் பயணத்தை ஆரம்பித்தனர். இவர்கள் மறுநாள் காலை தமிழ் நாட்டின் தொண்டித்துறையைச் சென்றடைந்த செய்தியை நாங்கள் அறிய 1990 புரட்டாதி மாதம் 18ஆம் திகதி வரை சரியாக ஒரு மாதம் காத்திருந்தோம்.


இந்த ஒருமாத இடைவெளிக்குள் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலைமைகள் யுத்தம் காரணமாக மிக மோசநிலையை அடைந்திருந்தன. யாழ். நகரப் பகுதிகள் சூனியப் பிராந்தியமாக மாறி இருந்தன. நானும் மனைவியும் எனது அன்னையும் இளைய சகோதரி குடும்பமும், நல்லூர் சங்கிலியன் வீதி, கொக்குவில் பொற்பதி வீதி, ஆனைக்கோட்டை என மாறி மாறி இடம் பெயர்ந்து கொண்டிருந்தோம்.

“யாழ். நகரில் இருந்த மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக மீன்பிடி வள்ளங்களில் யாழ். நகரின் பலதுறைகளிலிருந்தும் இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்தனர். எனது மாமனாரும் தனது மகன் குடும்பத்தினரை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கொழும்பு சென்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றச் செய்யலாம் என அபிப்பிராயப் பட்டார்.”

இச்சூழ்நிலையில் எனது சகோதரி குடும்பம் அகதியாக இந்தியா சென்றுவிட முடிவு செய்து எங்களையும் அழைத்தனர். எனது மனைவியும் மகன்மாரை பார்க்க ஆவலுற்றிருந்தாள். அம்மா எங்கும் வர மறுத்து விட்டார். எனது இளைய சகோதரனுடன் தான் இருப்பதாகவும் என்னை மனைவியையும் சகோதரி குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு இந்தியா செல்லும்படி அறிவுறுத்தினார். நானும் எனது மனைவியும் எனது இளைய சகோதரி, அவரது கணவர் பிள்ளைகள் இருவர் (4 வயது, 8மாதம்) ஆகியோர் 1990ஆம் ஆண்டு புரட்டாதி 15ஆம் திகதி இரவு வேலணைத் துறையிலி-ருந்து மொத்தம் 68 பேருடன் படகு ஒன்றில் இந்தியா நோக்கிப் புறப்பட்டோம்.

ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் தான் பிரதம ஓட்டியார். இவர் குடும்பமும் இப்படகில் பயணம் செய்தனர். இவருக்கு உதவியாளர்களாக குருநகரைச் சேர்ந்தவர் ஒருவரும் வேலணை-யைச் சேர்ந்த இன்னொருவரும் இருந்தார்கள்.

நாங்கள் பயணத்தை ஆரம்பித்தநாள் வளர்பிறைக் காலம். புறப்படும்போது வானத்தில் வெளிச்சம் இருந்தது. சிறிது நேரப் பயணத்தில் வானம் கும்மிருட்டாகியது. தூரத்திலிருந்த தீவுகளிலிருந்து மின்மினியாகத் தெரிந்த வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் இல்லை. வேகமாக ஓடும் படகில் மோதும் கடலலைகள் வெள்ளித் திவலைகளாக ஜாலம் காட்டின. படகு ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக அறுபத்தியெட்டுப்பேரைச் சுமந்து கொண்டு ஆழ்கடலில் ஓடிக்கொண்டிருந்தது. சிலமணிநேரப் படகுப் பயணத்திலேயே பலர் களைத்து விட்டனர்;



சிலர் வாந்தியும் எடுத்தனர். சில மணித்துளிகள் செல்ல தொலைவில் ஒரு தீவில் பிரகாசமான வெளிச்சம் தென்பட்டது. அது நயினாதீவு ஸ்ரீலங்கா கடற்படை முகாம் என அறிந்தோம். அதே வேளையில் எங்களை இடைமறித்த எம்மவர் படகு ஒன்று மேற்கொண்டு பயணத்தை நாங்கள் தொடர்வது ஆபத்து என்றும் கடற்படையினரின் ரோந்துப் படகுகள் நயினாதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் நடமாடுவதாகத் தெரிவித்தனர். எனவே பக்-கத்தில் உள்ள தீவு ஒன்றில் கரை இறங்கி நிலைமைகளை அனுசரித்து பயணத்தைத் தொடர்வதென ஓட்டிகள் தீர்மானித்தனர்.

பக்கத்திலிருந்த பருத்தித் தீவுக்குப் படகினை ஓட்டிச் சென்றனர். நெஞ்சளவு தண்ணீரில் படகுக்கு நங்கூரமிடப்பட்டது. பருத்தித் தீவின் கரைவரை படகினை ஓட்டிச் சென்றால் படகு தரை தட்டிவிடும் என படகோட்டித் தலைவன் கூறியதைக் கேட்டு அனைவரும் நெஞ்சளவு தண்ணீரில் குழந்தை குட்டிகளைத் தோளிலும், தலையிலும் சுமந்த வண்ணம் பருத்தித் தீவினைச் சென்றடைந்தோம்.

அந்தத் தீவில் ஒரு சிறு கிறிஸ்தவ தேவாலயம் அமைந்திருந்தது. அங்கு ஒரு பாதிரியாரும் இரு உதவியாளர்களும் மட்டுமே இருப்பதாக அங்கு சென்ற பின் அறிந்தோம். அங்கு சென்ற அத்தனைபேரும் தங்க எதுவித வசதிகளும் இல்லை. பாதிரியார் பக்கத்திலிருக்கும் அனலைதீவுக்குச் சென்றால் அங்கு நாங்கள் அனைவரும் தங்குவதற்கான வசதிகள் உண்டு எனக் கூறினார். ஓரிரு மணி நேரம் அத்தீவில் இருந்துவிட்டு வீசும் குளிர்காற்றில் நடுங்கிய வண்ணம் மீண்டும் படகில் ஏறி அனலை தீவுக் கரையை சில நிமிடங்களில் அடைந்தோம். அங்கும் இடுப்பளவு தண்ணீரில் இறங்கிக் கரை அடைந்தோம். நள்ளிரவாகிவிட்டது. நாங்கள் அனைவரும் இட்ட ஆரவாரத்தில் அனலைதீவு கரையோரத்திலிருந்த குடியிருப்பாளர் சிலர் தமது குடிசைகளை விட்டு வெளியே நெருப்புப் பந்தங்கள், 'ரோச்லைற்' சகிதம் வந்து எமது நிலமைகளைப் புரிந்து கொண்டு தீவின் உட்பகுதியில் அமைந்திருந்த பாடசாலை ஒன்றிற்கு அழைத்துச் சென்று தங்க வைத்தனர். குழந்தைகள் சிறுவர்கள் களைப்பில் தூங்கி விட்டனர். பெரியவர்கள் எங்கள் அவலத்தை நினைத்து விடியும் வரை புலம்பிக் கொண்டிருந்தனர்.

மறுநாள் விடியலின் போது பாடசாலைக்கு அக்கம் பக்கம் இருந்த மக்கள் நாங்கள் வந்ததை அறிந்து பல வழிகளிலும் உதவ முன்வந்தனர். அவர்கள் தேனீர் தயாரிப்பதற்கும் சமையலுக்கும் பாத்திரங்களை வழங்கி உதவினர். கிராமசேவகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எங்கள் பரிதாப நிலை கண்டு பல வழியிலும் பாடசாலையில் ஓரளவு வசதியாகத் தங்குவதற்கு உதவிகளைச் செய்தனர். எங்களிடம் பணமிருந்தமையினால் அங்கிருந்த கூட்டுறவுக் கடையில் சமையல் பொருட்களை வாங்கி எல்லோரும் சேர்ந்து சமைத்து உண்டோம். இருநாள் பொழுது அனலைதீவில் கழிந்தது. இதற்கிடையில் எங்களுக்கு முன் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று அனலை தீவைத் தாண்டிச் செல்லும் போது ஸ்ரீலங்காக் கடற்படையினரின் தாக்குதலுக்குள்-ளாகி மூழ்கடிக்கப்பட்டதாக அறிந்தோம். எங்க-ளையும் மரணபயம் பற்றிக்கொண்டது. அனலை தீவு மக்கள் எமக்கு ஆறுதல் அளித்தனர்.

இரண்டு நாட்கள் களித்து மீண்டும் 17 புரட்டாதி இரவு அனைவரும் அனலைதீவில் இருந்து எமது படகில் ஏறி இந்தியப் பயணத்தைத் தொடர்ந்தோம். ஏற்கனவே களைத்திருந்த மக்கள் சிலர் கடல் பயணத்தில் மயக்க நிலை அடைந்தனர். கடல் அலை ஆர்ப்பரித்து எழுந்து படகினைப் பலமாக ஆட்டியது. படகு கடலலைகளுக்கு ஈடுகொடுத்து பாய்ந்து பாய்ந்து சென்றது. ஓங்கி எழும் அலைகள் படகில் இருந்த அனைவரையும் நீராட்டியது. படகில் சத்தமும் பிரார்த்தனைகளும் அதிகரித்-தன.

மறுநாள் விடியும் வரை படகு ஓடியது. காலைக் கடன்களை படகுக்குள்ளேயே பலர் நிறை வேற்றினர். சூரிய உதயத்தின் பின்னர்தான் நாங்கள் தமிழ்நாட்டின் கோட்டைப் பட்டினத்தைச் சென்றடைந்தோம். அங்கு தமிழகக் காவல் துறையினரும் சுங்கப்பகு-தியினர், முதலுதவிச் சிகிச்சைப் பிரிவினர், கலெ க்டர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் என்ப பலர் நின்றிருந்தனர். அவர்கள் எங்களை கரையிறங்க அனுமதித்து எங்களுக்கு வேண்டிய முதலுதவிகளை அளித்தனர். படகு தமிழக காவல் துறை சுங்கப் பகுதியினரால் கரைக்கு கொண்டு வரப்பட்டு அதன் இயந்திர சாதனங்கள் கழற்றி எடுக்கப்பட்டன. ஓட்டிகள் மூவரும் பலத்த விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு பின்னர் எங்களுடன் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். எல்லோரும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆதனங்கோட்டை அகதி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டோம். அங்கு பலவழிகளிலும் உத-விகள் வழங்கப்பட்டன. இந்த சந்தர்ப்பம் எங்கள் அனைவருக்கும் மறுபிறப்பாக அமைந்தது. ஆத-னங் கோட்டையிலிருந்து தொலைபேசி மூலம் மதுரையில் உள்ள எனது மனைவியின் சகோதரி வீட்டுக்குத் தொடர்பு கொண்ட போது தான் எனது மாமனாரும் மைத்துனர் குடும்-பமும் விமானம் மூலம் கொழும்பு சென்று விட்ட-தாகவும் எங்கள் இரு மகன்மாரும் அவர்கள் வீட்டில் தங்கி இருப்பதனையும் அறிந்து ஆறு-தல் அடைந்தோம்.

"நினைவுகள் அழிவதில்லை"
பகுதிக்கான தேர்வுக்குழுவில் இடம் பெற்றோர்:


Dr. E. பாலசுந்தரம்
செல்வராணி நடராஜா
நாமகள் சிவகுமார்
P. ஞானேஸ்வரன்
செழியன்
எஸ். கேதீஸ்வரன்
எஸ்.கே. தீசன்
T. ஜெகதீசன்
சிவ ஞானநாயகன்

கட்டுரைப் போட்டிகளிற்கு ஆக்கங்களை எழுதிய அனைத்து எழுத்தாளர்களிற்கும் உலகத்தமிழோசை தமது நன்றியைத் தெரிவிக்கின்றது.

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த கட்டுரைகள் எதிர்வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

## Welcome to Canada!

Let Scotiabank help fulfill your dream of home ownership



# *Mortgages*

கனடா தேசத்தில் உங்கள் புது வாழ்வு மலரும் நேரத்தில் மனமுவந்து உதவிடக் காத்திருக்கிறோம்.

- புலம்பெயர்ந்தவர்கள் புதிய தேசம் ஒன்றில் இணைந்து வாழும் இன்பக்கனவு எம்மால் நிதர்சனமாக்கப்படும்.
- ஸ்கோஷியா வங்கியை நாடுவதன் மூலம் புகுந்த தேசத்தின் சவால்கள் எளிதாகிவிடும்.



**Vyra Karunananthan**

Mortgage Development Manager
*Greater Toronto Area*

**416.410.7373**

Pager: 416.374.2369
Fax: 416.759.8506
vyra.karu@scotiabank.com
mdm.scotiabank.com/vyrak

**Scotiabank**™

# நவீன உலகின் கார்

சிக்கலான இயந்திரம் இல்லை, ஓட்டுநர் சில்லு (steering wheel) இல்லை; வேகத்தடை கூட (brake) இல்லை.

இதற்காக காரே இல்லை என்று நினைத்து விட வேண்டாம். இதுதான் எதிர்காலக் கார். உலகின் முன்னணி கார் தயாரிப்பாளரான ஜெனரல் மோட்டர்ஸ் அண்மையில் பாரிசில் நடைபெற்ற மோட்டார் வாகனக் கண்காட்சியொன்றில் இத்தகையதொரு வாகனத்தை அறிமுகம் செய்தது.



Autonomy என்று அழைக்கப்படும் இவ்வாகனம் இவ்வருட இறுதிக்குள் சந்தைக்கு வரக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனத்தின் அமெரிக்கத் தலைமையகத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நூறாண்டுகளுக்கு முன்னர் கார் அறிமுகப்படுத்திய பின்னர் மோட்டார் வாகனப் பிரிவின் மிக முக்கிய தொழில் நுட்பப் புரட்சி என வர்ணிக்கப்படும் இக்கார் இரு முக்கிய தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பாவித்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒன்று பெற்றோலுக்குப் பதிலாக வாயு மண்டலத்தில் உள்ள ஐதரசனைப் பாவித்து சக்தியை உருவாக்கும் "எரிபொருள் கலங்களை" (fuel cells) கொண்டது. மற்றது drive -by-wire- அதாவது, ஓட்டுநர் சில்லு மற்றும் வேகத்தடை ஆகியவற்றிற்குப் பதிலாக play-station விளையாட்டுப் பொருட்களின் இயக்கும் விளையாட்டுப் பொருட்களின் இயக்கும் தளம் (control ) அல்லது விமான ஓட்டியின் தளம் போன்ற கையினால் மட்டும் இயக்கப்படும் பாகங்களைக் கொண்ட தளத்தைக் கொண்டது. இதில் ஒரு வசதி என்னவென்றால் ஓட்டுநர், சில்லு, வேகத்தடை போன்றவை இல்லாததினால் ஓட்டுநர் வசதிக் கேற்றவாறு வாகனத்தில் எங்கும் இருக்கலாம்.



ஏற்கனவே Mercedes நிறுவனத்தின் SL500, BMW நிறுவனத்தின் 7 Series கார்களில் இந்த Drive - by -wire தொழில் நுட்பத்தின் பல பகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன.

எனினும் இத்தகையதொரு காரை நெடுந்தூரம் இயக்கத் தேவையான சக்தியைப் பிறப்பிக்கக் கூடிய வகையில் எரிபொருள் கலங்களின் தொழில் நுட்பம் முன்னேறவில்லை என்பதை பல மோட்டார் வாகனத்துறை வல்லுநர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அதேபோன்று பயணிகள் பாதுகாப்பும் விலையும் அன்றாட வாழ்க்கைக்கு இந்த கார் உபயோகப்படுத்தப்பட முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. எனினும் சூழல் மாசடைதல் ஒரு முக்கிய பிரச்சினையாகி விட்ட இக்கால கட்டத்தில், ஐதரசனைப் பாவித்து நீராவி-யையும், வெப்பத்தையும் மட்டுமே கழிவுப் பொருட்களை வெளியிடும் இத்தகைய கார்கள் விரைவில் சந்தைக்கு வரப்போவது நிச்சயம்.

## முன்னுரை பற்றித் தெரியா சிறுவர்

இது கணினி - இணைய யுகம். அதிலும் சிறுவர்கள் இப்போதெல்லாம் கணினி முன் மணிக்கணக்கில் உட்கார்ந்து கணினி விளையாட்டுக்களை விளையாடுவதையும் இல்லை, இணைய மூலம் ஏனையோருடன் தொடர்பு கொள்வதையுமே பிரதான பொழுது போக்காக் கொண்டுள்ளனர் என்பது பல ஆய்வுகளின் முடிவு.

இப்போது இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்று பல அதிர்ச்சியூட்டும் உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளது. இங்கிலாந்தில் ஏழு முதல் பதினாறு வயதுக்கு இடையிலான சிறுவர்களில் 60 வீதமானோருக்கு Home Page என்றால் என்னவென்று தெரியும். ஆனால் புத்தகத்தின் முன்னுரை என்பது என்னவென்பது ஒன்பது வீதமானோருக்கே தெரியும்.


ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆயிரம் சிறுவர்களில் 70 வீதமானோருக்கு www என்ற பதத்தின் விளக்கம் தெரிந்திருந்தது; ஆனால் 25 வீதத்தினருக்குகே அழைப்பிதழ்களில் காணப்படும் RSVP என்ற பதத்திற்கு (அழைப்புக்குப் பதிலளித்தல்) விளக்கமளிக்க முடிந்தது.




## ஒளிஓவியம்



படம்: விஜய் ஆனந்த்




இந்தியாவில் சுற்றுலா, திருமண சேவைகளிற்கு
இந்தியா: 44.621.0294
கனடா: 416.267.0408

கனடாவில் 15 வருடங்களிற்கு மேலாக
**GNANAM'S STUDIOS**
தொடர்புகளுக்கு: கதிர்
**416.750.8118**


**NORTH EAST Herold**
வடக்குக் கிழக்கிற்கான
புதியதொரு வாரப்பத்திரிகை

CTR
www.ctr24.com
416.264.8798

கீதவாணி
24 மணி நேரத் தமிழ் வானொலி
416.267.1100
www.worldtamilradio.com

இப் பகுதியில் சிறு விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் உலகத் தமிழோசையுடன் தொடர்பு கொள்ளவும்.

# குறுக்கு எழுத்துப் போட்டி இல. 03




### இடமிருந்து - வலம்

1. இலங்கை அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்திய கடற்படைத் தளம்
3. பத்து மில்லியன் (வல -இட)
5. நெசவு இயந்திரம் (வல -இட)
6. நடுநிலை
7. வடம் (வல - இட)
8. படி (வல - இட)
9. மலர்
10. நினைவு
11. ஐவகை நிலங்களில் ஒன்று
13. குளிர்ச்சி (வல - இட)

### மேலிருந்து கீழ்

1. சமத்துவம்
2. பூமாலை
3. நவரத்தினங்களில் ஒன்று
4. உலுக்கு
8. உறுதியாகப் பேசு
10. முடிவு (கீழ் - மேல்)
11. பாலில் இருந்து பெறப்படுவது (கீழ் - மேல்)
12. குறை (கீழ் - மேல்)
13. கொடை (கீழ் - மேல்)

குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் ஜனவரி 1, 2003 இற்கு முன்பாக உலகத்தமிழோசை முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். சரியான பதில்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்.

குறுக்கெழுத்துப் போட்டி "உலகத் தமிழோசை" சஞ்சிகையின் மேலேயுள்ள பெட்டியில் மட்டுமே நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

முதல் பரிசு **Can$50.00** - "யோகாஸ்" கனடா
இரண்டாவது பரிசு **Can$40.00** - "நிரு ஐரோப்பா லிமிட்டட்" இங்கிலாந்து
மூன்றாம் பரிசு **Can$30.00** - "ரகு என்டர்பிரைசஸ்" கொழும்பு, இலங்கை
ஆகியோரின் ஆதரவில் வழங்கப்படுகின்றன.

உலகத்தமிழோசை, யோகாஸ், நிரு ஐரோப்பா லிமிட்டட், ரகு என்டர்பிரைசஸ் நிறுவனத்தினர், உறவினர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளுதல் தவிர்க்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் முடிவே இறுதியானது.

---


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சௌ | பா | க் | 2 கி | ய | ம் | | 3 இ |
| ந் | | | ளை | | | | ள |
| 4 த | டி | | ஞ | | ம் | ட | 5 வே |
| ரி | 6 வ | | ர் | ண | 7 து | | ணி |
| 8 ய | 9 சு | ர் | | | வ | | ல் |
| ம் | | 10 நா | ல | டி | 11 யா | ர் | |
| | டு | | | | | ட | 12 க |
| 13 கோ | 14 மே | த | க | ம் | | 15 ப | ணி |

## போட்டி 02இல் வெற்றிபெற்றவர்கள்

1. திரு. கே. இராஜதுரை (ஜேர்மனி)
2. செல்வி. அனுராதா செல்வநாதன் (இலங்கை)
3. திரு. இ. செந்தில்வேல் (கனடா)

### வாசகர்களின் கவனத்திற்கு

உலகத் தமிழோசைக்கு உங்கள் ஆக்கங்கள் (அரசியல், விஞ்ஞானம், ஆன்மீகம், விளையாட்டு, இலக்கியம், கலை பண்பாடு) எதிர்பார்க்கப் படுகின்றன. இலக்கியம் தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் 600 சொற்களுக்குள்ளானதாக இருத்தல் விரும்பத் தக்கது. ஆக்கங்களை எழுதி அனுப்புபவர்கள் தாளின் ஒரு பக்கத்தில் போதிய இடைவெளியுடன் அடித்தல், திருத்தலின்றி எழுதி அனுப்புங்கள். ஆக்கங்கள் தமிழோசைக்கென எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். தெளிவு, இட நோக்குகளுக்காக ஆக்கங்களை திருத்துவதற்கு ஆசிரியருக்கு உரிமை உள்ளது.




ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை!!!

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகன திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்




**New Trade Engineering INC.**

Also Air Condition Service & Repair



**Sivabalan: 416-750 1573**


**151 Nantucket Blvd., Unit #12, Toronto, ON**




அதி நவீன உபகரணங்களுடன்
நிபுணத்துவம் வாய்ந்த அச்சுக் கூடம்

RJ Multi Litho Inc.

4090 Ridgeway Dr. , Unit 18, Mississauga, ON,
Canada, Tel: 905.569.7883, Fax: 905.569.9681

சுடர் இ. மகேந்திரன்

# யாழ் மடல்

### சமாதானம் சமாதானம் சமாதானம்

சிறிலங்காவில் நிரந்தர சமாதானம் ஏற்படுமா? என்பது தமிழ் மக்களின் மாத்திரமல்ல சிங்கள மக்களினதும் ஏக்கமுமாகும். தற்காலிக சமாதானமும் "ஏ 9" பாதையெனும் பிரதான பாதைத் திறப்பும் இலங்கை வரலாற்றில் முக்கிய சம்பவங்களாகும். இவை இரண்டும் வடபகுதி தமிழ் மக்களின் வாழ்க்கையை மிகவும் மாற்றத் தொடங்கி விட்டதை அவதானிக்க முடிகின்றது. நாளாந்தம் பெருந்தொகையான சிங்கள மக்கள் யாழ்ப்பாணம் வருவது சர்வசாதாரணமாகி விட்டது. இவர்கள் நாகவிகாரைக்கு மாத்திரம் செல்லவில்லை. நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் செல்வது சமாதானத்தின் நல்ல அறிகுறியாகும். தென்னிலங்கை சமாதானக்குழு சமர்ப்பணம் செய்த பெரிய வேலொன்று கோயில் குளத்தின் நடுவே உயர்ந்து நிற்கின்றது. ஒருபுறம் பழனியாண்டவர் மறுபுறம் ஆறுமுகசுவாமி. என்ன அற்புதமான காட்சி. சுற்றுலா வருபவர்கள் வல்வெட்டித்துறைக்கு சென்று மிகுந்த ஆவலுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லத்தையும் தரிசிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


சமாதான நல்லெண்ணமாக யுத்தக் கைதிகளை அரசும் புலிகளும் பரிமாறிய சம்பவம் வரலாற்றுச் சம்பவமாகியது. கடல்படைத் தளபதி பொயாகொடா, றவீந்திரா ஜெயலத் ஆகியோர் புலிகளால் கையளிக்கப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாகும். இவர்கள் இருவரும் எட்டு வருட காலம் புலிகளால் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களாவர். பொயாகொடா தனது இல்லத்தில் மனைவி மக்களோடு மகிழ்ந்திருந்த வேளையில் அன்புத் தாயார் அங்கு வந்து சேர்ந்தார். அம்மா! அப்பா ஏன் வரவில்லையா? என்று பொயாகொடா சற்று விசனத்துடன் விசாரித்தார். சுற்றியிருந்தவர்கள் விம்மியழுதனர். ஆம்! அவரது அன்புத் தந்தை ஒருவருடத்துக்கு முன் காலமானது கூட பொயாகொடாவிற்கு தெரிந்திருக்கவில்லை. இதுதான் யுத்தத்தின் கொடுமை. பதினொரு புலிப்போராளிகள் அரசாங்கத்தினால் விடுதலை செய்து புலிகளிடம் கையளிக்கப்பட்டனர். இரு தரப்புச் சிறைக் கைதிகளும் பரிமாறப்பட்ட நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகியது. இராணுவ உயர் அதிகாரிகளும் புலி உயர்மட்டத் தளபதிகளும் ஏற்கனவே தீர்மானித்தபடி கலந்து அமர்ந்து சுமுகமாக உரையாடி கைதிகளைப் பரிமாற்றினார்கள். தமிழ்ப் பத்திரிகைகள் இந்த நிகழ்வை, மாற்றத்தை மகிழ்ச்சியோடு வரவேற்று முக்கியத்துவப்படுத்தின. ஆனால் தென்னிலங்கையில்...? சிலர் இந்த "கலந்து" இருந்ததை வன்மையாகக் கண்டித்தனர். கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். இராணுவ உயர் அதிகாரிகளுடன் எப்படி முன்னாள் தீவிரவாதப் புலிகள் தளபதிகள் இருக்க முடியும் எனச் சீறிச்சினந்தனர். இது மாத்திரமா? விடுவிக்கப்பட்ட புலிப் போராளிகளுக்கு பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டதை அலசோ அலசென்று அலசி விளாசித்தள்ளினார்கள். யார் இந்த பரிசுப் பொதிகளைக் கொடுத்தது? கொடுத்தது முன்னேற்பாடா? அப்பப்பா தென்னிலங்கைப் பத்திரிகைகள் இந்த நட்பு வெளிப்பாட்டை முட்டிமோதி எள்ளிநகையாடியது. இந்த நிலைப்பாடு சமாதான விரைவு நகர்வை பாதிக்காதா? நிச்சயமாக ஏதோ ஒரு விதத்தில் நல்லெண்ணத்தை பாதிக்கத்தான் செய்கின்றது.

"சமாதானம்" என்ற இலக்கை நோக்கி பிரதமர் ரணில் செய்யும் நடவடிக்கைகளை மாண்பு மிகு ஜனாதிபதி எப்படிப்பார்க்கின்றார் என்பது பெரும் சர்ச்சைக்குள்ளாகி வருகின்றது. ஜனாதிபதி தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காட்டுகின்றாரா என்று கூட விவாதிக்கப்படுகின்றது. ஜனாதிபதி உரையாற்றிய கூட்டமொன்றில் திடீரென்று குண்டு ஒன்றினை வீசி எறிந்தார். சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் தனது பிள்ளையின் பாடசாலை அனுமதிக்காக அப்போது கல்வி மந்திரியாக இருந்த ரணில் அவர்கள் இருபந்தைந்தாயிரம் ரூபா இலஞ்சம் கேட்டார் என்று போட்டார் போடொன்று! பிரதமர் ரணில் "Mr. Clean" என்ற புகழ் பெற்றவர். அவருக்கா இந்த சேற்று அடி?" பத்திரிகைகள் பரபரப்பாக விமர்சிக்கத் தொடங்கின. ஆனால் ஜனாதிபதி அப்படி குற்றம் சாட்டவில்லை என்று அறிக்கைவிட்டு எறிகுண்டை புஷ்வாணமாக்கினார். "கூடி வாழ்தல்" அதாவது *Cohabitation* என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க பிரதமர் ரணில் பெரிதும் முயற்சிக்கின்றார். இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது இன்னமும் தெளிவாகவில்லை. சாத்தியமாகாத நிலையில் முறுகல் நிலை உச்சமடைந்து தேவையற்ற அரசியல் விளைவுகளைத் தோற்றுவிக்கும். இப்படிப்பட்ட ஒரு தளம்பல் நிலையில் யாப்பின் 19வது திருத்தம் பற்றியும் பலவாறான கருத்துக்கள் கூறப்படுகின்றன. அரசியல் இலாபம் பெற ஜனதா விமுக்திப் பெரமுனை பெரிதும் முயற்சிக்கின்றது. பல கண்டனப் பேரணிகளை அது தொடர்ந்து நடாத்துகின்றது. சிலவேளை அவை இனக்குரோதம் கொண்டவையாக மாறிவிடுகின்றன. "தமிழ் மக்கள்" மீது இன விரோதத்தையும் குரோதத்தையும் தூண்டுவதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு சாவுமணி அடிக்க அக்கட்சி முயற்சி செய்வது வேதனைக்குரியது தான்.

பாரதிகண்ட புதுமைப் பெண்களை படைத்திடும் பெரும் பணியில் புலிகளின் பெண் போராளிகள் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். கிளிநொச்சியில் மகளிர் எழுச்சி நாள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டதும் குறிப்பிடத்தக்கதாகும். பெண் போராளிகள் படையணி செய்த நடையணி பத்திரிகைகள் எல்லாவற்றிலும் புகைப்படங்களாக வந்து கலக்கின. புதியதோர் உலகைப் படைப்போம் என்று மகளிர் சீறியெழுந்தது போல் அக்காட்சிகள் காணப்பட்டன. உண்மையில் தமிழ் யுவதிகள் புரட்சிப் பெண்களாக மாறுவதற்கான பல அறிகுறிகள் இந்த மகாநாட்டில் காணப்பட்டது. ஆயினும் "சீதனம்" எனும் கொடும் பேயினை இவர்கள் எப்படி விரட்டி அடிக்கப்போகிறார்கள் என்பதுதான் பலரின் எண்ணங்களில், பேச்சுக்களில் காணப்பட்டது.

பொதுவான கண்ணோட்டத்தில் சமாதானம் எல்லோராலும் விரும்பப்படுகின்றது. ஆனால் அதற்கு தமிழினம் விலை கொடுக்க வேண்டுமா? நெடுந்தீவிற்கு அரசியல் பிரசாரம் செய்யச் சென்ற புலி அரசியல் பொறுப்பாளர் பாப்பாவும் குழுவினரும் தடுத்து மறிக்கப்பட்டது கவனிக்கப்பட வேண்டும். பரவலாக இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் கவனிக்கப்பட வேண்டியவையே. ஏனென்றால் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்ட இராணுவ வீரர்களை விடுதலை, செய்யக்கோரி திருமலை ஹர்த்தாலும் வீதி மறிப்பும் பெரும்பான்மையின மக்களால் செய்யப்பட்டது. ஆனால் அதன் பின் தமிழ் இளைஞர்கள் திருமலையில் நடத்திய ஹர்த்தால் வெற்றி பெற்றதை சகிக்க முடியாத அவர்கள் பல்வேறு இடங்களில் தமிழ் இளைஞர்களைத் தாக்கியது விசனத்துக்குரியது. இத்தகைய சம்பவங்களை நடைபெறாமல் தடுக்க முடியுமா?

தமிழினம் பல்வேறு சம்பவங்களைக் கண்டு கலங்கினாலும் நல்லதொரு விடிவு வரும் என்று நம்பிக்கையுடன் காணப்படுகின்றது.



-சுடர் இ. மகேந்திரன்
கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர். யாழ். உதயன் பத்திரிகையில் கடமையாற்றும் இவர் 'சுடர்' பத்திரிகையின் ஆசிரியர் ஆவார்.

“நீங்கள் தூங்கும் போதும்
நாங்கள் விழித்திருக்கிறோம்”



கனேடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

உலகின் முதலாவது 24 மணி நேரத் தனித் தமிழ் ஒலிபரப்பு

CTBC


**416.429.2822**

**Fax: 416.429.2899**

**www.ctbc.com**

ஓம் சாயிராம்

# ஜெயசாயி நகை மாளிகை



**Best Selection**
**Best Quality**
**Best Price**

Head Office:
3601 Lawrence Ave. East, Units 14&12, Scarborough, ON, Canada
**Tel: 416.431.1536,**
**Fax: 416.431.7712**

Branch
2580 Sheppard Ave., Unit 45, Newin Centre, Mississauga, Canada
**Tel: 905.270.1558,**
**Fax: 905.270.1553**

எமது புதிய கிளை யாழ். நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது
www.jayasaji.com